கனடாவின் மூத்த தமிழ் இதழ்

# விளம்பரம்

VLAMBARAM™

416-282-8059

E-mail: vlambaram@sympatico.ca

416-282-4978

www.vlambaram.com

www.tamilvanakkam.com







நதி 25 | பாலம் 15 | சமூக முன்னேற்றப்பத்திரிகை | மாதமிருமுறை | இலவசம் | AUGUST 01, 2015

# இலங்கை நாடாளுமன்ற தேர்தல்!

இலங்கை நாடாளுமன்ற தேர்தல் எதிர்வரும் 2015 ஒகஸ்ட் 17இல் நடைபெற உள்ளது. இத்தேர்தலில் மக்கள் 225 நாடாளுமன்ற உறுப்பினர்களை தெரிவு செய்யவுள்ளனர். 22 தேர்தல் மாவட்டத்திலும் இருந்து விகிதாசார முறையில் 196 உறுப்பினர்களும், நாடு முழுவதும் கட்சிகள் பெற்ற வாக்குகளின் விகிதாசார முறையில் மிகுதி 29 உறுப்பினர்களும் தெரிவு செய்யப்படவுள்ளனர். இம்முறை தேர்தலில் வாக்களிக்க 15,044,490 பேர் தகுதி பெற்றுள்ளனர். தெரிவுசெய்யப்படும் உறுப்பினர்களை கொண்ட புதிய நாடாளுமன்றம் 2015 செப்ரெம்பர் 01இல் பதவி ஏற்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. நியமனப்பத்திரம் தாக்கல் செய்வது 2015 யூலை 06ஆம் திகதியில் இருந்து 2015 யூலை 13ஆம் திகதிவரை நடைபெற்றது. இலங்கையில் உள்ள பதிவு செய்யப்பட்ட கட்சிகளில் 21இலிருந்து 3,653 பேரும் மற்றும் 201 சுயேட்சை குழுக்களாக 2,498 பேருமாக மொத்தமாக 6,151 வேட்பாளர்கள் நியமனப் பத்திரம் தாக்கல் செய்துள்ளனர். நியமனப்பத்திர தாக்கல்களில் ஏற்பட்ட தவறுகளால் பதிவு செய்யப்பட்ட 12 கட்சிகளினதும் 24 சுயேட்சைக் குழுக்களினதும் நியமனப்பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளப்படவில்லை. இலங்கையில் பதிவு செய்யப்பட்ட கட்சிகள் மொத்தமாக 64 உண்டு என்பது குறிப்பிடத்தக்கது.

இதற்கு முன்னர் 2010இல் நடைபெற்ற தேர்தலில் சிறீலங்கா சுதந்திரக்கட்சி, இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் மற்றும் அகில இலங்கை முஸ்லீம் காங்கிரஸ் உட்பட 10இக்கும் மேற்பட்ட அரசியல் கட்சிகளை கொண்ட UPFA என அழைக்கப்பட்ட ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி 144 ஆசனங்களை பெற்றது. ஐக்கிய தேசியக் கட்சி, சிறீலங்கா முஸ்லீம் காங்கிரஸ் உட்பட சில அரசியல் கட்சிகளைக் கொண்ட UNF என அழைக்கப்பட்ட ஐக்கிய தேசிய முன்னணி 60 ஆசனங்களை பெற்றது. இலங்கை தமிழரசுக்கட்சி, TELO மற்றும் EPRLF போன்ற தமிழ் அரசியல் கட்சிகளை கொண்ட TNA எனப்படும் தமிழ் தேசிய கூட்டமைப்பு 14 ஆசனங்களை பெற்றது. ஏனைய 7 ஆசனங்களையும் ஜனதா விமுக்தி பெரமுனையுடன் சேர்ந்த அரசியல் கட்சிகளை கொண்ட DNA எனப்படும் ஜனநாயக தேசிய கூட்டணி பெற்றது.

இம்முறை நடைபெற இருக்கும் தேர்தலில் UPFA 22 தேர்தல் மாவட்டங்களிலும் நியமனப்பத்திரங்களை தாக்கல் செய்துள்ளது. UNFஇல் இருந்து ஐக்கிய தேசியக் கட்சி பிரிந்து தமிழ் முற்போக்கு கூட்டணி (TPA), ஜாதிக ஹெல உறுமய (JHU) மற்றும் சிறீலங்கா முஸ்லீம் காங்கிரஸ் (SLMC) போன்ற கட்சிகளுடன் சேர்ந்து UNFGG என அழைக்கப்படும் நல்லாட்சிக்கான ஐக்கிய தேசிய முன்னணி என்ற பெயரில் 22 தேர்தல் மாவட்டங்களிலும் நியமனப்பத்திரங்களை தாக்கல் செய்துள்ளது. இவற்றைவிட ஜனதா விமுக்கி பெரமுனையும் (JVP) தனியே 22 தேர்தல் மாவட்டங்களிலும் நியமனப்பத்திரங்களை தாக்கல் செய்துள்ளது.




தமிழ் தேசிய கூட்டமைப்பு வடக்கு கிழக்கில் உள்ள ஐந்து மாவட்டங்களிலும் நியமனப்பத்திரங்களை தாக்கல் செய்துள்ளது. இந்த ஐந்து மாவட்டங்களிலும் இருந்து விகிதாசார முறைப்படி 29 உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படுவர். தமிழ் தேசிய கூட்டமைப்பின் வேட்பாளர் பட்டியலில் இலங்கை தமிழரசுக் கட்சியை சேர்ந்த 23 பேரும், EPRLFஐ சேர்ந்த 8 பேரும், TELOஐ சேர்ந்த 8 பேரும் மற்றும் PLOTE ஐ சேர்ந்த 5 பேருமாக 44 வேட்பாளர்கள் உள்ளனர். இவர்கள் இலங்கை தமிழரசுக் கட்சி என்ற பெயரில் நியமன பத்திரங்களை தாக்கல் செய்துள்ளனர். தமிழ் தேசிய மக்கள் முன்னணி யாழ்ப்பாணம், வன்னி, திருகோணமலை மற்றும் திகாமடுகல மாவட்டங்களில் தமிழ் காங்கிரஸ் கட்சியின் பெயரில் நியமனப் பத்திரங்களை தாக்கல் செய்துள்ளனர். ஜனநாயக பேரணிகளின் அமைப்பும் சுயேட்சை குழுவாக யாழ்பாண மாவட்டத்தில் நியமனப்பத்திரங்களை தாக்கல் செய்துள்ளது.

வடக்கு கிழக்கில் உள்ள ஐந்து மாவட்டங்களிலும் விகிதாசார முறையில் தெரிவு செய்யப்படும் 29 உறுப்பினர்களின் விபரமும் போட்டியிடும் வேட்பாளர்களின் எண்ணிக்கையும் இங்கே தரப்பட்டுள்ளது.

தொடர்ச்சி 06ஆம் பக்கம்



















HOMES *COMMERCIAL*INVESTMENTS
Audley & Taunton
379k
3 bm 3 wsrm home
Woodbine/hwy7
1100/- rent all included
Cafetaria
Roseland/thickson
4 bm 3 wsrm
Kingston Rd/Lawrence
399k
3bm 4wm Home
Adjala Township
20 Acres
Vacant land
scarborough
214k
2 bm 2 wsrm condo apt
14 years of service
Pat Pushpakanthan
Real Estate Broker
COMMERCIAL & RESIDENTIAL
416-894-1187
COMMISSION NEGOTIABLE GUARANTEED SALE
Century 21 BROKERAGE
PAT WILL BEAT ANY DEAL*!!
Hall of Famer
80 Corporate Dr. Suite 208
Toronto M1H3G5
416-290 1200


Allstate
You're in good hands.
Allstate Insurance Company Of Canada
Home & Auto Insurance
வீடு, வாகன காப்புறுதி
Suren Navaratnarajah
(Agent)
Cell: 416.520.6916
E-mail: snavaratnarajah@allstate.ca


COTTAGE
FOR RENT
Beautiful waterfront cottage with a capacity of 12 people.
80km away from Scarborough.
Fishing boat and pedal boat is available.
Murali - 416-569-4065
Ganesh - 416-768-8169

# விளையாட்டுத்தகவல்

பான் அமெரிக்கன் விளையாட்டுக்கள் 2015 யூலை 26இல் நடைபெற்ற கோலாகலமான நிறைவு விழாவுடன் முடிவடைந்தன. இவ்விளையாட்டுக்களில் 78 தங்கப்பதக்கங்கள் உட்பட 217 பதக்கங்களைப் பெற்று கனடா இரண்டாவது இடத்திற்கு வந்தது. 103 தங்கப்பதக்கங்கள் உட்பட 265 பதக்கங்களைப் பெற்று அமெரிக்கா முதலாவது இடத்தை பெற்றுள்ளது.

மார்க்கத்தை சேர்ந்த 20 வயது Andre De Grasse 100 மீட்டர் ஓட்டப்போட்டியில் 10.05 செக்கனில் 100 மீட்டரை ஓடி முடித்து தங்கப்பதக்கத்தை பெற்றார். இவர் 200 மீட்டர் ஓட்டப்போட்டியிலும் 19.88 செக்கனில் 200 மீட்டரை ஓடி முடித்து தங்கப்பதக்கத்தை தனதாக்கி கொண்டார்.

பராபான் - அமெரிக்கன் விளையாட்டுக்கள் ரொறன்ரோவில் 2015 ஓகஸ்ட் 07ம் திகதியில் இருந்து 2015 ஓகஸ்ட் 15ம் திகதி வரை நடைபெற உள்ளன. இங்கு நடைபெறவுள்ள 15 விளையாட்டுக்களிலும் 1,560 விளையாட்டு வீரர்கள் பங்குபற்ற உள்ளனர். இவர்கள் ஏதோ ஒரு விதத்தில் இயலாமை உடையவர்களாக இருப்பர். இம்முறை ரொறன்ரோவில் நடைபெறும் இந்த விளையாட்டுக்கள் 8ஆவது பராபான் - அமெரிக்கன் விளையாட்டு போட்டி ஆகும்.




பான் அம் 100 மீற்றர், 200 மீற்றர் ஓட்டப்போட்டிகளிகளில் தங்கம் வென்ற கனேடியர் Andre De Grasse

| Rank | Country | Gold | Silver | Bronze | Total |
|---|---|---|---|---|---|
| 1 | United States | 103 | 81 | 81 | 265 |
| 2 | Canada | 78 | 69 | 70 | 217 |
| 3 | Brazil | 41 | 40 | 60 | 141 |
| 4 | Cuba | 36 | 27 | 34 | 97 |
| 5 | Colombia | 27 | 14 | 31 | 72 |
| 6 | Mexico | 22 | 30 | 43 | 95 |
| 7 | Argentina | 15 | 29 | 31 | 75 |
| 8 | Venezuela | 8 | 22 | 20 | 50 |
| 9 | Ecuador | 7 | 9 | 16 | 32 |
| 10 | Guatemala | 6 | 1 | 3 | 10 |
| 11 | Chile | 5 | 6 | 18 | 29 |
| 12 | Peru | 4 | 4 | 6 | 14 |
| 13 | Dominican Rep. | 3 | 11 | 10 | 24 |
| 14 | Jamaica | 3 | 4 | 2 | 9 |
| 15 | Trinidad&Tobago | 3 | 3 | 2 | 8 |
| 16 | Bahamas | 2 | 2 | 2 | 6 |
| 17 | Puerto Rico | 1 | 1 | 13 | 15 |
| 18 | Uruguay | 1 | 1 | 3 | 5 |
| 19 | Saint Lucia | 1 | 0 | 0 | 1 |
| 20 | Barbados | 0 | 1 | 2 | 3 |







PRE CONSTRUCTION CONDO DOWNTOWN
NOW SELLING
WELCOME TO THE START OF SOMETHING NEW!
Register Now!
THE KIP DISTRICT One
158, Front St, Exclusive V.I.P
Accece Price Stating
From $259,900
158, Front St, Dundas / Jarvis
Close to
Ryerson University.
COTTAGE FOR RENT
Beautiful waterfront Cottage with a capacity of 15 people.
80Km away from Scarborough (15 Minute)
Anton Jeeva -416.575.5055

# மோட்கேஜ் & லைன் ஒப் கிரெடிட்

நல்ல ரேட்ல மோட்கேஜ், லைன் ஒப் கிரெடிட், ரீபைனான்ஸ், 2வது, 3வது மோட்கேஜ், பாங்க்ரப்சி நிலையில் மோட்கேஜ், எல்லா கடனையும் ஒரே பேமென்டாக்க, வீடு வாங்க, விற்க, வாடகைக்கு விட அல்லது பெற்றுக்கொள்ள

மற்றும் எதுவாக இருந்தாலும்

பவர் ஒப் சேல் பிரச்சினையா ?



## மோட்கேஜ் கிளினிக்

உங்களுக்கு கைகொடுக்க காத்திருக்கிறது.

416-613-2788 / 416-816-9011

திங்கள்—வெள்ளி (call for appointment)

வோக் இன் - சனிக்கிழமை 9.00 - 5.00

எமது முகவரி

1504 Markham Rd, Toronto, ON, M1B 2V9

(Markham & HWY 401)





சுதேசன் பத்மநாதன் M.Com, B.Com

Mortgage Agent / Real Estate Sales Representative

FSCO Lic # M 12001741

**Cell : 647-861-8240**

ஜெ(Jey) இராசதுரை MBA, BBA (Hon), AMP

Team Leader / Agent / Real Estate Sales Representative

FSCO Lic # M 09001428

**Cell : 416-624-4843**

Scarborough- Staines/Finch
4BR, 4WR, Detached
Double Garage, Corner Lot

OPEN HOUSE
SAT & SUN 03-05 PM



**HOME FOR SALE**

அனைத்து ரியல் எஸ்டேட் தேவைகளுக்கும்

Scarborough- Warden / Finch
3BR, 2WR
Condo

OPEN HOUSE
SAT & SUN 02-04 PM



MORTGAGE ALLIANCE

RIGHTBROKER = RIGHTMORTGAGE

Lic # 10530

Corporate Office :
2005 Sheppard Ave E. Suite 200, Toronto, ON, M2J 5B4
Toll Free : 1-877-366-3487

RIGHT AT HOME REALTY INC. BROKERAGE

#1 Brokerage in Toronto*

Brockerage Office :
112-895, Don Mills Rd, Toronto, ON, M3C 1WC
Office Phone : 416-391-3232

# இலங்கை...

01ஆம் பக்கத்தொடர்ச்சி

| தேர்தல் மாவட்டம் | உறுப்பினர்கள் | வேட்பாளர்கள் |
|---|---|---|
| யாழ்ப்பாணம் | 7 | 210 |
| வன்னி | 6 | 252 |
| மட்டக்களப்பு | 5 | 368 |
| திருகோணமலை | 4 | 147 |
| திகாமடுல்ல | 7 | 310 |

இங்கு யாழ்ப்பாண மாவட்டம் எனப்படுவது ஊர்காவற்துறை, வட்டுக்கோட்டை, காங்கேசன்துறை, மானிப்பாய், கோப்பாய், உடுப்பிட்டி, பருத்தித்துறை, சாவகச்சேரி, நல்லூர், யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி உட்பட 11 தொகுதிகளைக் கொண்டது. வன்னி மாவட்டம் மன்னார், வவுனியா மற்றும் முல்லைத்தீவு ஆகிய 3 தொகுதி களைக் கொண்டது. மட்டக்களப்பு மாவட்டம் கல்குடா, மட்டக்களப்பு மற்றும் பட்டிருப்பு ஆகிய 3 தொகுதிகளை கொண்டது. திருகோணமலை மாவட்டம் சேருவல, திருகோணமலை மற்றும் மூதூர் ஆகிய 3 தொகுதிகளை கொண்டது. திகாமடுல்ல மாவட்டம் அம்பாறை, சம்மாந்துறை, கல்முனை மற்றும் பொத்துவில் உட்பட 4 தொகுதிகளை கொண்டது.

இம்முறை யாழ்ப்பாண மாவட்டத்தில் 529,239 பேரும் வன்னி மாவட்டத்திலும் 253,058 பேரும், மட்டக்களப்பு மாவட்டத்தில் 365,167 பேரும், திருகோணமலை மாவட்டத்தில் 256,852 பேரும் மற்றும் திகாமடுல்ல மாவட்டத்தில் 465,757 பேருமாக வடக்கு கிழக்கு மாகாணங்களில் மொத்தம் 1,870,073 பேர் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளனர். இது நாடு முழுவதும் வாக்களிக்க தகுதி பெற்றவர்களில் 12.43% ஆகும்.

ஓகஸ்ற் 17ஆம் திகதி நடைபெறவிருக்கும் நாடாளுமன்ற பொதுத்தேர்தல் தொடர்பில் வட மாகாணசபை முதலமைச்சர் சி.விக்கினேஸ்வரன் அவர்கள் செய்தி ஒன்றினை வெளியிட்டுள்ளார். அதில் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

மக்களுக்காக அர்ப்பணிப்புடன் பணியாற்று பவர்களை எதிர்வரும் பொதுத்தேர்தலில் எம்நாட்டில் வாழும் எமது மக்கள் தெரிவு செய்யவேண்டும் என்பது எனது எதிர்பார்ப்பு. தமிழ்ப் பிரதிநிதிகளைப் பொறுத்தவரையில் வள்ளுவன் வாக்கிற்கிணங்க, நேர்மையான அரசியல், கொள்கையில் உறுதி, மக்களுக்காக அர்ப்பணிப்புடன் பணியாற்றக் கூடிய மனோபாவம், தூர நோக்குப் பார்வை, எந்தக் கட்டத்திலும் எந்தக் காரணத்திற் காகவும் விலைபோகாத மனோதிடம் கொண்ட அரசியல்வாதிகளே எமக்குத் தேவைப்படுகின்றார்கள். அத்துடன், தமிழர்களின் தனித்துவத்தை உறுதிப்படுத்தி, அவர்களின் சுயநிர்ணய உரிமையை உறுதிப்படுத்தி, எமது மக்களுக்கான உரிமையையும் நீதியையும் பெற்றுக் கொள்ளக் கூடியவர்களே எமது மண்ணுக்கும் மக்களுக்குமாக இன்றைய காலத்தில் தேவையாக இருக்கின்றார்கள். அதனை உணர்ந்து அவர்கள் தமக்குள்ள வரலாற்றுப் பொறுப்பை, தார்மீகக் கடமையைச் சரிவரச் செய்வதற்கு நான் துணையாக நிற்பேன் என்று கூறினார்.



இவ்வருடத் தொடக்கத்தில் எம்மக்கள் புதியதொரு சகாப்தத்தை உருவாக்க முன்வந்தனர். நல்லாட்சி, நீதி, நியாயம், சமத்துவம், சமாதானம், சகலருக்கும் பாதுகாப்பு போன்ற கொள்கைகளை முன் வைத்து புதியதொரு எதிர்காலத்தைக் கட்டி எழுப்ப முன்வந்தார்கள். அவ்வாறான மக்களின் அபிலாஷைகளை, எதிர்பார்ப்புக் களை நடைமுறைப்படுத்த வேண்டிய கடப்பாடு சகல அரசியல் வாதிகளுக்கும், சகல நிறுவனத் தலைமைத்துவங்களுக்கும், ஊடகங்களுக்கும், குடிசனசங்கங்களுக்கும் இருக்கின்றன என்பதை நாங்கள் மறக்கக் கூடாது. தனிப்பட்ட மனித குழுக்களின் நன்மைகளுக்காக மட்டும் நடந்து கொள்ளாது, மற்றைய மக்கட் கூட்டங்களுக்குக் கெடுதி விளைவிக்காது, நல்லாட்சியை ஏற்படுத்தக் கூடிய சக்திகளை இனங்கண்டு ஜனநாயக ரீதியில் நாம் யாவருஞ்சேர்ந்து அச்சக்திகளுக்குத் துணையாக நிற்பதற்கு வருந்தேர்தலானது களம் அமைத்துக் கொடுக்கும் என்று நம்புகின்றேன். எமது தேர்தல் வாக்குறுதி களும் விஞ்ஞாபனங்களும் இந்நாட்டின் கூடிய மக்களின் நலனைப் பேணும் விதமாக அமைய வேண்டும். அப்படி நடந்து கொண்டால்தான் வருங்காலச் சந்ததியினர் எம்மை நன்றிக் கண்களுடன் பார்ப்பார்கள்.

எது எவ்வாறு நடப்பினும் ஜனநாயக அத்திவாரத்தை இட்டு அதன் மீது எமது வருங்காலத்தை நம் நாட்டில் ஏற்படுத்த சர்வதேச சமூகமானது துணையாக நிற்கும் என்று எதிர்பார்க்கின்றோம். எமது மக்களின் எதிர்பார்ப்புக்களையும் அபிலாஷைகளையும் பூர்த்திசெய்யும் விதத்தில் சர்வதேச சமூகம் எம்முடன் கைகோர்த்துச் செல்லும் என்றும் எதிர்பார்க்கின்றோம்.



# தென்னிலங்கையில் எதிர்ப்பிற்குள்ளாகி வரும் கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனம்!

நடைபெறவுள்ள நாடாளுமன்ற தேர்தல் தொடர்பில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு வெளியிட்டுள்ள தேர்தல் விஞ்ஞாபனத்திற்கு தென்னிலங்கையில் கடும் எதிர்ப்புகள் கிளம்பியுள்ளன. அரசியல்வாதிகள் மட்டுமல் லாமல் கொழும்பிலிருந்து வெளிவருகின்ற சிங்கள, ஆங்கில ஊடகங்களும் இது குறித்த விமர்சனங்களையும் எதிரான கருத்துக்களையும் வெளியிட்டு வருகின்றன. விடுதலைப்புலிகள் இயக்கம் தமிழீழம் என்ற பெயரில் தனிநாடு கேட்டு போராட்டம் நடத்தியமைக்கும் தமிழ் தேசியக் கூட்டமைப்பினரின் கொள்கைக்கும் எதுவித வித்தியாசமும் இல்லை என்பதை குறித்த தேர்தல் விஞ்ஞாபனம் தெளிவு படுத்தியுள்ளதாக அந்த ஊடகங்கள் செய்திகளையும் பத்திகளையும் பிரசுரித்து வருகின்றன.

மஹிந்த ராஜபக்ஸ தரப்பினர் இதனை தங்களது தேர்தல் பிரச்சாரத்திற்கு வசதியாக பயன்படுத்தி வருகின்றனர். இது நாட்டை பிளவு படுத்தும் நோக்கிலானது எனவும், இதற்கு எவ்விதத்திலும் இடமளிக் கப்போதில்லை என்றும் மஹிந்த ராஜபக்ஸ சிங்கள மக்கள் மத்தியில் வழமை போலவே பிரச்சாரம் செய்ய ஆரம்பித்து விட்டார். மஹிந்தவின் ஆதரவாளர்களில் ஒருவரான டலஸ் அழகப்பெரும கூட்டமைப்பின் இந்த தேர்தல் விஞ்ஞாபனம் 1976ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட வட்டுக்கோட்டை பிரகடனத்திற்கு நிகரானது என வர்ணித்துள்ளார். இது நல்லிணக் கத்துக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் என்றும் பிரிவி னைவாதத்தைத் தூண்டும் என்றும் அவர் கூறுகின்றார்.

ஐக்கிய தேசியக் கட்சியுடன் ஏற்படுத்தப் பட்டுள்ள புரிந்துணர்வின் அடிப்படையில் இந்த தேர்தல் விஞ்ஞாபனத்தை தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் தயாரித்துள்ளார்கள் என்றும் அவர் கூறுகின்றார். இதன் மூலம் இன்று தேர்தலில் பிரதான போட்டியாளர் களாவிருக்கும் ஐக்கிய தேசியக் கட்சியினரை சிங்கள மக்கள் மத்தியில் துரோகிகளாக சித்தரிக்க அவர் முனைகின்றார். இவையெல்லாம் சர்வதேசத் தின்

## - விகிர்தன் -

பின்னணியிலேயே நடைபெறுவதாகவும் அவர் கூறுகின்றார். இவ்வாறு கூறுவதன் மூலம் சர்வதேசமும் சிங்களவர்களுக்கு சதி செய்வதாக அவர் சொல்கின்றார். போரிலிருந்து நாட்டை மீட்டவரும், சர்வதேச சதிகளுக்கு இடமளிக்காதவருமான ஒரேயொரு தலைவர் மஹிந்த ராஜபக்ஸவே எனவும் அவர் தெரிவிக்கின்றார்.

இலங்கையில் கடந்த ஜனவரி மாதம் இடம் பெற்ற ஆட்சி மாற்றத்திற்காக செயற்பட்டு, மஹிந்தவை மீண்டும் அதிகாரத்திற்கு வரவிடக்கூடாது என்று கூறுகின்ற - தங்களை ஒரு முற்போக்காளராக காண்பிக்கின்ற ஜே.வி.பி கட்சியினரும் கூட்டமைப்பின் இந்த தேர்தல் விஞ்ஞாபனத்தை எதிர்க்கின்றனர். இலங்கைக்குள் சமஸ்டித் தீர்வுமுறை பொருந்தாது என்றும், அதன்மூலம் வடக்கு மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு கிடைக்கப் போவதில்லை என்றும் ஜே.வி.பி கூறுகின்றது. இந்த நாட்டில் தமிழர்கள், முஸ்லிம்கள், சிங்களவர்கள் என அனைவருக்குமே பிரச்சினைகள் இருக்கின் றன. அவற்றுக்கான தீர்வுகளைத் தனித் தனியே தேடுவது பொருத்தமாக அமையாது. அனைவரும் ஒன்றாக இணைந்து செயற்பட்டாலேயே பிரச்சினை கள் தீரும் என அக்கட்சி கூறுகின்றது. இதன் மூலம் தமிழர்கள் கோரும் சமஸ்டி அடிப்படையிலான தீர்வினை ஜே.வி.பி முற்றாகவே நிராகரிக்கின்றது. ஆனாலும், தமிழ் தேசியக் கூட்டமைப்பின் குறித்த தேர்தல் விஞ்ஞாபனத்தில் பிளவுபடாத நாட்டிற்குள் சமஸ்டி அடிப்படையிலான தீர்வு என்பதே வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

தமிழ்மக்கள் தனித் தேசிய இனம் - வடக்கு, கிழக்கு இணைந்த தமிழ், முஸ்லிம் தாயகப் பிரதேசம் - தேசிய இனம் என்ற வகையில் உரித்தான சுயநிர்ணய உரிமை - மற்றும், சமஸ்டி கட்டமைப்பின் கீழ் வடக்கு கிழக்குப் பிரதேசங்களில் வாழும் எந்தவொரு மக்கள் மீதும் முரண்பட்ட தாக்கத்தை ஏற்படுத்தாத அதிகாரப் பகிர்வு என்பவற்றை உள்ளடக்கியே தமிழ் தேசியக் கூட்டமைப்பின் இந்த தேர்தல் விஞ்ஞாபனம் தயாரிக்கப்பட்டுள்ளது.



ஒன்றுபட்ட நாட்டிற்குள், இலங்கையின் சகல தரப்பின் இணக்கத்திற்கும் அமைய அதிகபட்ச அதிகாரப் பகிர்வு மூலமே இனப் பிரச்சினைக்கான தீர்வு மேற்கொள்ளப்படும் என்று ரணில் விக்கிரமசிங்க தலைமை யிலான நல்லாட்சிக்கான ஐக்கிய தேசிய முன்னணியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. இந்த, அதிகாரப் பகிர்வு குறித்தே தமிழ் தேசியக் கூட்டமைப்பும் கூறுகின்றது. ஆனால், 'அதிகாரப் பகிர்வு' என்பதன் சரியான அர்த்தம் குறித்து கூட்டமைப்பின் விஞ்ஞாபனத்தில் தெளிவாக கூறப்பட்டுள்ளது. குறித்த அதிகாரப் பகிர்வு காணி, சட்டம்-ஒழுங்கு, சட்ட அமலாக்கம், தமிழ் மக்களின் பாதுகாப்பு என்பவற்றை உள்ளடக்கியதாக இருக்க வேண்டுமென் றும், சமூக பொருளாதார அபிவிருத்திக்கு உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் வளங்களைத் திரட்டிக் கொள்ளக் கூடிய தாகவும், நிதி அதிகாரம் கொண்டதாகவும் இருக்க வேண்டும் என்று அந்த விஞ்ஞாபனத்தில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 2012, 2013ஆம் ஆண்டுகளில் இலங்கைக்கு எதிராக நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களின் பரிந்துரைகளும், எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் வெளியிடப்படவுள்ள சர்வதேச அறிக்கையின் பரிந்துரைகளும், முழுமையாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்றும் அதில் வலியுறுத்தப்பட்டிருக் கின்றது. இதுவும் கூட தென்னிலங்கை தரப்பினருக்கு எரிச்சலை யூட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது. அத்துடன், வடக்கு, கிழக்குப் பகுதிகளில் இராணுவக் குறைப்பு, மக்களின் வாழ்வாதாரம், அடிப்படை வசதிகளுடன் கூடிய கௌரவமான மீள் குடியேற்றம், அரசியல் கைதிகளின் விடுதலை, காணாமல் போயுள்ளவர்கள் விவகாரத்திற்கு தீர்வு, அந்தக் குடும்பங்களின் துயரங்களைக் கையாளவும், அவர்கள் இயல்பு வாழ்க்கைக்குத் திரும்புவதற்கான பன்முகப்படுத்தப்பட்ட விமோசனத் திட்டங்கள் ஆகியவற்றின் தேவை குறித்தும் இந்தத் தேர்தல் அறிக்கையில் கூறப்பட்டிருக்கிறது. இவை அரசியல் தீர்விற்கு முன்னதாக மேற்கொள்ளப்பட வேண்டியவை என்பதை யாரும் மறுக்க முடியாது.

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் இந்த தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிடப் பட்டுள்ள பலவற்றை தெற்கின் அரசியல் வாதிகள் மட்டுமல்லாது ஊடகங்களும் விமர்சித்து வரும் நிலையில் வெளிநாட்டுத் தூதரகங்களும் தங்களிடம் விளக்கம் கேட்டுள்ளதாக தமிழ் தேசியக் கூட்டமைப் பின் ஊடகப் பேச்சாளர் சுரேஸ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளதோடு அதற்கான விளக்கங்களையும் ஊடகவிய லாளர்களிடம் அவர் தெளிவு படுத்தியுள்ளார்.

"தமிழ் மக்கள் இழந்து போன இறையாண்மையினை பெற்றுக்கொள்ள வேண்டுமென்பதற்காக தந்தை செல்வ நாயகத்தால், வட்டுக்கோட்டை தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. பின்னர் விடுதலைக்கான ஆயுதப் போராட்டம் தமிழ் இளைஞர்களால் ஆரம்பிக்கப்பட்டது. தமிழீழ விடுதலைப் புலிகள் மிக நீண்டகாலமாக போராடி வந்தார்கள். பலமான இராணுவ அமைப்பாக இருந்து போராடி வந்தார்கள். இந்தப் போராட்டங்கள் முடிவுக்கு கொண்டு வரப்பட்டதே தவிர, இனப்பிரச்சினை தீர்விற்கு கொண்டு வரப்படவில்லை. இதன் காரணமாகவே இனப் பிரச்சினைக்கான தீர்வினை தற்போது, தமிழ் தேசிய கூட்டமைப்பு மிகத் தெளிவாக இந்த தேர்தல் விஞ்ஞாபனத்தில் சொல்லியிருக் கின்றது. இதனையும் இந்த அரசாங்கம் செய்ய மறுக்குமாக இருந்தால், நிச்சயமாக தமிழ் மக்களுக்கு ஒரு சரியான தீர்விற்கு இந்திய அரசாங்கமும், உலக நாடுகளும் ஆதரவு வழங்க வேண்டும்" என அவர் விளக்கியுள்ளார்.

உண்மையில், தமிழ் மக்களுக்கு எவ்விதமான தீர்வினையும் வழங்க விரும்பாத, மாறி மாறி ஆட்சிக்கு வரும் அரசாங்கங்கள் 'அதிகாரப் பரவலாக்கம்', 'அதிகாரப் பகிர்வு' போன்ற வார்த்தை ஜாலங்களையே மேற்கொண்டு வருகின்றன. அவற்றின் உள்ளீடுகளாக என்ன இருக்கின்றதென்பதை அவர்கள் வெளிப்படுத்துவதில்லை. எனவே தமிழர் தரப்பில் தங்கள் நிலைப்பாட்டை தெளிவாக வெளிப்படுத்த வேண்டிய தேவை உள்ளது. அதனை ஏற்றுக்கொள்ள இலங்கை அரசாங்கம் மறுக்குமானால் சர்வதேசத்தின் தலையீட்டைக் கோருவதில் எந்தவிதமான தவறும் இல்லை.

APPLEMORE AUTOMOTIVE
உட்புற, வெளிப்புற திருத்த பராமரிப்பு வேலைகளுக்கு என்றும் உங்கள் மத்தியில்
ONTARIO'S DRIVE CLEAN
Accredited Test & Repair Facility
• Detailing
• Motor Shampoo
• Interior Shampoo
• Exterior Wash
• Waxing
• Repairs
• Safety Certification
• Overall Maintenance
• Under Coating
• Rust Proofing
416-285-4998
435 Midwest Road. Unit B5, Scarborough, ON. M1P 3A6
SPECIAL


# சிறுபான்மை சமூகங்களை சிக்கலுக்கு உள்ளாக்கியுள்ள சம்பவங்கள்!

## தாயகமடல்

தமிழ் மக்களுக்கு அரசியல் ரீதியாக எவ்விதமான தீர்வுகளையும் வழங்க விரும்பாத இலங்கையின் ஆளும் தரப்பினர் போரின் பின்னர் அவர்கள் இயல்பு வாழ்க்கைக்கு மீள்வதையும் தடுப்பதில் முனைப்புக் காட்டி வருகின்றனர். ஆயுதப் போராட்டம் முடிவிற்கு கொண்டுவரப்பட்டு ஆறு வருடங்கள் கழிந்துவிட்ட போதும், இன்றும் இலங்கையின் வடக்கு கிழக்கில் இராணுவ நெருக்குவாரம் நீக்கப்படவில்லை. அப்பிரதேசங்களில் முற்றுமுழுதான சிவில் நிர்வாகம் ஏற்படுத்தப்படவில்லை. தேசியப் பாதுகாப்பு, பிரிவினைவாதத்தை தடுக்கும் நடவடிக்கை, மீண்டும் புலிகள் மீளுருவாக முயற்சி என பல்வேறு காரணங்களை அவசியமின்றி கூறிக்கொண்டு தமிழ் மக்கள் இயல்பு வாழ்விற்கு திரும்ப முடியாதபடி தடைகள் இடப்படுகின்றன.

அண்மைய நாட்களில் நடைபெற்றுள்ள சில சம்பவங்கள் தமிழ் மக்களுக்கு கவலையளிப்பதாகவும், ஆக்கிரமிப்பாளர்களுக்கு வாய்ப்பளிக்கின்ற விதமாகவும் அமைந்துள்ளன. குறிப்பாக, இரண்டு சம்பவங்கள் இலங்கையில் அடக்குமுறைக்குள்ளாகியுள்ள சிறுபான்மை மக்களுக்கு சிக்கலை ஏற்படுத்துவதாக அமைந்துள்ளது. இவை இலங்கைக்கு வெளியே இடம்பெற்ற சம்பவங்களாகும். இதில் ஒன்று- தமிழகத்தில் 75 சயனைட் குப்பிகளுடன் மூவர் கைது செய்யப்பட்ட சம்பவம் குறித்து வெளிவந்துள்ள தகவல்கள். செய்மதி தொலைபேசிகள், புவிநிலைகாட்டி கருவிகள், 300 கிராம் சயனைட் என்பன அவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. விசாரணைகளில் குறித்த மூவரில் ஒருவர் இலங்கை தமிழர் என்றும் அவரது பெயர் கிருஸ்ணகுமார் (வயது 30), எனவும் கூறப்படுகின்றது. இவர் திருச்சி கே.கே.நகரில் அகதி முகாமிற்கு வெளியே வாழும் அகதியாக இருந்தவர் எனவும், 1990ஆம் ஆண்டு முதல் விடுதலைப்புலிகள் இயக்கத்தில் தீவிரமாக செயல்பட்டு வந்தவர் என்றும். விடுதலைப் புலிகள் இயக்க தலைவரான பிரபாகரனிடம் உதவியாளராக பணியாற்றி வந்தவர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இலங்கையில் நடந்த இறுதிக்கட்ட போரின் போது



அங்கிருந்து தப்பி அகதியாக தமிழகம் இவர் வந்துள்ளார் எனவும் கூறப்பட்டுள்ளது. இவர் சயனைட் குப்பிகளுடனும் வேறு சில பொருட்களுடனும் இலங்கை திரும்ப தயாராக இருந்த நிலையிலேயே பிடிபட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. கைது செய்யப்பட்ட இந்த மூன்று சந்தேக நபர்களின் பின்னணியில் பாரிய சதித் திட்டம் இருக்கலாம் என இந்திய பொலிஸார் கூறுகின்றனர்.

கைது செய்யப்பட்ட இலங்கையர் உள்ளிட்ட மூவரிடமும் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் இதுவரை அவர்கள் எவ்வித தகவல்களையும் வெளியிடவில்லை எனவும் விடுதலைப்புலிகள் முன்னாள் விடுதலைப்புலி உறுப்பினர் என்று கூறப்படும் கிருஸ்ணகுமார் என்பவர் எதனையும் கூற மறுத்து வருவதாகவும் மேலும் செய்திகள் வெளியாகின்றன. அவர் ராமேஸ்வரம் ஊடாக இலங்கைக்கு திரும்பிச் செல்வதற்காக பலமுறை முயற்சித்துள்ளதாகவும் தமிழக பொலிஸார் மற்றும் புலனாய்வுத்துறையினரை மேற்கோள் காட்டி தமிழக ஊடகங்கள் செய்திகளை வெளியிட்டுள்ளன. தமிழக பத்திரிகைகள் செய்திகளை பரபரப்பான முறையில் வெளியிடுகின்றமை வழமையான தொரு விடயமே. இதில் எந்தளவு உண்மை உள்ளதென்பதை முறையான விசாரணைகள் நடத்தப்பட்ட பின்னரே கண்டுகொள்ள முடியும். ஆனால், இச்சம்பவம் குறித்து வெளிவரும் இவ்விதமான தகவல்கள் சிங்கள அரசியல்வாதிகளுக்கு சிறந்த வாய்ப்புகளை வழங்குகின்றது. சிங்கள மக்கள் மத்தியில் தமிழருக் கெதிரான இனவாத பிரச்சாரங்களை தேர்தல் சமயங்களில் மேற்கொள்ளும் வாய்ப்புக்களை விடவும், தமிழ் மக்கள் வாழும் பிரதேசங்களில் தொடர்ந்தும் இராணுவத்தினரை நிலைகொள்ளச் செய்வதற்கு இது ஏதுவாக அமைகின்றது.

இரண்டாவது சம்பவம்- இலங்கையில் வாழும் மற்றுமொரு சிறுபான்மை சமூகத்தினரான முஸ்லிம்களையும் அடக்கு முறைக்குள் தொடர்ந்தும் வைத்திருக்கும் வாய்ப்பினை சிங்கள கடும்போக்காளர்களுக்கு வழங்கியிருக்கின்றது. ஐ.எஸ்.ஐ.எஸ் அமைப்பில் இணைந்திருந்த இலங்கையைச் சேர்ந்த முஸ்லிம் ஒருவர் சிரியாவில் இடம்பெற்ற விமானத் தாக்குதலில் உயிரிழந்தமையும், அவர் தொடர்பில் இலங்கையிலிருந்து கிடைத்து வரும் தகவல்களும் முஸ்லிம் மக்களை அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது. கண்டி மாவட்டத்தின் கலேவல பிரதேசத்தைச் சேர்ந்த அபு சுராயா சயிலானி என்ற புனைபெயரைக் கொண்ட 37 வயதான நபரே ஐ.எஸ்.ஐ.எஸ் இயக்கத்தில் இணைந்து சிரிய அரசுக்கு எதிராக போராடியதாகவும், இவர் அமெரிக்க படைகள் மேற்கொண்ட விமான தாக்குதல்களில் கொல்லப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. குறித்த நபர் கொழும்பில் திருமணம் முடித்துள்ளதோடு அவருக்கு ஆறு குழந்தைகள் இருப்பதாகவும் குறித்த நபர் தற்காப்புக் கலையில் தேர்ச்சி பெற்றவரென்றும், பாகிஸ்தானின் இஸ்லாமாபாத் இஸ்லாம் பல்கலைக் கழகத்தில் எல்.எல்.பி. பட்டத்தைப் பெற்ற இவர் கலேவெல நகரில் உள்ள சர்வதேச பாடசாலை ஒன்றில் சுமார் இரண்டு வருடங்கள் அதிபராக கடமையாற்றியுள்ளார் எனவும், கடந்த 2014ம் ஆண்டு டிசம்பர் மாதம் இவர் மக்கா நகர் செல்வதாகக் கூறி அதிபர் பதவியில் இருந்து விலகிச் சென்றுள்ளார் என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது. அவர் அதிபராக பணியாற்றிய குறித்த சர்வதேச பாடசாலையில் இருந்து எந்தவித தடயங்கள், ஆவணங்களையும் பெறமுடியவில்லை. அனைத்தையும் அவர் அகற்றிச் சென்றுள்ளமை தெரியவந்துள்ளது. குறிப்பாக அவரது கையெழுத்து உள்ள ஒரு ஆவணம் கூட அப்பாடசாலையில் இல்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பிலான விசாரணைகள் பலமுனைகளில் நடைபெற்று வருகின்றன. பொலிஸாரும் புனாய்வுத் துறையினரும் அவரது குடும்ப அங்கத்தவர்கள், உறவினர்கள் நண்பர்கள் என அனைவரிடமும் விசாரணைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

கடந்த ஜனவரி மாதம் இலங்கையில் ஏற்பட்ட ஆட்சி மாற்றத்திற்கு தமிழ், முஸ்லிம் மக்களின் வாக்குகளே வழிசமைத்தது என்பது அனைவரும் அறிந்த விடயமே. இந்த ஆட்சி மாற்றத்தால் சிறுபான்மை மக்களுக்கு பாரிய நன்மைகள் ஏற்பட்டுள்ளதா என்கின்ற விமர்சனங்களும் இல்லாமலில்லை. ஆனால், கடந்த அரசாங்கத்தின் காலத்தில் இடம்பெற்று வந்த அச்சுறுத்தல்கள் தளர்வடைந்துள்ளது என்பதை ஒப்புக் கொள்ளவே வேண்டும். தமிழ் மக்களின் பிரதேசங்களில் முன்னர் இடம்பெற்று வந்த தாக்குதல்கள், அச்சுறுத்தல்கள் என்பன தற்போது பெரியளவில் நடைபெறுவதில்லை. தென்னிலங்கையில் முஸ்லிம் மக்களுக்கு ஏற்பட்ட அச்சநிலை, பள்ளிவாசல்கள் மீதான தாக்குதல்கள் என்பன இப்போது நடைபெறுவதில்லை. முஸ்லிம் மக்களுக்கு எதிராக பிக்குகளால் முன்னர் நடத்தப்பட்டு வந்த ஆர்ப்பாட்ட நடவடிக்கைகள் கூட இடம்பெறுவதில்லை.

**- ஆதித்தன் -**

சிறுபான்மை மக்களின் வாழ்க்கையில் ஏற்பட்டுள்ள இந்த சமுக நிலையை சிக்கலாக்குவதாகவே இலங்கைக்கு வெளியே நடைபெற்றுள்ள மேற்படி இரண்டு சம்பவங்களும் அமைந்துள்ளன. தமிழகத்தில் சயனைட்டுடன் கைதானதாக கூறப்படுகின்றவர்களின் விசாரணைகள் சரியான திசையில் நடைபெற வேண்டும். இதனை பரபரப்பாக பெருப்பித்து செய்தி வெளியிடும் தமிழக ஊடகங்களும் பொறுப்புடன் நடந்து கொள்ள வேண்டும். இதேபோன்று ஐ.எஸ். அமைப்பில் இணைந்து சிரியாவில் கொல்லப்பட்ட முஸ்லிம் நபர் தொடர்பில் இலங்கையில் நடைபெறும் விசாரணைகளும் முறையாக நடைபெற வேண்டும். சிறுபான்மை சமூகங்களை சிக்கலுக்குள்ளாக்கி அதில் குளிர்காய எத்தனிக்கும் சக்திகளுக்கு இடமளிக்கும் வகையில் சம்பவங்கள் இடம்பெறாமல் பார்த்துக் கொள்வதில் மைத்திரி அரசாங்கமும் அவதானத்துடன் நடந்து கொள்ள வேண்டும். சிறுபான்மையினரான தமிழ், முஸ்லிம் மக்களும் மிகுந்த எச்சரிக்கையுடன் இருக்க வேண்டிய காலகட்டம் இது.

விளம்பரம்
VLAMBARAM™

பதிப்பாளர்: ராஜா மகேந்திரன்
பத்திரிகை ஆசிரியர்: சத்தியா மகேந்திரன்
ஊடகப்பொறுப்பாளர்: விஜயபாலன்
தட்டச்சு: கலா
அலுவலக முகாமையாளர்: நிலானி
பதிப்பு: Canyon Press Inc.

Vlambaram Publications Inc.
GTA SQUARE, 5215 FINCH AVE. E.,
#201, TORONTO, ON M1S 0C2, CANADA
TEL: 416-282-8059 FAX: 416-282-4978
e-mail: Vlambaram@sympatico.ca
Web: www.vlambaram.com/www.tamilvanakkam.com

விளம்பரம் பத்திரிகை 'விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ் இங்' ஆல் வெளியிடப்படுகிறது. விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களே பொறுப்பாளர்கள். பதிப்புரிமை: 2004 விளம்பரம் பப்ளிகேஷன்ஸ் இங். விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களை முழுமையாகவோ, பகுதியாகவோ ஆசிரியரின் எழுத்து மூல அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.

LAW OFFICE
STEFANO FORTINI
B.A., LL.B., Barrister & Solicitor
3 Catherine Avenue,
Aurora, Ontario
L4G 1K4
Tel: 416.999.4376
Fax: 905.727.7017
Email: sfortini@rogers.com


$329,900
3 Bedrooms, 3 W Room
Main Floor Laundry With Garage Access, Open Living Room/Dining Room
$399,900
2 Bedrooms, 1 W Room
New Front Porch, Renovated Kitchen W/Granite Counter
$453,900
4 Bedrooms, 4 W Room
One Of Georgina's Finest Neighbourhoods 'The Fairgrounds'
$469,900
4 Bedrooms, 3 W Room
Family Room With Hardwood Floors And A Cozy Gas Fireplace
$530,000
4 Bedrooms, 3 W Room
Brand New Stainless Steel Appliances
$539,000
4 Bedrooms, 3 W Room
Brand New S/S Ge Stove, Stained Oak Staircase
$539,990
3 Bedrooms, 3 W Room
Spacious Kitchen With Island & Extended Height Upper Cabinets
$579,900
4 Bedrooms, 3 W Room
Separate Living,Dining & Family Room
$642,900
4 Bedrooms, 3 W Room
Side Entrance To Prof Finished Basement With Pot Lights
$669,800
4 Bedrooms, 3 W Room
Walkout To Stone Terrace, Abundance Of Natural Light
$674,900
4 Bedrooms, 4 W Room
Mattamy Built 1 Yr New Detached House
$699,999
4 Bedrooms, 3 W Room
Bright & Spacious Located In Quiet Child Friendly Neighbourhood
$799,900
3 Bedrooms, 3 W Room
Professional Landscaping In 2015, Elegant Stone & Brick Exterior
$848,900
3 Bedrooms, 4 W Room
Beautiful Hardwood On Main Floor Walk-Out To Balcony
$929,000
4 Bedrooms, 3 W Room
High End Granite Counter Top W/ Modern Look Backsplash
KZG 647-200-5833
Sell your home faster and more money
RE/MAX Platinum Club Award
ELAGUPPILLAI SRINATHAN (MIKE) B.SC
Sales Representative
Direct 416 - 276-1225
Email: esrinathan@trebnet.com
Ph1-7800 Woodbine Ave
Markham, ON L3R 2N7
Tel: 905-470-9800
Fax: 905-470-7770
Your Home Sold In 30 Days or We buy it
When you list your home with Mike,you receive these Guarantees.
Your home advertised 24 hours a day until it is sold, Your home advertised in full color prints ads every week until it is sold, Our team of specialists for the same price as hiring a single agent

# இறந்தும் இறவா புகழ் பெற்றவர் பாரத ரத்னா ஏ.பி.ஜெ. அப்துல் கலாம்

இராமேஸ்வரத்தில் பிறந்து வறுமையிலும் செம்மையாக படித்து விஞ்ஞானியாக வாழ்க்கையைத் தொடங்கி இந்தியாவின் குடியரசுத்தலைவராக உயர்ந்த பெருமைக் குரிய டாக்டர் ஏ.பி.ஜெ அப்துல் கலாமின் மரணம் இந்தியநாட்டு மக்களை சோகத்தில் ஆழ்த்தியுள்ளது. இந்தியாவில் 7 நாட்கள் தேசிய அளவில் தேசியக் கொடி அரைக் கம்பத்தில் பறக்க விடப்பட்டு துக்கம் அனுசரிக்கப்படுகிறது. மேகாலயா மாநிலம் ஷில்லாங்கில் உள்ள ஐ.ஐ.எம்.ல் கல்வி நிறுவனத்தில் நடைபெற்ற கருத்தரங்கில் பேசிக்கொண்டிருந்த போது அவருக்கு திடீரென மாரடைப்பு ஏற்பட்டது. மயங்கி விழுந்த அப்துல் கலாமிற்கு மருத்துவமனை யில் தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டும் சிகிச்சை பலனின்றி தனது 84ஆவர் வயதில் காலமானார். அவர் மரணித்தாலும் அவரது புகழ் என்றைக்கும் மரணிப்பதில்லை. 2002ஆம் ஆண்டு நடந்த குடியரசுத் தலைவர் தேர்தலில் வெற்றி பெற்று, இந்தியாவின் 11ஆவது குடியரசு தலைவராக ஜூலை 25 ஆம் நாள் 2002இல் பதவியேற்றார். 2007 ஆம் ஆண்டு வரை குடியரசுத் தலைவராக இருந்த இவர் "மக்களின் ஜனாதிபதி" என்று அனைவரா லும் அன்போடு அழைக்கப்பட்டார். மக்களுக் காகவே இறுதிவரைக்கும் பிரம்மச்சாரியாக வாழ்ந்த ஏ.பி.ஜே அப்துல் கலாமின் எளிமையான வாழ்க்கையும், அவரது இனிமையான பேச்சும் எல்லோரையும் கவர்ந்தது. உலகம் போற்றும் விஞ்ஞானி யான கலாம் தன்னுடைய பொன்மொழி களாலும், கவிதைகளாலும், வாசகங்களா லும் அனைவரின் மனதிலும் நீங்கா இடம் பிடித்துள்ளார்.

எதிர்கால இந்திய இளைஞர்களின் கையில் என்ற அவர் "கனவு காணுங்கள்! அந்த கனவை நினைவாக்க பாடுபடுங்கள்" என்னும் வாக்கியத்தை இளைஞர்களின் மனதில் வேரூன்ற செய்தவர். நாட்டின் குடியரசு தலைவராவதற்கு முன்பே அப்துல் கலாமிற்கு, இந்தியாவின் மிகப்பெரிய விருதான "பாரத ரத்னா" விருதை மத்திய அரசு இவருக்கு வழங்கி கௌரவித்தது. மேலும், "பாரத ரத்னா" விருது பெற்ற மூன்றாவது குடியரசு தலைவர் என்ற பெருமையைப் பெற்றார்.

இராமேஸ்வரத்தில் பிறந்து ராக்கெட் விஞ்ஞானியாக உயர்ந்த டாக்டர் அப்துல் கலாம் 1931ஆம் ஆண்டு, ஒக்ரோபர் மாதம் 15ஆம் நாள் ஜைனுலாப்தீனுக்கும், ஆஷியம்மாவுக்கும் மகனாக இந்தியாவின் தமிழ்நாடு மாநிலத்தில், பாம்பன் தீவில் அமைந்துள்ள இராமநாதபுரம் மாவட்டத்தில் இருக்கும் ஒரு சிறிய நகராட்சியான இராமேஸ்வரத்தில் பிறந்தார். இவர் ஓர் இஸ்லாமிய குடும்பத்தை சேர்ந்தவர். அப்துல் கலாம், இராமேஸ்வரத்திலுள்ள தொடக்கப் பள்ளியில் தனது பள்ளிப்படிப்பை தொடங்கி னார். ஆனால் இவருடைய குடும்பம் ஏழ்மையில் இருந்ததால், இளம் வயதிலே



தன்னுடைய குடும்பத்திற்காக வேலைக்குச் சென்றார். வறுமையான குடும்ப சூழ்நிலை யால் பள்ளி நேரம் போக மற்ற நேரங்களில் இவர் செய்தித்தாள்கள் விநியோகம் செய்தார். இவருடைய பள்ளிப்பருவத்தில் இவர் ஒரு சராசரி மாணவனாகவே வளர்ந்தார்.

தன்னுடைய பள்ளிப்படிப்பை முடித்தபிறகு, திருச்சிராப்பள்ளியிலுள்ள "செயின்ட் ஜோசப் கல்லூரியில்" இயற்பியல் பட்டப்படிப்பு பயின்றார். 1954ஆம் ஆண்டு, இயற்பியலில் இளங்கலை பட்டம் பெற்றார். ஆனால், இயற்பியல் துறையில் ஆர்வம் இல்லை. 1955ஆம் ஆண்டு தன்னுடைய "விண்வெளி பொறியியல் படிப்பை சென்னையிலுள்ள எம்.ஐ.டி-யில் தொடங்கினார். பின்னர் அதே கல்லூரியில் முதுகலைப் பட்டமும் பெற்றார். 1960ஆம் ஆண்டு வானூர்தி அபிவிருத்தி அமைத்தல் பிரிவில் (DRDO) விஞ்ஞானியாக தன்னுடைய ஆராய்ச்சி வாழ்க்கையைத் தொடங்கிய அப்துல் கலாம், ஒரு சிறிய ஹெலிகொப்டரை இந்திய ராணுவத்திற்காக வடிவமைத்து கொடுத்தார்.

இந்திய விண்வெளி ஆராய்ச்சி கூடத்தில் (ISRO) தனது ஆராய்ச்சிப்பணிகளைத் தொடர்ந்த அவர், துணைக்கோள் ஏவுகணைக் குழுவில் (SLV) செயற்கைக் கோள் ஏவுதலில் முக்கிய பங்காற்றினார். 1980ஆம் ஆண்டு SLV -III ராக்கெட்டைப் பயன்படுத்தி ரோகினி-I என்ற துணைக் கோளை வெற்றிகரமாக விண்ணில் ஏவச் செய்தார். இது அவருக்கு மட்டுமல்லாமல், இந்தியாவிற்கே ஒரு சாதனையாக அமைந்தது. இவரது சாதனையைப் பாராட்டி மத்திய அரசு இவருக்கு 1981ஆம் ஆண்டு இந்தியாவின் மிகப் பெரிய விருதான "பத்ம பூஷன்" விருது வழங்கி கௌரவித்தது. இந்தியாவை அணு ஆயுத வல்லரசாக மாற்றிய ஏ.பி.ஜே அப்துல் கலாம், இதுவரை ஐந்து ஏவுகணை திட்டங்களில் பணி புரிந்துள்ளார். 1963ஆம் ஆண்டு முதல் 1983ஆம் ஆண்டு வரை, இந்திய விண்வெளி ஆராய்ச்சி கூடத்தில் பல பணிகளை சிறப்பாக செய்த இவர், 1998ஆம் ஆண்டு நடந்த பொக்ரான்-II அணு ஆயுத சோதனையில் முக்கிய பங்காற்றினார்.

சென்னை அண்ணா பல்கலைக்கழகத்தில் பேராசிரியராகவும், மைசூர் பல்கலைக் கழகத்தில் வருகைப் பேராசிரியராகவும் பணியாற்றினார். அனைவராலும் இந்திய ராணுவ ராக்கெட் படைப்பின் பிதாவாக போற்றப்படுகிறார் அப்துல் கலாம். 2002ஆம் ஆண்டு நடந்த குடியரசுத் தலைவர் தேர்தலில் வெற்றி பெற்று, இந்தியாவின் 11ஆவது குடியரசு தலைவராக ஜூலை 25ஆம் நாள் 2002இல் பதவியேற்றார். 2007ஆம் ஆண்டு வரை குடியரசுத் தலை-வராக இருந்த இவர் "மக்களின் ஜனாதிபதி" என்று அனைவராலும் அன்போடு அழைக்கப் பட்டார். ஜனாதிபதி மாளிகையில் வாழ்ந்த போதும் மிக எளிமையான வாழ்வு வாழ்ந்தவர்.

நாட்டின் நலனையும், மாணவர்களின் முன்னேற்றத்தையும் மட்டுமே கண்களாகப் பாவித்து அவற்றுக்காகவே தமது வாழ்நாளை அர்ப்பணித்தார். சிறந்த எழுத்தாளராகவும் திகழ்ந்த கலாம், அக்னிச் சிறகுகள், இந்தியா 2020, திட்டம் இந்தியா, கடந்த நிலை உள்ளிட்ட நூல்களை எழுதியுள்ளார்.

2007ஆம் ஆண்டு குடியரசுத் தேர்தலில் மீண்டும் போட்டியிட நினைத்த கலாம், பிறகு பல காரணங்களால் அந்த தேர்தலில் போட்டியிட போவதில்லை என முடிவு செய்து விலகினார். ஆனாலும் கலாம் ஓய்வாக ஒரு நிமிடம் கூட அமரவில்லை. நாடு முழுவதும் பயணம் செய்து மக்களை யும், மாணவர்களையும் சந்தித்து இந்தியா வல்லரசாக வேண்டும் என்று தனது ஆசையை மக்களின் மனதில் பதிய வைத்தார். கடந்த 10 ஆண்டுகளில், நாடு முழுவதும் ஒரு கோடிக்கும் மேல் மாணவர் களை சந்தித்து உரையாடியுள்ளார். அறிவார்ந்த இளைஞர்கள் தங்களது நேரம், அறிவு, ஆற்றலை பயன்படுத்தி, 2020க்குள் அனைத்து துறையிலும் நாட்டை முன்னேற்றப் பாதையில் கொண்டு செல்ல முயற்சிக்க வேண்டும். மனதில் உறுதி இருந்தால், நீங்கள் வெற்றி அடைவீர்கள் என்பதை மாணவர்களின் உள்ளங்களில் பதிய வைத்தவர் அப்துல் கலாம்.

## அப்துல் கலாம் பெற்ற விருதுகள்

1981 - பத்ம பூஷன்
1990 - பத்ம விபூஷன்
1997 - பாரத ரத்னா
1997 - தேசிய ஒருங்கிணைப்பு இந்திராகாந்தி
1998 - வீர் சவர்கார் விருது
2000 - ராமானுஜன் விருது
2007 - அறிவியல் கவுரவ டாக்டர் பட்டம்
2007 - கிங் சார்லஸ்-ஐஐ பட்டம்
2008 - பொறியியல் டாக்டர் பட்டம்
2009 - சர்வதேச வோன் கார்மான் விங்ஸ்
2009 - ஹூவர் மெடல்
2010 - பொறியியல் டாக்டர் பட்டம்

தொடர்ச்சி 13ஆம் பக்கம்

ARISTO PEST CONTROL
Set Your Mind At Rest, We Will Get Rid Of The Pest
24HRS / 7 DAYS EMERGENCY SERVICES & ANIMAL REMOVAL

• Cockroach • Bedbug • Animal Control • Mice
• Bird Control • WASPS • Hornets Removal • Rat
Government Licensed Exterminator
Same Day Service - Residential, Commercial, Industrial
(We Speak English, Gujarati & Hindi)
We Also Provide No Obligation Inspection For Commercial & Residential Clients
Written Guarantee & Discounted Rates - Call Now 647.339.3926
info@aristopestcontrol.ca / www.aristopestcontrol.ca

# அடுக்கு மாடி மனைகளின் விலையில் அதிகரிப்பு

## நாமும் நமது இல்லமும்

ராஜா-மகேந்திரன்

தொடர் - 445

தனிவீடு (Detached house), இரண்டு சேர்ந்த வீடு (Semi Detached), பல சேர்ந்த வீடுகள் (Attached houses) இவற்றை பொதுவாக Low rise house எனவும், அடுக்கு மாடி கட்டிடத்தில் அமைந்திருக்கும் மனைகள் High rise Condo. units எனவும் ஆதன வியாபாரத்தில் (Real Estate Industry) அழைப்பர்.

அண்மைக்காலமாக Low rise இன் விலைகளின் அதிகரிப்பு எதிர்பாராதளவிற்கு ஏறுமுகமாகவே காணப்படுகின்றது. ரொறொன்ரோவின் பெரும்பாகத்தில் (Greater Toronto Area) தனி வீடு வாங்குவது பலரிற்கு முயல் கொம்பாக மாறி வருவதனைக் காணக்கூடியதாக உள்ளது. இதனால் GTA ஐ விட்டு வெளியே சென்றுதான் தமக்கான வீட்டினை வாங்கக்கூடிய நிலைமைக்கு பல குடும்பங்கள் நிர்பந்திக்கப்படுகின்றது என்பதனைக் காணக்கூடியதாக உள்ளது.

யூலை 15, 2015 அன்று கனேடிய மத்திய வங்கியின் ஆளுனர் திரு. ஸ்டீபன் போல்ஸ், கனேடிய மத்திய வங்கியின் வட்டி வீதத்தை 1/4 வீதத்தினால் குறைத் துள்ளார். இவ்வருடத்தின் ஆரம்பத்தில் ஜனவரி 2015 இலும் இதே நிலைமை ஏற்பட்டது. அதாவது கனேடிய



பொருளாதார ஆய்வாளர்கள், மற்றும் கனேடிய மக்கள் எதிர்பாராதளவிற்கு இந்நிகழ்வு நடைபெற்றது. வங்கியின் வட்டி வீதம் 1/4% இனால் இறக்கப்பட்டது. இதனால் கனேடிய ஆதன வியாபாரம் சூடு பிடிக்கத் தொடங்கியது. ஜனவரி 2015 இலிருந்து அதிகரித்த வியாபாரம் யூன் 2015 வரை காணக்கூடியதாக இருந்தது.

இதற்கு பல காரணங்கள் கூறப்பட்டன. அவற்றில் முக்கியமாக அல்பேட்டா மாகாணத்தின் பொருளாதாரம். இந்த மாகாணம், குறூட் ஒயிலை (Crude oil) அடித்தளமாகக் கொண்டு இயங்கி வருவது. ஒயிலின் விலையில் ஏற்பட்ட இறக்கத்தால் அல்பேட்டாவின் பொருளாதா ரத்தின் நிலைப்பாட்டை ஓரளவு சீர் செய்வதற்காக வட்டிவீதத்தில் இறக்கம் ஏற்படுத்தப்பட்டது.

இவ்வட்டிவீத இறக்கம், வன்கூவர், ரொறொன்ரோ போன்ற நகரங்களில் ஆதன வியாபாரத்தில் அதிக மாற்றத்தை ஏற்படுத்தியதைக் காணக்கூடியதாக இருந்தது.

இருந்த போதிலும், கனேடிய பொருளாதா ரத்தின் வளர்ச்சியில் பெரிதான மாற்றம் ஏற்படவில்லை. வட்டி வீதக் குறைப்பினால், கனேடிய டொலரின் (Dollar) பெறுமதியில் இறக்கம் ஏற்படத்தொடங்கியது. இதனால் கனடாவின் ஏற்றுமதி, நிச்சயம் பயன் அடைந்திருக்க வேண்டும். ஆனால் அவ்வாறான நிலைமை பெரிதாக ஏற்பட்ட தாக தோன்றவில்லை. இருப்பினும் கனடா மீதான வெளிநாட்டுப் பயணிகளின் (Tourism) எண்ணிக்கையில் அதிகரிப்பு ஏற்பட்டதனைக் காணக்கூடியதாக இருந்தது.

ஆறு மாதங்களிற்கு பிற்பாடு எதிர்பாரதள வில் கனேடிய மத்தியவங்கி மீண்டும் 1/4% வட்டிக் குறைப்பை ஏற்படுத்தியுள்ளது.

தொடர்ச்சி 14ஆம் பக்கம்


# HomeLife/GTA Realty Inc. Brokerage*

"கனவு உங்களுடையது, பொறுப்பு எங்களுடையது"

Raja Mahendran, P.Eng.
Broker / Owner

* INDEPENDENTLY OWNED AND OPERATED



5215 Finch Ave, E, #203, Toronto, ON :416.321.6969

## CONDO FOR SALE

**Yonge/HWY 401**
1 Bedroom,
SW exposure - vacant.
walking distance to subway.



**Asking Price $279,900**

## CONDO. FOR SALE

**KIPLING & STEELES**
2 Bedroom,
Parking, vacant,
Need Renovation
High maintenance fee



**Asking price $49,900**

## CONDO FOR SALE

**MCCOWAN & EGLINTON**
2 Bedroom + Den condo. for sale. 2 Washroom. Recently renovated unit. North exposure - vacant, Balcony, Parking.
**Asking Price $199,000**

## FURNISHED CONDO. FOR LEASE

**FRONT & SPADINA**
Downtown 1 Bedroom Condo. Finished just move -Enjoy.
Min.1 Year. 1 Parking, excellent amenities.
Furnished Unit.



**Asking $2,200**

## INDUSTRIAL BUILDING FOR SALE



Over 42,000sq.ft building.
2.4 Acres land. 600 AMP power, 4 loading.
One drive through. Owner Laese Back possible. Scarborough location.
**Asking only $3.39 Million.**

## COMMERCIAL UNIT FOR SALE / LEASE

Main Floor Unit in GTA square mall . Parking Underground & surface. Vacant, Avail. Anytime.



**Asking - $120,000 For Sale.**
**$1,300 For Lease**
**Space Available for Dental office.**

## VACANT LAND FOR SALE

**LAWRENCE & BIRCHGROVE**
One Acre land, Scarborough location.
Possible investment.

# உன்னதக் காதலி ராதே



## சத்குரு வாசுதேவ்

காதல் என்பது உடல் சார்ந்த ஒரு விடயம் என்று மட்டுமே அணுகும் மனப்பான்மை இன்று வலுத்துக் கிடக்கிறது. ஆனால் தன் உயிரில் கிருஷ்ணனை பதிய வைத்த உன்னதக் காதலி இவள்.

சத்குரு:

ராதை, கிருஷ்ணனின் குழந்தைப் பருவக் காதலி. எளிமையான கிராமத்துப் பெண், பால்காரி. கிருஷ்ணன் மீது கொண்டிருந்த மாறாக் காதல் மற்றும் பக்தி காரணமாக யாராலும் மறக்க முடியாதவளாக மாறிவிட்டவள். ராதையை நினைவுக்கூறாமல் நாம் கிருஷ்ணனைப் பற்றி பேசவே முடியாது. எப்போதாவது நாம் கிருஷ்ணராதா என்று சொல்லியிருக்கிறோமா? இல்லவே இல்லை.



ராதாகிருஷ்ணன் என்றுதான் சொல்கிறோம். ராதை, கிருஷ்ணன் மேல் கொண்ட தனது மாசுமருவற்ற அன்பின் காரணமாக, கிருஷ்ணனை விடவும் அதிமுக்கியத்துவம் பெற்றிருக்கிறாள்.

அந்த ராதை, கிருஷ்ணனைப் பற்றி என்ன கூறுகிறாள்?

'கிருஷ்ணன் என்னோடு இருக்கிறான். அவன் எங்கே வேண்டுமானாலும் இருக்கட்டுமே. யாரோடு வேண்டுமானாலும் இருக்கட்டுமே. இருப்பினும் என்னோடுதான் எப்போதும் இருக்கிறான்'.

இதுதான் உன்னதக் காதலி ராதாவின் அற்புதமான அனுபவக் கூற்று!

ராதா, தனது அளப்பரிய காதலில் கிருஷ்ணனைத் தன்னில் கரைத்துவிட்டாள். அதனால் ராதா பக்தர்கள் 'ராதே இன்றி ஏது கிருஷ்ணன்?' என்று வினவுகிறார்கள்.

ராதையை அவர்கள் காதலாகவே காணுகிறார்கள். அதனால்தான் காதல் இல்லாமல் கிருஷ்ணன் இல்லை என்று அறுதியிட்டுக் கூறுகிறார்கள்

## குருவிடம் ஒரு குறுக்கு விசாரணை!

நான் கடவுளிடம் பிரியமாகத்தான் இருக்கிறேன். ஆனால் அவர் அதை கவனித்ததாகத் தெரியவில்லையே?'

உங்கள் பிரச்சினையே அதுதான். கணப்போதுதான் காதல் கொள்கிறீர்கள். அடுத்தவேளைச் சாப்பாட்டைப் பகிர்ந்துகொள்ள ஆண்டவன் வந்துவிட்டால், உங்கள் பிரியம் நீராவி போல் காணாமல் போய்விடும்.

உங்கள் கடவுளை நீங்கள் வளர்க்கும் நாயைப்போல் நினைத்து விட்டீர்கள். நாய்க்குப் போடும் பிஸ்கட்களைப் போல் ஆண்டவனுக்கும் எதையோ எறிவீர்கள். நாயிடமாவது தூக்கிப் போட்டதைத்தான் எடுத்து வரச் சொல்வீர்கள். கடவுளிடம் 'அதைக் கொடு, இதைக் கொடு' என்று மனசுக்குத் தோன்றியதையெல்லாம் கொண்டுவரச் சொல்வீர்கள்.

இதன் பெயரா பிரியம்?

பக்கத்தில் இருப்பவரும் கடவுளின் படைப்புத்தான். அவர் வாழும்போது வெறுப்பை உமிழ்கிறீர்கள். கல்லறையில் மட்டும் கவிதை எழுதி வைக்கிறீர்கள்.

படைப்பின் மீது வெறுப்பைச் சொரிந்து விட்டு, படைத்தவன் மீது மட்டும் ஆசை வைத்திருப்பதாகச் சொல்வது அவனை அவமானப்படுத்துவது போலாகும். அந்தப் பிரியத்தை அவன் எப்படிக் கவனிப்பான்?

உங்கள் ஒவ்வொரு மூச்சிலும், ஒவ்வொரு செயலிலும் அன்பு இருக்கட்டும். அந்த அன்பு தானாக உங்களை ஆண்டவனிடம் கொண்டு நிறுத்தும்! - **சத்குரு**





## *Inner Engineering Program*

### *4 day Inner Engineering program*

### *led by an Isha teacher trained by Sadhguru Coming to Toronto*

***TIMINGS:***

Thursday August 6: 6:30pm – 9:30pm
Friday August 7: 6:30pm – 9:30pm
Saturday August 8: 8:30am – 7:00pm
Sunday August 9: 7:30am – 7:00pm

Vegetarian lunch provided on Saturday; Vegetarian breakfast & lunch on Sunday.

Attendance for all sessions is required.
VENUE: Latvian Canadian Cultural Centre
4 Credit Union Drive, Toronto, ON M4A 2N8, Canada.
CONTACT: Email: toronto@ishafoundation.org
Phone: 416-300-3010
Registrations online at : www.innerengineering.com/live/toronto



## சந்திரமௌலீஸ்வர சிவாலயம்

**தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்**
**ஆலயம் திறந்திருக்கும் நேரம்**

வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில் காலை 7am - மாலை 9pm வரை
திங்கள் - வியாழன் - காலை 7am - 2pm மாலை 5pm - 9pm

விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம்.
ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்

**Tel: 416 . 754 . 7338 / 416 .724 .7480**
3011 Markham Road , Unit 62 & 63 (North of McNicoll Ave.), Scarborough

# இறந்தும் இறவா...

10ஆம் பக்கத்தொடர்ச்சி

2012 - சட்டங்களின் டாக்டர்
2012 - சவரா சம்ஸ்க்ருதி புரஸ்கார் விருது

தன்னுடைய வாழ்நாளில் எண்ணற்ற விருதுகளைப் பெற்றாலும் அவருக்கு

திருக்குறள்

எனது வாழ்க்கையின் பல்வேறு நிலையில் உறுதுணையாக இருந்து, வழிகாட்டியாகத் திகழ்ந்தது திருக்குறள் என்று மறைந்த முன்னாள் ஜனாதிபதி அப்துல் கலாம் கூறியுள்ளார்.



வழங்கப்பட்டதனால் இந்த விருதுகள்தான் பெருமை பெருகின்றன என்பதை ஒவ்வொருவரும் அறிவார்கள்.

அப்துல் கலாமின் கடைசிப்புத்தகம் "கடந்த நிலை"

அப்துல் கலாம் அவர்களின் கடைசி புத்தகமான "கடந்த நிலை" ஜுலை 26, 2015இல் வெளியிடப்பட்ட நிலையில் ஜுலை 27, 2015 மாலை மேகாலயாவில் அவருடைய மரணம் அனைவரையும் சோகத்தில் ஆழ்த்தியது. கலாம் அவர்கள் தனது ஆன்மீக அனுபவங்கள் தொடர்பான நிகழ்வுகளை தொகுத்து "Transcendence" என்னும் நூலினை எழுதியுள்ளார். இந்த நூலை பிரதமர் மோடி கடந்த மாதம் டெல்லியில் வெளியிட்டார். டெல்லி அகஷ்ர்தாம் கோயிலில் தனக்கும் குரு பிரமுக் சுவாமிக்கும் இடையே ஏற்பட்ட அனுபவங்களை தொகுத்து அப்துல் கலாம் இந்த நூலினை எழுதியுள்ளார். தமிழில் இந்த நூல் "கடந்த நிலை" என்ற பெயரில் வெளியானது. நூல் குறித்த சிறப்பு அறிமுக நிகழ்ச்சி சென்னை எம்.ஆர்.சி. நகரில் ஜுலை 25, 2015இல் நடந்தது. அப்துல் கலாம் எழுதிய அந்த புத்தகம் வேத மந்திரங்கள் முழங்க சென்னையில் அறிமுகப்படுத்தப்பட்டது. ஒரு முஸ்லிமாக பிறந்து, இந்துக்களின் ஆன்மிக நம்பிக்கைகள் பற்றிய தன்னுடைய உள்ளார்ந்த கருத்துக்களை இந்நூலில் வெளியிட்டு சமய நல்லிணக்கத்திற்கு கடைசியாக வித்திட்டுச் சென்றுள்ள காலம் கடந்த அப்துல் கலாம் அவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

அப்துல் கலாமிற்கு பிடித்த

"அறிவு அற்றம் காக்கும் கருவி செறுவார்க்கும்
உள் அழிக்கல் ஆகா அரண்" – குறள் 421

இந்தக் குறள்தான் தனது வாழ்விற்கு வளம் கொடுத்தது என்று அவரே ஒரு மேடையில் பேசும் போது கூறியுள்ளார். இதன் பொருள் அறிவு என்பது அழிவு வராமல் காக்கும் கருவியாகும். மேலும் பகைவராலும் அழிக்க முடியாத எத்தகைய சூழ்நிலையிலும் அரண் போல அதாவது கோட்டை போல காத்து நிற்கும் என்பதாகும். பூமிக்கு மேலே, பூமிக்கு கீழே, பூமியில் என எந்த விதத்தில் எந்த அழிவு ஏற்பட்டாலும் அறிவை அழிக்க இயலாது என்பது உண்மை. ஒருமுறை இராமேஸ்வரம் பள்ளியில் பேசிய அவர், உங்களைப் போன்று சிறுவனாக இருந்தபோது, மேல்நிலைப்பள்ளிக்கு போக முடியுமா என்ற பயம் மனதில் தோன்றியது. எனது ஆசிரியர் சிவசுப்ரமணியம், எனக்கு வழிகாட்டியாக இருந்து, நல்ல இலட்சியத்தை கற்றுத் தந்ததால், உயர் கல்வி முடித்து, வான்வெளி ஆராய்ச்சியில் ஈடுபட்டேன். எனது வாழ்க்கையில் பல்வேறு நிலையில், உறுதுணையாக இருந்து வழிகாட்டியாக என்னை வழி நடத்தியது, திருக்குறள் தான் என்று கூறினார்.

இந்தியா 60 கோடி இளைஞர்களைப் பெற்ற நாடு. மக்கள் தொகை தான் இந்தியாவின் மிகப்பெரிய பலமே. உறக்கத்திலேயே காண்பது கனவு அல்ல. உங்களை உறங்க விடாமல் செய்வது தான் கனவு. கனவு காண்பது என்பது ஒவ்வொரு இளைஞர் வாழ்விலும் கடமையாகும். அந்த கனவை நிறைவேற்றுவதை இலட்சியமாகக் கொள்ள வேண்டும். கடுமையாக உழைக்க வேண்டும். விடா முயற்சியோடு செயல்பட வேண்டும். தோல்வி மனப்பான்மைகளை தோல்வி அடையச் செய்ய வேண்டும். அப்போதுதான் இந்தியா பலமான வளர்ந்த நாடாகும் என்று உறுதி படச் சொன்னவர் கலாம். வாழ்க்கையில் லட்சியம், அறிவு, கடின உழைப்பு, விடாமுயற்சி என நான்கையும் நீங்கள் கடைபிடித்தால், எதிர்காலத்தில் மகானாக முடியும்.

# மார்க்கம் மாநகர சபை நடத்தும் வருடாந்த சிறுவர் கொண்டாட்டம்!

மார்க்கம் - மிலிக்கன் மில்ஸ் சிறுவர் களுக்கான கொண்டாட்டத்தினை மார்க்கம் மாநகர சபை வருடா வருடம் சபையின் அலுவலகத்தை சுற்றியுள்ள மைதானத்தில் நடத்தி வருவது யாவரும் அறிந்த விடயம். இம்முறை நடத்தவிருக்கும் 17ஆவது ஆண்டு கொண்டாட்டம் ஒகஸ்ட் மாதம் 22ஆம் திகதி சனிக்கிழமை முழு நாள் விழாவாக நடைபெற விருக்கின்றது. இதற்கு றோயல் வங்கி முழு ஆதரவினையும் ஒத்துழைப்பினையும் வழங்கி வருவது குறிப்பிடத்தக்கது. இது சம்பந்தமான பத்திரிகையாளர் மகாநாடு ஒன்று கடந்த செவ்வாய் கிழமை காலை மார்க்கம் மாநகர சபை மண்டபத்தில் நடைபெற்றது.

மாநகர சபையின் ஏழாம் வட்டார அங்கத்தவர் திரு. லோகன் கணபதி இவ்வைபவத்தில் உரையாற்றிய போது ஒன்ராறியோ மாகாணத்தில் சிறுவர்களுக் காகக் கொண்டாடப்பட்டு வரும் மிகப் பெரிய கொண்டாட்டம் இதுவாகும். கடந்த எட்டு வருட காலமாக இவ்விழாவிற்கு தலைவராக இருந்து ஏற்பாடுகளை செய்து வருவதை யிட்டு நான் பெருமைப்படுகின்றேன். காற்று நிரப்பப்பட்ட மேடைகளில் சிறுவர்கள் துள்ளிக் குதித்து விளையாடுதல், முகத்துக்கு வர்ணம் தீட்டுதல், கைப்பணி வேலைகள் போன்ற பல்வேறு நிகழ்ச்சிகள் இடம்பெறும். இது சிறுவர்களுக்கு மாத்திர மன்றி அவர்களது பெற்றோர்களுக்கும் மகிழ்ச்சி அளிக்கும் விழாவாகும். இவ்விழாவினை வெற்றி கரமாக நடத்துவதற்கு றோயல் வங்கி தமது ஆதரவினை வழங்கி வருகின்றது. அதற்காக நாம் இங்கு வருகை தந்துள்ள றோயல் வங்கி அதிகாரிகளுக்கு எமது நன்றி அறிதலை தெரிவித்துக் கொள்கின்றோம். அதன் பிரதேச உப தலைவி ஷான் ராங் இங்கு வருகை தந்துள்ளார். அவரை வரவேற்பதில் நாம் மிக்க மகிழ்ச்சி அடைகின்றோம். அத்துடன் இத்தகவலை தமது ஊடகங்கள் மூலம் பொதுமக்களுக்கு தெரியப்படுத்துவதற்காக வருகை தந்துள்ள பத்திரிகையாளர்களுக்கும் மற்றும் இந்நிகழ்ச்சியை வெற்றிகரமாக நடத்துவதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டு வரும் டயான், டெனிஸ், இவோன் ஆகியோருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம் எனக் குறிப்பிட்டார்.




இப்போட்டியில் பங்குபற்றவிருக்கும் சில சிறுவர்கள் தமது சாகச விளையாட்டுகள் சிலவற்றினை செய்தும் காண்பித்தார்கள்.

- வீரகேசரி மூர்த்தி

## தமிழனின் கையெழுத்து தமிழரின் தலையெழுத்தை மாற்றுவது உறுதி!

தமிழின படுகொலையாளிகளை அனைத்து உலக குற்றவியல் நீதிமன்றத்திடம் பாரப்படுத்துமாறு ஐ.நா. ஒரு மில்லியன் மக்களின் கையெழுத்தில் அனைவரும் ஈடுபட்டுள்ளனர். நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் விடுத்த இவ்வேண்டுகோளை உலகெங்கும் வாழ்கின்ற பல்லின மக்கள் கையொப்பமிட்டுள்ளனர். இவ் வேண்டுகோளை ஏற்று 1 மில்லியனிற்கு மேற்பட்ட கையொப்பங்கள் இருக்கின்ற நிலையில் 2 மில்லியனை தாண்டுகின்ற அளவிற்கு தமிழர்களின் கையெழுத்துக்கள் அமையவேண்டுமென நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் கனடா பேராளர் மா.க. ஈழவேந்தன் கூறினார். அவர் மேலும் கூறுகையில், ஐ.நா. மன்றத்திற்கு அனுப்பி தமிழர் தம் கையெழுத்தின் ஊடாக தம் தலையெழுத்தை மாற்ற உறுதி கொண்டுள்ளார்கள்.

'செங்குருதி சிந்தாத சிந்தனை புரட்சி வாழ்த்தி வரவேற்க வேண்டிய முயற்சி'

# ஐங்கலை வெண்பா

## நடனம்

அரிய நடனத்தை ஆதியிலே ஆடிப்
பெருமைப் படுத்தியவர் பேரார் - பரமசிவக்
குன்றாம் அவராடும் கூத்தர் நடராசர்
மன்றம் சராசர மாம். (17)

(மன்றம் சராசர மாம் - நடராசர் ஆடும் அரங்கம் அண்டசராசரம் ஆகும்.)

முன்னாளில் பேசும் மொழிவளராக் காலத்தில்
உன்னதமார் மெய்ப்பாடே ஊடகமாம் - பின்னதுவே
வாழும் நடனமாய் நன்கு வளர்ந்ததென்பார்
ஆளும் அறிஞர் அவர். (18)

(மெய்ப்பாடு - உடற்செய்கை, நவரசம். ஊடகம் - கருத்தை.˙.உணர்வை வெளிப்படுத்தும் சாதனம்.)

ஆட்டம் ஒருவர்பலர் ஆனாலும் பின்னணியில்
கூட்டும் சுருதியுடன் கூடிவரும் - பாட்டுமுள்ள
நாட்டியங்கள் யாவும் அவையோர் நயப்பதற்கே
காட்டும் கலையாகும் காண். (19)

சங்ககா லத்தில் விதிமுறைகள் சார்ந்துநடம்
பங்கமொன் றின்றிப் பயின்றதனை - மங்கைநல்லாள்
மாதவியின் ஆடல் அரங்கேற்றம் மாண்புற்ற
சேதியினாற் காட்டும் சிலம்பு. (20)

(சிலம்பு - சிலப்பதிகாரம்.)

அரிய தமிழ்நடன நூலதனை ஆன்ற
பரதமுனி கற்றுப் பகுத்தே - உரியமுறை
நாட்டி வடமொழியில் நாட்டியநற் சாத்திரத்தைத்
தீட்டினராம் ஏட்டில் தெளிந்து. (21)

துங்க நடனத்தைப் பின்னாள் சுகபோகர்
பங்கப் படுத்தப் பரத்தையரும் - மங்கிமெல்லத்
தாழ்வான நற்கலையைத் தாங்கி வளர்த்துத்தம்
வாழ்வாகக் கொண்டார் மகிழ்ந்து. (22)

முன்னர் நடனம் முதன்முதலில் ஆடியவர்
தென்னா டுடையசிவன் என்பதனால் - தென்னாட்டின்
ஆலயங்கள் ஆடலினைக் கூத்தனுக்கே அர்ப்பணித்துச்
சால வளர்த்தனவாம் சார்ந்து. (23)

தமிழர் தனித்துவமும் பண்பாட்டுச் சால்பும்
அமையும் பரதத்தின் ஆற்றல் - உமைபாகர்
ஆற்றல் அதனாலே யாண்டும் அதைத்தமிழர்
போற்றி வழிபடுவர் பூத்து. (24)



கவிஞர் வி. கந்தவனம்

# அடுக்கு மாடி...

11ஆம் பக்கத்தொடர்ச்சி

இந்த வட்டிவீதக்குறைப்பு, கனேடிய பொருளாதாரத்தைப் பற்றிய நிலைமையை மறைமுகமாக வெளிப்படுத்தியுள்ளதனைக் காணலாம். அதாவது பொருளாதார இறக்கத்திற்கு முண்டு கொடுப்பதற்காக ஏற்படுத்தியதாகவே கொள்ளலாம். சரிந்து போகும் பொருளாதாரத்தை தாங்கிக் கொள்வதற்காக செயற்கையாக ஏற்படுத்தியதே வட்டிவீதக்குறைப்பு. ஏற்கனவே வன்கூவர், ரொறொன்ரோ நகரங்களில் ஆதன விலையின் அதிகரிப்பு, தொடர்ந்த வண்ணம் உள்ளது. மேலதிக வட்டி வீதம், ஆதன விலையின் அதிகரிப்பில் மாற்றம் ஏற்படுத்தலாம்?

இவ்வகையான அதிகரிப்பு முதல்தடவை ஆதனம் வாங்குபவர்களின் நிலைமையில் பாதிப்பை ஏற்படுத்தலாம். கிழக்கில் (Oshaw வைத் தாண்டியும் வடக்கில் Bradford ஐ தாண்டியும் மக்கள் சென்று தனி வீடு வாங்கவேண்டி நிலைமையை ஏற்படுத்தியுள்ளதனை காணலாம்.

வட்டிவீத குறைப்பு, கனடிய டொலரில் மேலதிக தாக்கத்தை ஏற்படுத்தும், பண வீக்கத்தை ஏற்படுத்தும், இவை எதிர் மாறான நிகழ்வுகளாகும். இருப்பினும், டொலரின் இறக்கும் ஏற்றுமதியாளர்களிற்கு நன்மை பயக்கும், கனடாவிற்கு பயணம் செய்பவர்களிற்கு அனுகூலமாகும். அத்துடன் Pan Am, Para Pan Am விளையாட்டினாலும் ஒன்ராரியோவின் பொருளாதாரம் ஒரு குறிப்பிட்ட காலமாவது, அதிகரிப்பு ஏற்படலாம். வட்டிவீத இறக்கம், புதிதாக வீடு, மனை வாங்குபவர்களிற்கு உற்சாகத்தை ஏற்படுத்தினாலும், ரொறொன்ரோ பகுதியில் அவர்களின் தெரிவு Low rise ஆக இருப்பது, மிகவும் இறுக்கமாக



இருக்கலாம். இதனால் High rise தான் முதல் தடவை வாங்குபவர்களின் தெரிவாக இருக்கும். ஏற்கனவே அடுக்குமாடி மனையின் விலையில் அதிகரிப்பை காணக் கூடியதாக இருக்கின்றது.

அடுக்குமாடி மனைகளின் விலை அதிகரிப்பு குறைவாக இருந்தாலும், அதிகரிப்பை காணக்கூடியதாக உள்ளது. Toronto Real Estate Board இன் தலைவர் திரு. மார்க் மக்லீனின் அறிக்கையின்படி 2015ஆம் ஆண்டின் 2ஆவது கால்பகுதியில் (ஏப்ரல், மே, யூன்) MLS இனால் 7,656 அடுக்குமாடி மனைகள் கைமாறியுள்ளன. இவ்விற்பனை முந்தைய வருடத்தின், இதேகாலப்பகுதி யுடன் ஒப்பிடும்போது 17% அதிகரிப்பாகும். மேலும் அவரின் தகவலின்படி, அடுக்குமாடி மனைகளின் சராசரி விலை 5.8% இனால் GTA பகுதிகளில் ஏற்பட்டுள்ளது. ஆனால் ரொறொன்ரோவில் 6.1%இனால் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. அத்துடன் 70% ஆன அடுக்குமாடி வியாபாரம் ரொறொன்ரோ விலேயே நடைபெற்றுள்ளது. ரொறொன்ரோவின் அடுக்குமாடி மனையில் சராசரி விலை $416,728 ஆகவும், GTA இன் சராசரி விலை $388,066 ஆகவும் காணப்படுகின்றது.

**குறிப்பு** - யூலை 15, 2015 இல் ஏற்பட்ட 1/4% வட்டிவீத இறக்கத்தின் பிற்பாடுள்ள புதிய கனேடிய மத்திய வங்கி வட்டிவீதம் (யூலை 15, 2015) 0.5% ஆகும்.

## வேலணை மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்கம்-கனடா கல்லூரிக்கு Photocopier & Printer இயந்திரங்கள் அன்பளிப்பு

கல்லூரியில் அதிபர் அலுவலகத்திலிருந்த Photocopier மற்றும் Printer ஆகியன திருத்த முடியாத நிலைக்குப் பழுதடைந்தமையால் அவற்றைப் புதிதாக 192,000.00 ரூபாக்களுக்கு ($1,778.00) வாங்கி தேசிய கல்வியியற் கல்லூரிப் பீடாதிபதியும் பழைய மாணவருமான திரு ச. அமிர்தலிங்கம் அவர்கள் மூலம் 21-07-2015 அன்று அதிபர் திரு. சி. கிருபாகரன் அவர்களிடம் கனடாப் பழைய மாணவர் சங்கத்தின் சார்பில் அன்பளிப்புச் செய்யப்பட்டது. அதற்கான புகைப்படத்தினைக் கீழே காணலாம்.



சங்கத்தின் வருடாந்த ஒன்றுகூடலும் விளையாட்டுப் போட்டிகளும் August 02, 2015 ஞாயிற்றுக்கிழமை காலை 10:30 மணிமுதல் மாலை 8:30 மணிவரை Scarboroughஇல் McCowan Road & Steeles Ave. East சந்திப்புக்கு அருகாமையிலுள்ள Milliken Park, Area C, இல் நடைபெறவுள்ளது. அனைவரும் வருக! ஆதரவு தருக! நன்றி.

தொடர்புகளுக்கு: செழியன் (416-949-7795) சிவா (416-562-4141) சிறீதரன் (416-661-3494)



# MATH WORLD

MOST ADVANCED TALENTED HELP

More Than 27 Yrs of Experience in Teaching



# A Fast Track MATH Program

For

# G11 & G12

(Proven to help score in 90's)

Learn in Advance Prior to School
Two Chapters in Advance
Starts in Aug 2nd week

INFO: 416-666-5515

Other grades are also being accepted at the same time.

# இந்திய யோக இரகசியம் பிராணயாமம் ஓர் அற்புதம்

## நீண்டநாள் வாழ நினைத்ததை அடைய நோய் தடுக்கும் வழிமுறைகள்

நமது உடலுக்குத் தேவையான உயிர் சக்தியாகிய பிராணவாயுவை அளவின்றி அள்ளித்தந்து நமது உடலையும் மனதை யும் ஒளிவீசிப் பிரகாசிக்கச் செய்யும் ஓர் அற்புதமான பயிற்சிதான். பிராயாமம் என்பது பிராணன் என்றால் உயிர்ச்சத்து, யாமம் என்றால் கட்டுதல் என்று பொருள்படும்.

நமக்குத் தேவையான உயிர்சக்தியாகிய பிராணவாயுவை நமக்குள் கட்டிவைத்துக் கொள்வோம் என்று பொருள் கொள்வோம். இது நமது சுவாச மண்டலம் சம்மந்தமான ஒரு பயிற்சி. எனவே முதலில் நமது சுவாச மண்டலத்தைப்பற்றியும், அது இயங்கும் விதம் பற்றியும் சுருக்கமாகத் தெரிந்து கொள்வோம்.

**மூச்சு மண்டலம்**

நாம் சுவாசிக்கும் வெளிக்காற்று இரண்டு மூக்குத் துவாரங்கள் வழியாக உள்ளே சென்று மூச்சுக்குழல் வழியாக நுரையீரலை அடைகிறது. நமது நுரையீரல் இரண்டு பகுதிகளைக் கொண்டது.

இடது பகுதி: இதில் இரண்டு அறைகள் உள்ளன. அதில் காற்று நுண் அறைகளும் அவற்றைச் சூழ்ந்து மிகமிக நுண்ணிய வலைப் பின்னலும் உள்ளன. இந்த சுவாச அறைகளுக்கும் வலைப் பின்னலுக்கும் இடையே வாயுப் பரிமாற்றம் நடைபெறுகிறது.



வலது பகுதி: இதில் 3 அறைகள் உள்ளன. சுவாசம் உட்சுவாசம், வெளிசுவாசம் என்று இரண்டு வகைப்படும்.

உட்சுவாசம் - நாம் மூச்சை உள்ளே இழுக்கும் போது வெளிக்காற்றிலுள்ள பிராணவாயு காற்றறைகளை நிரப்பி அங்கிருந்து அதன் சுவர்கள் வழியாக ஊடுருவி இரத்தத்தில் கலக்கின்றது. இந்த பிராண வாயுவைக் கிரகிக்க இரத்தத்தில் உள்ள ஹீமோகுளோபின் பயன்படுகிறது.

வெளிசுவாசம் - நுரையீரல் சுருங்கி உட்காற்றை வெளியே தள்ளுகிறது. இந்த சமயத்தில் இரத்தத்தில் உள்ள கழிவுகள், அசுத்தங்கள், கார்பன் டை ஒக்ஸைடு மற்றும் நீராவி போன்றவை வெளியேற்றப் படுகின்றன. பொதுவாக நுரையீரல் (Lungs) மூளையின் கட்டுப்பாட்டில் இருக்கிறது. நாம் சுவாசிக்கும் போது கிடைக்கும் பிராணவாயுவானது நுரையீரலில் அடிப்பாகத்தில் இருக்கும் அசுத்தங்கள் காரணமாக முழுமையாக உட்செல்வதில்லை. ஆனால் பிராணா யாமம் என்னும் மூச்சுப் பயிற்சியின் மூலம் போதிய அளவு பிராணவாயு நுரையீரலை சென்றடையும். பின்பு அங்கிருந்து இரத்தத்துடன் கலக்கச் செய்கிறது.

**பிராணாயாமம் பயிற்சி எப்படி செய்வது**

உகந்த நேரம் காலை 5 முதல் 7 மணிவரை. காலை கடன் முடித்து சிறிது சுத்தமான நீர் பருகிவிட்டு பயிற்சியைத் தொடங்க வேண்டும்.
இடம் - நல்ல சுத்தமான காற்றோட்டமுள்ள அறை அல்லது திறந்தவெளி மனிதர்களோ அன்றி ஜந்துக்களோ தொல்லை தராத இடமாக இருக்க வேண்டும்.
செய்முறை - கிழக்கு நோக்கி கீழே அமர்ந்து நேராக நிமிர்ந்த நிலையில் இருக்க வேண்டும்.

1. கண்களை மூடிக்கொண்டு புருவ மத்தியை உற்றுப்பார்த்தபடி சாதாரணமாக மூச்சுவிட்டபடி சிறிது நேரம் இருக்கவும்.

2. இப்போது வலது மோதிர விரலால் இடது நாசியை மூடவேண்டும். திறந்து இருக்கும் வலது நாசி வழியாக மெதுவாக நிதானமாக ஆழமாக மூச்சை உள்ளே இழுக்க வேண்டும்.

3. உடனே வலது கட்டைவிரலால் வலது நாசியை மூடிக்கொண்டு வலது மோதிரவிரலை இடது நாசியில் இருந்து எடுத்துவிட்டு இடது நாசிவழியாக மெதுவாக மூச்சை வெளிவிடவேண்டும். மூச்சு உள்ளே இழுக்கும் வேகத்தை விட வெளியேவிடும் வேகம் மிகவும் மெதுவாக இருக்க வேண்டும்.

4. இடது நாசிவழியாக முழுவதுமாக மூச்சை வெளியே விட்ட பின்பு உடனே அதே மூக்கு வழியாக மறுபடி காற்றை உள்ளே இழுக்க வேண்டும்.

5. பின்பு அந்த இடது மூக்கை மோதிர விரலால் மூடிக் கொண்டு வலது நாசியிலுள்ள கட்டைவிரலை எடுத்து விட்டு வலது நாசிவழியாக மிக மிக மெதுவாக மூச்சை வெளியேற்ற வேண்டும்.
இது ஒரு பிராணாயாமம். இது போல் 10 தடவைகள் செய்யவும்.

பின்பு சற்று நேரம் ஓய்வு எடுத்து மூக்கை மூடாமல் இரு நாசிகள் வழியாகவும் மெதுவாகவும் ஆழமாகவும் மூச்சை உள்ளே இழுத்து பின் மெதுவாக நிதானமாக மூச்சை வெளியே விட வேண்டும். இதையும் 10 முறை செய்யவும்.

இந்த பயிற்சியை நீங்கள் முடிக்கும் போது உடல் வெப்பமாகி ஒரு இனம் புரியாத சுறுசுறுப்பும் மகிழ்ச்சியும் ஏற்படுவதை உணர்வீர்கள்.

கடைசியாக உதடுகளைக் குவித்து (சீட்டி அடிப்பது போல்) முடிந்த அளவு வாய்வழியாக காற்றை உள்ளே இழுத்தும் பின் வாயை மூடிக்கொண்டு மூக்குவழியாக மெதுவாக காற்றை வெளியேற்றுங்கள். இது இதயத்திற்கு வலுவூட்டுகின்றது. இதனை 10முறை செய்ய வேண்டும்.
பின்பு கண்களை மூடி புருவ மத்தியைப் பார்த்தபடி சிறிது நேரம் அமைதியாக இருந்து எழுந்து உங்கள் கடமைகளைச் செய்யுங்கள்.

என்றுமில்லாப் புத்துணர்ச்சியோடும் மகிழ்ச்சியோடும் சிறிதும் களைப்பின்றி பூரண உடல் நலத்துடன் வாழ முடிகிறது.


mhc
**MOHAN**
**HOMEOPATHIC CLINIC & MASSAGE CLINIC**

- கழுத்து, முதுகு நோவு
- வாகன விபத்து
- மன அழுத்தம்
- விளையாட்டுக் காயங்கள்
- தலையிடி, தலைவருத்தும்

போன்ற நோய்களிற்கு அழையுங்கள் **டாக்டர் ஜே. மோகன்**



**Dr. J. Mohan**
D.H.M.S., N.H.C.

**WE OFFER CONSULTATION REGARDING ALL HEALTH PROBLEMS INCLUDING:**

- STRESS
- SKIN PROBLEM
- RESPIRATORY PROBLEMS
- DIGESTIVE PROBLEMS
- VARICOSE VEINS
- BACK PROBLEM /NECK PROBLEM
- TENNIS ELBOW PROBLEM
- TREAT WITH MASSAGE THERAP
- ALLERGIES
- SEXUAL PROBLEMS
- SEXUAL PROBLEMS
- CHOLESTEROL
- TUMOR
- FOOT PROBLEM

**HOMEOPATHIC TREATMENT ABOUT FOLLOWING**

| | | | |
|---|---|---|---|
| Cough | Tonsillitis | Migraines | Prostatitis |
| Flu | Gout | Hair Loss | Obesity |
| Depression | Arthritis | Diabetes | Hemorrhoids |
| Anxiety | P.M.S | Cystitis | Stumatitis |
| Asthma | Leucorrhea | Cancer | Colitis |

*Also other Acute & Chronic Problems*
HOMEOPATHIC PRACTITIONER

**TEL: 416-298-7537/416-291-3022**

*5200 Finch Ave, East Suite 210*
*At Middle Field, Scarborough, M1S 4Z4*





ஆரோக்கிய வாழ்வு
N. செல்வசோதி
Diploma in Yoga Therapy (India)
**416.289.2033** *after 7:00pm*
**416.617.5721**



**YOGA - MEDITATION CLASSESS**
ஆரோக்கிய வாழ்விற்கு வழிகாட்டும் மருத்துவமுறை யோகாசன பயிற்சிகள்




மூட்டுவலி - முதுகுவலி - ஆஸ்துமா - இரத்த அழுத்தம், நீரிழிவு நோய் - பெண்களின் மாதவிடாய் கோளாறுகள் - உடல் எடை - தொந்தி குறைய மற்றும் மன அழுத்தம் போன்றவற்றிற்கு நிவாரணம்.

நீரிழிவு, இருதய நோயாளிகளுக்கு தனிப்பட்ட நேரடி பயிற்சிகள்



***GTA Square Mall*** இல் புதன்கிழமைகளில் காலை 8:00 மணிக்கு வகுப்பு நடைபெறுகின்றது
தொடர்புகளுக்கு: ***Scarborough - Markham*** - செல்வ சோதி - ***416.289.2033***

# என் பார்வையில் தாய்லாந்து

அண்மையில் குடும்பத்துடன் தாய்லாந்து செல்லும் வாய்ப்புக் கிடைத்தது. தலைநகரான பாங்கொக்கில் சுகும்வித் சொய் 22 எனும் இடத்திலுள்ள ஹோட்டல் ஒன்றில் ஒரு வாரம் தங்கியிருந்து பல இடங்களுக்கும் சென்று வந்தோம். அவற்றினைத் தாய்லாந்தின் தொன்மையினைக் காட்டுபவை, நவீனத்துவத்தினைப் பிரதிபலிப்பவை என இரண்டாக வகுத்து, அவைபற்றிச் சுருக்கமாகக் கூறும் கட்டுரையே இது.

1949ஆம் ஆண்டிற்கு முன்னர் சீயம் என்று அழைக்கப்பட்ட தாய்லாந்து உல்லாசப் பிரயாணிகளின் சொர்க்கபுரி என்று கொண்டாடப்படுகின்றது. பாலியல் அநுபவங்கள், போதை மருந்துகள் என்பனவற்றுடன், மிக மலிவான விலையில் ஆடைகள், கைப்பைகள் முதலானவை வாங்குவதற்கும் சிறந்த இடம் என்று மேலைத்தேயத்தினரால் எழுதப்பட்ட பிரயாணநூல்கள் கூறுகின்றன. இவையும் தாய்லாந்தில் உண்டு எனினும் இவைதாம் தாய்லாந்து நாட்டினையும், மக்களையும், அவர்தம் பண்பாட்டினையும் வரையறுப்பவை அல்ல. 'கடந்தகாலத்தில் மேற்கத்தைய வருகையாளர் கண்களில் தாய்லாந்து ஓர் அபூர்வமான, வசீகர கீழைத்தேய அரசு என்ற பிம்பம் இருந்தது. 1950களில் அமெரிக்க இராணுவத்தினரின் வருகையும், 40,000 அமெரிக்க இராணுவ வீரர்களைத் தாய்லாந்துத் தளங்களில் நிறுத்தியமையும் உல்லாசப் பிரயாணத் துறையில் மாற்றத்தை ஏற்படுத்தின. வெளிநாட்டு உல்லாசப்பிரயாணிகளை மையமாகக் கொண்ட விபசாரத்திற்கு இவை வழிவகுத்தன. தாய்லாந்து பழைய பண்பாட்டுச் சின்னங்களைக் கொண்டது என்ற பிம்பம் மாறி, அது பாலியல், பொழுதுபோக்கு முதலான உலகியல் இன்பங்களைத் துய்த்தற்கான நாடு என்ற பிம்பம் படைக்கப்பட்டது' என்று தாய்லாந்தின் உல்லாசப் பிரயாணத் துறையின் முன்னணி சமூகவியல் ஆய்வாளர் எரிக் கொஹேன் என்பவர் கூறுகின்றார். மேலைத்தேயப் பிரயாண எழுத்தாளர்களினால் தாய்லாந்து தொடர்பாக ஒரேமாதிரியான பிம்பம் படைக்கப்பட்டு, மீண்டும் மீண்டும் கூறப்பட்டு அதுவே உண்மையான தாய்லாந்து என மற்றவர்கள் நம்ப வைக்கப்படுகின்றனர். பிரிட்டிஷ் இந்தியரான பிகோ ஐயர் கூட இதற்கு விதிவிலக்கானவரல்லர். 1988இல் வெளியான தனது நூலில் தாய்லாந்தின் பாலியல் தொழில் தொடர்பான அவதானிப்புகளையே பெரும்பாலும் அவர் பதிவு செய்திருந்தார். தாய்லாந்து பற்றிய அத்தகைய தனது இளவயதுக் கண்ணோட்டத்திற்குப் பின்னாளில் வருத்தம் தெரிவித்தார். மேனாட்டு எழுத்துகளின் தாக்கம் நம்மவர்களிடத்தும் உண்டு. பாங்கொக் செல்கிறேன் என்று எனது கணவர் நண்பர் ஒருவரிடம் சொன்னபோது, அவர் ஏன் அங்கு செல்கிறீர்கள் என்று பதறினார். குடும்பத்துடன் செல்வதாகக் கூறியதும் ஆறுதல் அடைந்தார். அற்பமான தேய்வழக்குகளிற்கு அப்பால் எந்தவொரு நாட்டினையும் சரியான புரிதலுக்காக நாம் ஆழமாக நோக்கவேண்டும் என்று முதிர்ச்சியுடன் பிகோ ஐயர் கூறும் கருத்து ஆதரிக்கப்படல் வேண்டும்.



தாய்லாந்தினை மரபுரீதியான பழமையும், நவீனத்துவமும் ஒருங்கே பொருந்திய இடமாகப் பார்க்கமுடியும். எந்தவொரு ஐரோப்பியநாட்டினதும் காலனித்துவநாடாக அது இருந்ததில்லை. 1932ஆம் ஆண்டுவரை முடிமன்னர் ஆட்சியே முழுமையாக நடைபெற்றது. 1932ஆம் ஆண்டு தாய்லாந்துப்புரட்சியின் பின்னர் நவீன உலகின் ஜனநாயகக் கருத்துகளினைப் பிரதிபலிக்கும் வகையில் மன்னரின் அதிகாரங்களைக் கட்டுப்படுத்தும் அரசியலமைப்புச் சட்டமுருவாக்கப்பட்டது. அதேசமயம் நவீனத்துவத்தின் சின்னமான சனநாயக ஆட்சி அவ்வப்போது இடம்பெற்ற இராணுவப் புரட்சிகள் காரணமாகத் தொடர்ச்சியாக அங்கு நிகழவில்லை. இப்பொழுது அங்கு இராணுவ ஆட்சியே நடைபெறுகின்றது. இது அங்கு நிற்கும் போது மனதிற்குச் சஞ்சலத்தைத் தந்தது. இன்று அரசரும், அவர் குடும்பத்தினரும், பழமையைப் பிரதிநிதித்துவப் படுத்துபவர்களாக இருக்கின்றனர். மக்களுக்கு அவர்களிடத்து அன்பும், மரியாதையும் உண்டு என்பதற்கு நிறைய அடையாளங்களைத் தாய்லாந்து வீதிகளிற் கண்டோம். நாம் சென்ற இடங்களிற் பெரும்பாலானவை - தாய்லாந்தின் பழைய தலைநகராக (1350-1767 வரை) விளங்கிய பாங்கொக்கிலிருந்து 80 கிலோமீட்டர் தூரத்திலிருந்த அயுத்தயா (அயோத்தியா), பாங்கொக் நகரிலுள்ள அரசமாளிகை, அரசமாளிகையில் அமைந்திருக்கும் புனித இடங்கள், மாளிகையின் பக்கத்தில் அமைந்திருக்கும் வத் போ (Wat Pho) ஆலயம், பாங்கொக் தேசிய அருங்காட்சியகம் என்பன - தாய்லாந்தின் பண்டைய பெருமையினையும், சிறப்பினையும் பறைசாற்றுபவை.

**- மைதிலி தயாநிதி -**

தாய்லாந்தின் தலைநகரான பாங்கொக்குக்கு செல்ல வேண்டிய தேவை உலக சமஸ்கிருத மாநாட்டினை ஒட்டி எனக்கு ஏற்பட்டதொன்றாகும். சமஸ்கிருதத்துடனும், பிராமணியப் பண்பாட்டுடனும் தாய்லாந்து மிக நீண்டகாலமாகவே தொடர்பு கொண்டது. அரசகுடும்பம் ஈடுபடும் சில சடங்குகளில் கிரியைகளினை இயற்றுபவராக தாய்பிராமணர் விளங்குகின்றனர்.

சமஸ்கிருதமொழிச் சொற்கள் பல தாய்லாந்தில் பயன்படுத்தப்படுகின்றன. தாய்லாந்தில் நான் போயிறங்கிய விமான நிலையத்தின் பெயர் சுவர்ணபூமி. இது இரு சமஸ்கிருதச் சொற்களால் ஆனது: சுவர்ண என்பது பொன் அல்லது தங்கம், பூமி என்பது இடம், நிலம். பல சமஸ்கிருதச் சொற்கள் திரிபடைந்து தாய்லாந்தில் வழங்குகின்றன. அயுத்தயா (Ayutthaya) என்பது இராமாயணத்தில் வரும் அயோத்தியா (Ayodhya) எனும் இடப்பெயரின் திரிபாகும். புரி எனும் வடசொல்லினை Buri என்றும் கல்யாணி எனும் பெயரை Galyani என்றும் எழுதுகின்றனர். இது நம்மவர் Parvathy யை Barvathy என்றும் Prem ஐ, Brem என்றும் pavitra வை Bavitra என்றும் சமஸ்கிருதப் பெயர்களைத் தவறாக உச்சரிப்பது போலாகும். தாய்லாந்து மொழியில் வடமொழியின் செல்வாக்கினை அறிந்துகொள்ள சத்யவிரத் சாஸ்திரி எழுதிய தாய்லாந்தில் சமஸ்கிருதம் என்ற ஆங்கிலக் கட்டுரையினைப் பார்க்கலாம். http://www.indologica.com/volumes/vol05/vol05_art11_Shastri.pdf. மேலும், இந்திய இராமாயணத்தின் செல்வாக்கும் தாய்லாந்தில் நிறையவே காணப்படுகின்றது. பாங்கொக் அரசமாளிகையில் தாய்லாந்து இராமாயணக் கதைநிகழ்ச்சிகள் கிரமமாக 178 சுவரோவியங்களாக வரையப்பட்டுள்ளன. சக்ரி (Chakri) வம்சாவளி அரசர்கள் இராமனின் தலைநகரான அயோத்தியை தமது தலைநகரின் பெயராக வைத்துக்கொண்டதுமல்லாமல், தம்மை முதலாவது இராமர், இரண்டாவது இராமர் என்றே அடையாளப்படுத்தினர். தற்பொழுதுள்ள அரசர் ஒன்பதாவது இராமர் ஆவர்.

பேராசிரியர் பேஜர் தாய்லாந்தில் உல்லாசப் பிரயாணம் எனும் நூலில் தாய்லாந்து பற்றிய பிம்பத்தினை அமெரிக்காவிற்கு எதிர்ப்பண்புகள் கொண்டதாகக் கட்டமைக்கின்றார். எடுத்துக்காட்டாக, இரு நாடுகளுக்கும் இடையிலுள்ள வேறுபாடுகளை அவர் குறிப்பிடும்பொழுது அமெரிக்கா கிறிஸ்தவ மதத்தினையும், தாய்லாந்து பௌத்த மதத்தினையும் தழுவியுள்ளனவாகக் குறிப்பிடுகின்றார். இக்கூற்று எவ்வளவு தூரம் சரியானது என்பது கேள்வி. முதலாவதாக இக்கருத்து தாய்லாந்தின் தென்மாகாணங்களில் கடைப்பிடிக்கப்படும் இஸ்லாம் மதத்தைத் துளியும் கணக்கெடுக்கவில்லை. இரண்டாவதாக நான் அவதானித்தவரையில் இங்குள்ளவர்கள் பல்சமய வணக்கத்தவர்களாக இருக்கின்றனர். பௌத்தம், ஆன்மவாதம் அல்லது ஆவியுலகக் கோட்பாடு (animism), பிராமணிய இந்து மதம், தமிழ் சைவம் என்பன இவர்கள் வாழ்வியலில் ஒன்றுக்கொன்று பிரிக்கவியலாதவாறு கலந்துள்ளன.

முற்காலத்தில் தாய்லாந்தில் பௌத்தம் செழித்திருந்தமைக்கு நாம் சென்ற இடங்களிற் காணப்பட்ட பௌத்த வழிபாடு தொடர்பான கட்டிடங்கள், சின்னங்கள் என்பன சான்று பகர்கின்றன. நாம் கண்ட புத்தர் சிலைகள் எண்ணற்றவை. அவற்றுள் சில பிரசித்தமானவை. பழந்தலைநகரான அயுத்தயாவில் சிதைந்த மடங்கள்,

தொடர்ச்சி 18ஆம் பக்கம்

CEDARGREEN COIN LAUNDRY & DRY CLEAN DEPOT
" VERY CLEAN LAUNDRY" Avoid The Rush ..... Come during weekdays!
• Large laundry Folding Tables, Lots of Space • We offer wash, Dry & fold at .99Cents /lb
Commercial
. We Clean Commercial Linens, Aprons, & Towels • We Clean Uniforms Dry Clean or Wash & Dry
. We Clean Towels/Sheets from Daycare, Clinics, Hair Saloon, Nail Spa, Restaurants etc
STORE - TEL : 416.289.7514 / OWNER SAM - CELL: 416.732.9383

OPEN DAILY 8 am – 11 pm
Sat. & Sun 7 Am – 11 pm
(Near Bellamy & Lawrence – find us in GOOGLE !!) 3340 Lawrence Ave. East, Unit 5, Scarborough, ON M1H 1A7

# என் பார்வையில்...

17ஆம் பக்கத்தொடர்ச்சி

தூபிகள், கோயில்கள், புத்தர் சிலைகள் காணப்படுகின்றன. தலை, கைகள் உடைக்கப்பட்ட புத்தர் சிலைகளை மகாதத் எனும் கோயில் வளாகத்தில் காணலாம். அயுத்தயாவின் அழிவிற்கு இன்னொரு தேரவாத பௌத்தநாடான பர்மாதான் காரணம் என்று அறியும்போது ஆச்சரியமாக இருந்தது. இந்தப் பேரழிவுகளைக் கொண்ட மகாதத் கோயில் வளாகத்தில் ஒரு மரத்தின் அடிப்பகுதியில் செதுக்கப்பட்டி ருக்கும் புத்தரின் தலை மிகப் பிரசித்த மானது. அதேபோன்று லோகயசுதரம் என்ற கோயில் வளாகத்தில் 42 மீட்டர் நீளமான சயனநிலையிலுள்ள புத்தர் சிலை, பாங்கொக் அரசமாளிகைக்குப் பக்கத்தில் உள்ள வத் போ ஆலயத்தில் தங்கமுலா மிடப்பட்ட சயன நிலையில் உள்ள 43 மீட்டர் நீளமும், 15 மீட்டர் உயரமும் கொண்ட புத்தர் சிலை, அரசமாளிகையில் அமைந்துள்ள ஆலயமொன்றில் காணப்படும் மரகத-பச்சைநிற-புத்தர் சிலை என்பன கவனத்தை ஈர்ப்பன. பாங்கொக் தேசிய அருங்காட்சியகத்திலும் எண்ணற்ற கல்லா லான புத்தர் சிலைகளைப் பார்த்தோம். அவை உருவாக்கப்பட்ட வரலாற்றுக்கால அடிப்படையில் வடிவமைப்பில் தம்முள் வேறுபடுகின்றன.

தாய்லாந்து தேரவாதபௌத்தநாடு என்று இன்று அடையாளம் காணப்பட்டாலும் கூட, ஆன்மவாதம் அல்லது ஆவியுலகக் கோட்பாடு (animism) என்று சொல்லப்படும் சுதேசநம்பிக்கைகளின் அடிப்படையின் மேலேதான் பௌத்தசமயம் கட்டி எழுப்பப்பட்டுள்ளது. பௌத்தம் நல்ல மறுபிறப்புக்கு இட்டுச் செல்ல உதவும் என்று தாய்லாந்து மக்கள் நம்பும் அதேவேளை, ஸ்பிரிட்ஸ் (spirites) என்று வகைப்படுத்தப்படுவனவற்றினைப் பாதுகாப்புக் காகவும், இவ்வுலக நன்மைகள் வேண்டியும் வணங்குகின்றனர். இந்நோக்கங்களிற் காகவே பிராமணிய இந்துக் கடவுளரையும் அவர்கள் வணங்குகின்றனர். அருங்காட்சி யகத்தில் இக்கடவுளர் பலரின் சிலைகள் காணப்படுகின்றன. பாங்கொக் தெருவோரங் களில் விநாயகர் சிலைகள் தாபிக்கப் பட்டுள்ளன. நாங்கள் தங்கிய ஹோட்டலின் வீதியிலும் விநாயகர் வீற்றிருந்தார். பிற இடங்களிற் காணவியலாத பிரமாவுக்குரிய கோயிலும் பாங்கொக்கில் உண்டு.

தமிழ்ச் சைவத்தின் செல்வாக்கினையும் தாய்லாந்தில் காணலாம். தாய்லாந்து அரச-னின் முடிசூட்டு விழாவிலும், அரச ஊஞ்சல் விழாவிலும் பாடப்படுபவை மாணிக்கவாசக ரின் திருவெம்பாவைப் பாடல்கள் என்று தனிநாயகம் அடிகள் கூறுகிறார். மலாயா பல்கலைக்கழகத்தில் தமிழ்ப்பேராசிரியராக இருந்த சிங்காரவேலு என்பவர், தாய்லாந்து அரசகுடும்ப புரோகிதரும், பாங்கொக் பிரமா கோயிற்பூசாரியும் கூறும் மந்திரங்கள், தேவாரமுதலிகளின் தேவாரங்களும், மாணிக்கவாசகரின் திருவெம்பாவையும் என்று உறுதி செய்கின்றார். பாங்கொக்கில் சிலோம் என்ற இடத்தில் உள்ள தென்னிந்தியத் தமிழர் கட்டியுள்ள மாரி அம்மன் கோயிலுக்குச் சென்றோம். மூலஸ்தானத்தில் தேவியின் விக்கிரகம் வைக்கப்பட்டு வழிபாடு செய்யப்படுகின்றது. நடராஜர் முதலிய வேறு தெய்வங்களுடன் புத்தரும் வழிபடப்படுகின்றார். அந்தணர்கள் பூசை செய்யும் இக்கோயிலின் வாயிலின் ஒருபுறத்தில் ஓம் சக்தி ஓம் என்று தமிழில் எழுதப்பட்டிருந்தது. இங்கு கூட்டுபஜனை யின்போது தேவார திருவாசகங்கள் ஓதப்படுவதாக மறவன்புலவு சச்சிதானந்தம் கட்டுரை ஒன்றில் குறிப்பிடுகின்றார்.

நாம் தாய்லாந்தில் சென்ற இடங்களுள் நவீனத்துவத்தினதும், மேற்கத்தைய பண்பாட்டு ஆதிக்கத்தினதும் சின்னங்களாக இருப்பவை மூன்று: ஜிம் தோம்சனின் வீடு, mall எனப்படும் பேரங்காடி, Wildlife



Friends of Thailand எனும் அரசு சாரா இயக்கம் நடத்தும் வனவளப்பாதுகாப்பு நிலையம். மேற்கத்தைய நாட்டுத் தாக்கத்தின் ஆரம்ப அடையாளங்களுள் ஒன்றாக இருக்கும் ஜிம் தோம்சனின் வீடு தற்பொழுது ஒரு அருங்காட்சியகமாக விளங்குகிறது. தேக்குமரத்திலாலான இவ் வீட்டில் அவர் உள்நாட்டிலும், கம்போடியா, சீனா, பர்மா முதலிய நாடுகளிலிருந்தும் சேகரித்த பொருட்கள், தளவாடங்கள் என்பன காட்சிக்கு வைக்கப்பட்டிருக்கின்றன. அமெரிக்கப் பிரஜையான அவர் இரண்டாம் உலக மகாயுத்த கால அமெரிக்க உளவு நிறுவனமான OSS இல் பணிபுரிந்தபோது, அக்கால கட்டத்தில் தாய்லாந்தினை ஆக்கிரமித்திருந்த ஜப்பானியப் படைகளி மிருந்து தாய்லாந்தினை மீட்கும் பணியில் ஈடுபட்ட விடுதலை இயக்கத்துடன் (Free Thai Movement) சேர்ந்து பணிபுரிவதற்காக ஆசியாவிற்கு அனுப்பப்பட்டார். ஒரு காலத்தில் பாங்கொக்கில் மிகச்செல்வாக் காக விளங்கிய ஜிம் தோம்சன் 1967இல் மலேசியாவிற்குச் சென்றபோது காணாமல் போனார். அவருக்கும், அமெரிக்க உளவுத் துறைக்கும் (CIA) இடையில் பிணக்குகள் இருந்ததாகத் தெரிகிறது. பட்டு நெய்யும் முஸ்லிம் நெசவாளர்களை வேலைக் கமர்த்தி, தாய்லாந்து பட்டு வியாபாரத்திற்குப் புத்துயிர் ஊட்டியவர் என்று சொல்லப்படுகின்றார். இன்றும் இங்கு பட்டுப்பூச்சியிலிருந்து எவ்வாறு நூல் எடுப்பது என்று இவ்வீட்டு முன்றிலில் வைத்துக் காட்டப்படுகின்றது. ஜிம் தோம்சனின் வீடு 1950களிலும், 1960களிலும் அதன் பின்னரும் தாய்லாந்தில் தொடர்ந்த அமெரிக்க இராணுவத் தலையீடுகளினைத் தான் எனக்கு நினைவுபடுத்தியது. காலனி த்துவ நாடாக இராதபோதும், தாய்லாந்து இரண்டாம் மகாயுத்தகாலத்தின் பின்னர் அமெரிக்காவின் செல்வாக்கிற்கு அடிபணிய நேரிட்டது. தென்கிழக்காசியாவில் தனது இராணுவத் தளமாகத் தாய்லாந்தினை வைத்துக்கொள்ள விரும்பிய அமெரிக்கா நிதி உதவிகளைச் செய்ததுடன், இராணுவ கூட்டு முயற்சிகளையும் முன்னெடுத்தது. அவை தாய்லாந்தினை நவீன நாடாக மாற்றத் துணை புரிந்திருக்கின்றன. அதே சமயம் தாய்லாந்து மக்களின் சமூகவியலி லும் மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளன.

பல மாடிகள் கொண்ட பாங்கொக் பேரங்காடிகளில் வட அமரிக்காவில் கிடைக்கும் ப்ராண்ட் (brand) பொருட்கள், கார் உட்பட, விற்பனை செய்யப்படுகின்றன. சயாம் பரகன் பேரங்காடிக்குச் சென்று அங்குள்ள பரகன் சினிப்லக்ஸில் 4டி திரைப்படம் பார்த்தமை ஒரு வித்தியாசமான அநுபவமாக இருந்தது. படம் தொடங்கு முன்னர் அரசகீதம் பாடப்படுகிறது. அச் சமயம் யாவரும் எழுந்து நிற்க வேண்டும்.

தாய்லாந்தில் நின்ற இறுதிநாள் நாம் பெச்சபுரி எனும் இடத்தில் Wildlife Friends of Thailand எனும் அரசு சாரா இயக்கம் நடத்தும் வனவளப்பாதுகாப்பு நிலையத்திற்குச் சென்றோம். கைவிடப்பட்ட அல்லது துன்புறுத்தப்பட்ட யானைகள், குரங்குகள், கரடிகள், பறவைகள் முதலியன இங்கு தன்னார்வத் தொண்டூழியர்கள் மூலம் பராமரிக்கப்படுகின்றன. டச்சுக்காரரான Edwin Viek என்பவரினால் தோற்றுவிக்கப் பட்ட இந்நிலையம் சர்வதேச தாபனங்களி லிருந்து தனது திட்டங்களுக்கு நிதி உதவி பெறுகிறது. ஆங்கிலப்பெண்மணி ஒருவர் எம்மைப் பல இடங்களுக்கும் அழைத்துச் சென்று விளக்கமளித்தார். யானைகளையும் குரங்குகளையுமே இங்கு அதிகம் கண்டோம். பௌத்தபிக்குகளால் நடத்தப் படும் புலிக்கோயிலில் (Tiger Temple) மிருகங்கள் துன்புறுத்தப்படுவதாகக் கூறினர். சமையலுக்கு, வாகனம் ஓட்டுவதற்கு, யானையைக் கட்டுப்படுத்துவற் கென சில வேலைகளுக்கு நியமிக்கப்பட்ட தாய்லாந்து ஊழியர்களைத்தவிர, அன்று அங்கிருந்த தன்னார்வத் தொண்டூழியர்கள், அந்த நிலையத்தைப் பார்வையிடவந்த உல்லாசப்பிரயாணிகள் அனைவரும் (எம்மைத் தவிர) வெள்ளை நிறத்தினராக இருந்தனர்.

அவ்வமைப்பின் செயற்பாடுகளை ஆறு மணித்தியாலங்கள் அவதானித்தபின்னர் பாங்கொக் திரும்பும்போது பல கேள்விகள் மனதில் எழுந்தன. உயிர்களிடத்துக் கருணையினைப் போதிக்கும் பௌத்தமதம் நிலைபெற்ற நாட்டில், மனிதனுக்காகவே அனைத்து உயிர்களும் படைக்கப்பட்டன என்ற கருத்தியற் பின்புலத்தைக் கொண்ட மேலைத்தேயத்தினர், உல்லாசப்பிரயாணத் துறையில் அதிகமாக உபயோகிக்கப்பட்ட தால் பாதிப்புற்ற விலங்குகளைப் பராமரிப்பதும், விலங்குகளைத் துன்புறுத்தல் வேண்டாம் என்று புலிக்கோயில் பிக்குகளை நோக்கி குரல் கொடுப்பதும் முரணகையாக இருந்தது. எவ்வளவு தூரத்திற்கு இத்தகைய நிறுவனம் உள்ளூர் மக்களுக்கு விழிப்புணர்வு அளிக்கிறது, எவ்வாறு அவர்களையும் தனது திட்டங்களில் பங்காளிகளாக ஆக்க முயல்கின்றது, எத்தகைய கற்பித்தற் செயற்பாடுகளை தாய் மக்களின் அறிவுப் பெருக்கத்திற்காக முன்னெடுக்கின்றது என்பவை போன்ற விடயங்களை எமது வழிகாட்டியாக இருந்த அம்மையார் தொடவே இல்லை. இவ்வமைப்பின் செயற்பாடு - தாய்லாந்து மக்களிடமிருந்து, அவர்கள் நாட்டின் தேசிய அடையாளச் சின்னமான யானையை, அவர்களின் முக்கிய பங்களிப்பின்றி, காப்பாற்ற முயல்வது என்பது ஒருவிதமான சுற்றாடற் காலனித்துவம் (Environmental imperialism) என்றே என்மனதில் பட்டது. ஜிம் தோம்சன் இல்லத்தில் பட்டுப்பூச்சிகள் பட்டுக்காகக் கொல்லப்படுவது இவர்கள் கவனத்தினை ஏன் ஈர்க்கவில்லை?

இறுதியாகத் தாய்லாந்துப் பெண்களைப் பற்றியும் குறிப்பிடல் வேண்டும். பாங்கொக் கின் பொது இடங்களில் அவர்களின் எண்ணிக்கை ஏறத்தாழ ஆண்களின் எண்ணிக்கைக்குச் சமமாக இருக்கும்போல் தோன்றியது. நல்ல உழைப்பாளிகளான பெண்களைக் கண்டோம். எமது ஹோட்டலின் வரவேற்பாளர், அறையினைச் சுத்தம் செய்பவர், அருங்காட்சியகத்தில் பணிபுரிபவர் என்பவர்களுடன், சிறிய உணவகங்களினை நடத்துபவர்களாயும், வண்டி ஓட்டுநராயும், வத் போ ஆலயத்துடன் அமைந்துள்ள சுதேச மருத்துவ நிலையத்தில் தொழில் முறை மசாஜ் செய்பவர்களாயும், உல்லாசப் பிரயாணிகளுக்கு வழிகாட்டிகளாகவும், வெவ்வேறு பணிகளில் ஈடுபட்டுள்ள பெண்களைக் கண்டோம். தாய்லாந்தில் நாம் சந்தித்த இரு பெண்கள் பற்றி விசேடமாகக் கூறல் வேண்டும். ஒருவர் அயுத்தயாவில் புகையிரதநிலையத்தில் இருந்து ஓட்டோவை நிகர்த்த 'டுக் டுக்' எனும் வாகனத்தில் எமை ஏற்றிச்சென்று, 'ஜெ' உணவு எனப்படும் தாய்லாந்து சைவ உணவகத்தில் (ஜெ (Jay) உணவு அதன் பெயரை ஜைனம் எனப்படும் சமண மதத்திலிருந்து பெற்றுக்கொண்டதாகச் சொல்லப்படுகின்றது.) எமை இறக்கி விட்டுப் பின்னர் காரில் வந்து எமை அழைத்துச் சென்று அயுத்தயா கோவில்கள் காட்டிய பெண். சிறுநகர் சார்ந்த அப்பெண்ணிடம் காணப்பட்ட துணிவும் தைரியமும் மெச்சத்தக்கது. அதேபோன்று, பாங்கொக் நகரில் அரசமாளிகை, வத் போ ஆலயம், என்பனவற்றுக்கு செல்ல நாம் அமர்த்திய பெண் வழிகாட்டி மூலமாகத் தாய்லாந்தின் குடும்ப பொருளாதார அமைப்பில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் பற்றி அறியக் கூடியதாக இருந்தது. ஆண்களுக்கு நிகரா-கப் பெண்களும் கிராமங்களிலிருந்து பொது வெளிக்கு வேலைக்கு வந்தமையையும், அவர்கள் குழந்தைகளினைக் கிராமங்களில்

தொடர்ச்சி 19ஆம் பக்கம்

# அன்புடைமை - 23

கடந்த சில இதழ்களில் அன்பின் மிகவும் முக்கிய வடிவமாக உள்ள காதல் பற்றிப் பல்வேறு ஆய்வுத் தகவல்களுடன் உரையாடி வந்தோம். இந்த இதழில் தாயன்பு பற்றி உரையாடுவோம். தாய் பிள்ளைகள் மேல் கொள்ளும் அன்பு மிகவும் தூய்மையானது. இது மிகவும் உயர்ந்தது. அன்பு என்றதும் எமது மனத்தில் முதலில் தோன்றுவது தாயன்பு. அதன் பின்பே காதல் வருகின்றது. பாசம், நேசம் போன்ற அன்பின் எல்லா வடிவங்களும் ஒன்று சேர்ந்து தாய் பிள்ளை உறவை ஆக்கிரமிக்கின்றன. ஆனாலும் பிஞ்சுக் குழந்தைகள் பெற்றோரால் அனாதைகள் ஆக்கப்படும் நிலையையும் இவ்வுலகில் காண்கின்றோம். மிச் அல்பொம் அவர்களின் முதுமொழி "உங்கள் தாயின் கண்களைப் பார்க்கும்பொழுது அதுவே இவ்வுலகில் தூய்மையான அன்பு என்று தெரியும்" என்பதாகும். ("When you look into your mother's eyes, you know that is the purest love you can find on this earth." – Mitch Albom). டிபாசிஸ் மிரிதா அவர்களின் முதுமொழி "ஒரு தாயின் அன்பு எந்தப் புதிய பூவினை விடவும் அழகானது" (A Mother's Love is more beautiful than any fresh flower. – Debasish Mridha) என்பதாகும். "பிரார்த்தனை செய்யும் தாய் உலகத்தில் உள்ள எல்லாச் செல்வங்களை விடவும் மேலானது" என்பது வயலெற் ஜேம்ஸ் அவர்களின் முதுமொழி. ("A praying mother is more precious and valuable than all the riches in the world" – Violet James). "அன்பினால் நாம் பிறந்தோம். எங்கள் தாயே அன்பு என்பது ரூமி அவர்களின் முதுமொழி ("We are born of Love; Our Love is our Mother" – Rumi).




ஒரு குழந்தை சிறு வயதில் ஆரோக்கியமாக அன்புடன் வளர்க்கப்படும் பொழுது குழந்தையின் மூளையில் காணப்படும் ஹிப்போகம்பஸ் (Hippocampus) பெரிதாக வளர்ச்சியடைகின்றது. இந்த உறுப்பு கற்றலுக்கும், நினைவாற்றலுக்கும், அழுத்தங்களை கையாள்வதற்கும் பயன்படும் மூளையின் முக்கிய உறுப்பாகும். மூளையின் படங்கள் மூலம் செய்யப்பட்ட ஆய்வில் இருந்து முக்கியமாக தாய் அன்பு குழந்தையின் ஹிப்போகம்பஸ்



பெரிதாக வளர்ச்சியடைய உதவுகின்றது என அறிய முடிகின்றது. நினைவாற்றலுக்கும் ஹிப்போகம்பஸ் இற்கும் இடையில் நேரடித் தொடர்பு உள்ளது. வாசிங்டன் பல்கலைக்கழக மருத்துவக் கல்லூரி ஆய்வாளரும், மனநல மருத்துவருமான ஜோன் லியுபி இந்த ஆய்வுத் தகவலை வெளியிட்டுள்ளார். இந்த ஆய்வில் பங்கேற்ற தாய்மார்களில் 95 வீதமானவர்கள் குழந்தைகளைப் பெற்றெடுத்த தாய்மார்களாக இருந்தாலும், குழந்தைகளை அன்பாக வளர்க்கும் பராமரிப்பாளர்கள் அனைவருக்கும் இந்த ஆய்வின் முடிவு பொருந்தும் என்றும் கூறப்பட்டுள்ளது. இந்த ஆய்வுத்தகவல் தேசிய விஞ்ஞானக் கல்லூரியின் ஆய்வுச் சஞ்சிகையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த ஆய்வு 92 குழந்தைகளில் மேற்கொள்ளப்பட்டது.

உலகில் உள்ள எல்லாத் தாய்மார்களும் குழந்தைகள் மீது அன்பு செலுத்துகின்றார்கள் என்றாலும் அவர்கள் அன்பு செலுத்தும் விதம் வித்தியாசமாக உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. பிள்ளைகள் மீது அன்பு செலுத்துதல், பிள்ளைகளை முழுமையாக ஏற்றுக்கொள்ளுதல், அவர்களின் பெறுமதியை மதித்தல் போன்றவை எல்லாத் தாய்மார்களின் முக்கியமான பொறுப்புக்களில் சில எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. சில தாய்மார்கள் அன்பினை நேரடியாகவும், சிலர் மறைமுகமாகவும் செலுத்துவது வழக்கம் என நாம் நன்கு அறிவோம். புறக்கணிக்கப்பட்ட மூன்று வயதுக் குழந்தை ஒன்றின் மூளை சராசரி மூன்று வயதுக் குழந்தையை விட மிகவும் சிறியதாகக் காணப்பட்டதாகக் கண்டறியப்பட்டது. அமெரிக்காவினைச் சேர்ந்த பேராசிரியர் அலன் ஸ்கோர் "ஒரு குழந்தையின் முதல் தொடர்பு தாய். இந்த தொடர்புதான் அந்தப் பிள்ளைக்கு நிரந்தரமாக அந்தப் பிள்ளை வளர்ந்த பின்பு ஏற்படும் எல்லாத் தொடர்புகளுக்கும் அடிப்படையாக அமைகின்றது" என்று குறிப்பிட்டுள்ளார். தாய் குழந்தைகள் மீது அளவில்லா அன்பு செலுத்துவதற்கே இயற்கையாக வடிவமைக்கப்பட்டவர். ஆனால் ஒரு தாயின் சீரற்ற உடல் நிலை, மனவழுத்தம், பொருளாதாரக் குறைபாடு, குடும்ப உறவுகளில் ஏற்படும் குறைபாடுகள் போன்ற காரணிகளால் பாதிக்கப்படும் பொழுது குழந்தைகள் மீது செலுத்தப்படும் அன்பிலும் பாதிப்பு ஏற்படுகின்றது. தாய் அன்பு ஒரு பிள்ளையின் வளர்ச்சியில் எவ்வளவு முக்கியமானது என்பதை இங்கு குறிப்பிட்ட தகவல்கள் நன்கு வலியுறுத்துகின்றன. பிரசவ காலத்தில் தாய்மாரில் ஒக்சிரோசின் (Oxytocin) என்ற ஹோமோன் (Hormone) அதிகரிக்கப்பட்டு குழந்தைகள் மீது அன்பு செலுத்துவதற்கு உதவும் ஹோமோன் ஆகவுள்ளது. இதனால் இந்த ஹோமோன் அன்புக்குரிய ஹோமோன் (Love Hormone) என்றும் அழைக்கப்படுகின்றது. தாய் அன்பு ஒரு குழந்தையின் எதிர்காலத்திற்கு பெரும் பங்கை வகிக்கின்றது என்பதில் ஐயமில்லை.

அன்புடைமை பற்றி ஆய்வு செய்யும் இந்தத் தொடர்கட்டுரையில் தாய் அன்பு பற்றியும் ஆராய்வது மிகவும் முக்கியமானது என்ற நோக்கில் இந்த இதழில் தாய் அன்பு பற்றிப் பல தகவல்களைப் பரிமாறிக்கோண்டோம்.

அன்புடைமை பற்றித் தொடர்ந்து உரையாடுவோம். உங்கள் எண்ணக் கருத்துக்களை எழுதுங்கள். அடுத்த இதழில் மீண்டும் சந்திப்போம்.

நன்றி. வணக்கம். தொடரும்.



- அகணி -
authorakani@yahoo.com

# என் பார்வையில்...

இருக்கும் பெற்றோர் கவனித்துக் கொள்வதையும் பற்றிக் கூறினர். அதேசமயம் பெண்கள் பொது வெளியில் வேலைக்கு வருவதற்கு தாய்லாந்தின், வடக்கு, வடகீழ்ப் பகுதியில் நிலவிவரும் பெண் சொத்துரிமை கொண்ட சமூக அமைப்பில் பெண்ணுக்குத் தனது பெற்றோரையும், குடும்பத்தினையும் காப்பாற்ற வேண்டிய நிர்ப்பந்தம் இருப்பதாக ஆய்வாளர்கள் கூறுவதும் இங்கு கவனிக்கத்தக்கது. எமது வழிகாட்டியான அவர் தாகசாந்திக்கு வாங்கிய பானத்திற்கு காசினை நாமே கடைக்காரரிடம் கொடுக்க முனைந்தோம். ஆனால் அப்பெண் அதை மறுத்து விட்டார்.

தாய்லாந்து பண்பாட்டு ரீதியில் இலங்கை, இந்தியா போன்ற தென்னாசிய நாடுகளினை ஒத்தது. எனினும் மூன்று விடயங்களில் அவற்றிலிருந்து வேறுபட்டிருந்தது. முதலாவது அங்குள்ளவர்களின் மென்மை யான பேச்சு. அவர்கள் குரலை உயர்த்திப் பேசுவது அபூர்வம். பெரும்பான்மையோர் மென்மையான குரலில் அதிராமற் பேசுகிறார்கள். இரண்டாவது, வீதிகளில் வாகனங்கள் ஹோர்ண் அடித்ததை நாம் கேட்கவில்லை. மிக அவசியம் என்றாற் தவிர தேவையில்லாமல் அதனைப் பயன் படுத்துவது கிடையாது. பொது வாகனத்தில் இருப்போரும் சத்தமிட்டுக் கதைப்பதில்லை. எனவே, பாங்கொக்கின் நன்கறியப்பட்ட வாகன நெரிசலில் மெதுவாகச் சென்று கொண்டிருக்கும் வாகனத்தில் இருந்து கொண்டு ஒருவர் அமைதியான தியானத்தில் ஆழ்ந்திருக்க இயலும்.



மூன்றாவதாக வீதிகளில் கடதாசிக் குப்பைகள் காணப்படாததும் ஆச்சரியமாக இருந்தது. தூய்மையின் தராதரம் (standards of cleanliness) தாய்லாந்தில் உயர்வாக இருப்பது போற் தெரிந்தது.

பாங்கொக் சென்றால் தவறாது பார்க்க வேண்டியது ஒன்று உண்டு என்றால் அது Siam Nimrat என்ற 150 கலைஞர்கள் பங்கெடுத்துக்கொள்ளும் கலைநிகழ்ச்சியாகும். அமைதியான, மென்மையான நடனமும், தொழில்நுட்பமும், வாத்திய இசையும் செவிக்கும், கண்ணுக்கும் பெருவிருந்தாக இருந்தன. இது தாய்லாந்தின் வெவ்வேறு பிரதேச மக்களின் வாழ்வியலையும், அவர்களின் சமய நம்பிக்கைகளினையும், சமய விழாக்களையும் சித்திரிக்கும் உன்னத கலைத்தரம் கொண்ட படைப்பாகும். கிழக்கும், மேற்கும் இணையும் தாய்லாந்தில் ஒருவாரகாலம் ஒருநொடிபோல் கழிந்தது.

கனேடியச் செய்திகளுக்கான
முதன்மைத் தளம்
தமிழ்வணக்கம்.கொம்
www.tamilvanakkam.com

# அந்நியர்களும் அபூர்வ விமானங்களும் UFO's & Aliens

## (சுவாரசியமான அறிவியற் தகவல்களைக் கொண்ட தொடர்)

# ஏரியா 51இன் மர்மங்கள்

சென்ற தடவை றொஸ்வெலின் விமான விபத்தின் எச்சங்களும், அந்நியர்களின் உடல்களும், உயிருடன் சில அந்நியர்களும் ஏரியா 51இற்கு கொண்டு செல்லப்பட்டிருக்கலாம் என்ற விபரங்களைப் பார்த்தோம். இன்று உலகினருக்குத் தெரியாமல், ஏரியா 51இன் உள்ளே என்னென்ன நிகழ்ந்தன என்று ஆய்வாளர்கள் கூறுபவற்றைத் தெரிந்து கொள்வோம். இவையெல்லாம் அதிகாரிகளால் இரகசியமாகவும், வலுக்கட்டாயமாகவும் ஏரியா 51இன் உள்ளே கொண்டு செல்லப்பட்ட வல்லுனர்களின் வாய்வழியாக வந்தவை என்றே கூறுகின்றார்கள்.

ஏலியன்களை வைத்திருந்த அறையைச் சுத்தம் செய்தவர் தந்ததாகக் கூறப்படும் விபரங்களை முதலிற் பார்ப்போம். இவர் ஏரியா 51இன் நிரந்தரமான ஊழியர். றொஸ்வெல் விவகாரத்தை அவ்வளவாகத் தெரிந்திருக்கவில்லை. ஏரியா 51இற்கு றொஸ்வெல் பொருட்கள் கொண்டு செல்லப்

உங்களது கருத்துக்களை விளம்பரத்திற்கோ அல்லது எனக்கோ தெரிவிக்கலாம். எனது புதிய வெளியீடுகளாகிய புவியீர்ப்புப் பற்றிய வியப்பான விஷயங்கள், வியத்தகு விண்மீன்கள் ஆகிய நூல்களை விளம்பரம் காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

பட்டதின் பின்னராகச் சில காலங்களில் சில கால விடுப்பில் வீட்டுக்கு வந்தவரிடம் அரச அதிகாரிகள் அவ்வளவு கடுமையாக இருக்கவில்லையோ என்னவோ சில விபரங்களை யூஎவ்ஓ ஆய்வாளர்களுக்கு கூறிவிட்டார். தான் அங்கு வேலையில் இருந்த சமயம் ஒருநாள் குறிப்பிட்ட அறை ஒன்றினைத் துப்பரவு செய்கையில் ஏலியன்களின் உடல்களை பிரத்தியேகமான கட்டில்களில் கண்டதாகக் கூறியிருந்தார். அவ்வுடல்களைச் சுற்றிச் சில வைத்தியர்கள் நின்று ஏதோ செய்து கொண்டு இருந்ததாகவும் வேறும் சிலர் மேற்பார்வை செய்து கொண்டும், கண்காணித்துக் கொண்டும் இருந்ததாக அவர் குறிப்பிட்டு இருந்தார். சிலர் சீருடையில் அவ்வறையில் காவலில் நிற்பது போல நின்றதாகவும் கூறியிருந்தார். ஏரியா 51இன் உள்ளேயே தனிமைப்படுத்தப்பட்டிருந்த அப்பகுதிக்குள் தற்செயலாகச் சென்ற அவர் அக்காட்சியைக் கண்டு திகைத்து விட்டாராம். உண்மையில் அப்பகுதிக்கு அவர் சென்றிருக்கக் கூடாதாம். உள்ளுணர்வால் எச்சரிக்கப்பட்ட அவர், தன்னைச் சுதாகரித்துக் கொண்டு அவ்விடத்தை விட்டு இயல்பாகவே நழுவிவிட்டதாகக் குறிப்பிட்டு இருந்தார். இது றொஸ்வெல் விபத்து நடந்த ஒருசில நாட்களின் பின்னராகும் என்றும் கூறியிருந்தார்.

இவரின் கூற்றினை அரச அதிகாரிகள் மறுத்து விட்டார்கள். தன்னைப் பிரபலப்படுத்திக் கொள்ளவோ அல்லது யூஎவ்ஓலோயிஸ்றுகளின் பணத்திற்காகவோ அப்படிக் கூறியிருக்கலாம் என அவர்கள் கூறியிருந்தார்கள். அத்துடன் தனது பெயர் குறிப்பிட்டுச் சொல்லாத நபரின் கூற்றினை எப்படி நம்புவது என்ற ஒரு கருத்தினையும் பொதுமக்களிடையே எப்படியோ பரப்பிவிட்டார்கள். ஆனால் விடயம் அத்துடன் நின்று விடவில்லை. துப்பரவு செய்பவரின் கூற்றினை உறுதிப்படுத்துவது போன்ற விபரத்தினை இன்னொருவர் யூஎவ்ஓ ஆய்வாளர்களுக்கு கூறினார்.

ஏரியா 51க்கு அழைத்துச் செல்லப்பட்ட அவர் சவப்பெட்டிகள் தயாரிப்பதில் பெயர் பெற்றவர். அவருக்கு அங்கே கொடுக்கப்பட்ட பணி, குறிப்பிட்ட வடிவில் அமைந்த 3 சவப்பெட்டிகளைச் செய்வதே. அச்சவப்



பெட்டிகள் சாதாரணமான போன்ற அமைப்பில் இருக்காததால், அவை வேறு பிராணிகளுக்கானவையாக இருக்க வேண்டும் என யூஎவ்ஓலோயிஸ்றுகளிடம் கூறியிருந்தார். அவர் இதற்கு முன்னர் ஒரு தடவையும் ஏரியா 51ன் உள்ளே சென்றதில்லை எனவும் கூறியிருந்தார். அவர் கொண்டு வரப்பட்டு இருந்த இடம் ஏரியா 51 என்று கூட அவருக்குத் தெரியாது. அங்கிருந்த காலத்தில் அவரை ஏரியா 51ன் மற்ற எந்தப் பகுதிக்கும் செல்ல அங்கிருந்தவர்கள் அனுமதிக்கவில்லை. தேவையான பொருட்களும் உதவிகளும் அங்கிருந்தவர்களால் உடனடியாகவே கொடுக்கப்பட்டதாகக் கூறிய அவர், தான் எந்தவொரு ஏலியனின் உடலையும் காணவில்லை என்றும் கூறியிருந்தார். ஆனால், அவர் செய்து கொடுத்திருந்த சவப்பெட்டிகள் மூன்றும் மனிதருக்கானவையாக இருக்க முடியாது என்று அடித்துக் கூறியிருந்தார்.

றொல்வெல் பற்றியும் ஏரியா 51 பற்றியுமான யூஎவ்ஓ ஆய்வாளர்களின் பரபரப்பான தகவல்கள் தொடர்ந்தன. ஏலியன்களின் உடலின் உறுப்புகள் அமைந்திருந்த இடங்களையும் அவற்றின் அமைப்புகளையும் தெரிந்து கொள்ள வேண்டிய அவசியம் நிபுணர்களுக்கு இருந்ததினால் ஏரியா 51 இற்குள் கொண்டு வரப்பட்டிருந்த ஏலியன்களின் உடற்பகுதிகளை அறுவை சிகிச்சை செய்து ஆராய்ந்திருக்கின்றார்கள். அப்படிச் செய்கையில் தமது செயற்பாடுகளை எல்லாம். படமாக்கிக் கொண்டார்கள். அதற்காக அக்காலத்தில் இத்துறையில் மிகவும் பிரபலமான நிபுணரை ஏரியா 51 இற்கு இரகசியமாக அழைத்து வந்திருந்தார்கள். அவரும் தனது கடமையைச் சரிவரச் செய்து முடித்திருந்தார். ஆனால் இந்த இரகசியத்தை மட்டும் அவரால் தன்னுள் அடக்கி வைத்திருக்க முடியவில்லை. எவரொருவருக்கும் பயப்படாமல், தன்னை அடையாளம் காட்டிக் கொண்டே எல்லாவற்றையும் யூஎவ்ஓலோயிஸ்றுகளுக்குக் கூறியிருந்தார். இந்த நிபுணர் கிட்டத்தட்ட ஆறு மாதங்களுக்கும் மேலாக ஏரியா 51இன் உள்ளே இருந்து தனது தொழிலைச் செய்ததாக் கூறியிருந்தார். மொட்டந்தலை, முட்டைக் கண்கள், நீண்ட கை கால்கள், கூரான நாடி, துவாரமான மூக்கு மெலிந்த உடல், இப்படியான உறுப்புகளுடன் கிட்டத்தட்ட மனிதரைப் போன்ற பொதுவான உடலமைப்பில் அந்த ஏலியன்கள் இருந்தார்கள் என்று அவர் யூஎவ்ஓ ஆய்வாளர்களிடம் கூறியிருந்தார்.

தனது படச் சுருளில் ஒன்றினை ஏரியா 51க்கு வெளியே கொண்டு வரவும் இவர் முயற்சித்திருக்கின்றார். அது கைகூடவில்லை. ஆனாலும் நல்ல தொழில் முறை நிபுணரான அவரால் ஏலியன்களின் படங்களை வரைந்து காட்ட முடிந்தது. இன்னொரு சின்ன இரகசியமான விடயம். இந்த நிபுணர் உண்மையில் இரகசியமாக ஒரு படச் சுருளினை வெளியே கொண்டு வந்திருந்தாராம். பெருந்தொகை பணத்திற்கு அச்சுருளினை யூஎவ்ஓவோயிஸ்ருக்களுக்கு விற்றுமிருந்தாராம். ஆனால் எப்படியோ இதனை அறிந்த இராணுவத்தினர் அச்சுருளினை உடனடியாகவே யூஎவ்ஓலோயிஸ்றுகளிடம் இருந்து பறித்துக் கொண்டார்களாம். இராணுவத்தினர் பறிமுதல் செய்வதற்கு முன்னராகவே யூஎவ்ஓலோயிஸ்றுகள் அப்படத்தினை பார்த்து விட்டார்களாம்.

யூஎவ்ஓலோயிஸ்ருகளிடம் இருந்து பறிமுதல் செய்யப்பட்ட படச் சுருள் என்பதனால் அது சற்று விவகாரமானதாக அமைந்து விட, பறிமுதல் செய்யப்பட்ட சுருளின் உண்மைத் தன்மையானது பரிசீலனைக்குட்படுத்தப்பட்டதாகவும், அது பொய்யாகச் சோடினை செய்யப்பட்ட படச்சுருள் என்று வல்லுனர்கள் காட்டியதாகவும் இராணுவத்திரும் அமெரிக்க அரச அதிகாரிகளும் கூறியிருனார்களாம்.

இதைவிட ஏலியன்களின் உடல்களை பரிசோதனை செய்த வைத்தியர்கள் கூட, காலப்போக்கில் ,வ்விடயம் பற்றிய உண்மைகளை வெளியே கூறியிருக்கிறார்கள். 1980களில் தமது முதுமைக் காலத்தில் இவர்களில் சிலர் தமது அனுபவங்களை புத்தகங்களாகக் கூட வெளியிட்டிருக்கிறார்களாம். ஆனால் இப்புத்தகங்கள் அச்சிலிருந்து வெளிவந்ததுமே அரசினரால் பறிமுதல் செய்யப்பட்டமையால் பொதுமக்களின் கைகளுக்குக் கிட்டவில்லை என்று கூறுகின்றார்கள். ஆனாலும் ஒன்றிரண்டு புத்தகங்கள் இன்னமும் வெளியில் இருப்பதாகவும் அவற்றின் மூலமாகவே யூஎவ்ஓலோயிற்றுகள் இவ்விபரங்களைப் பெற்றார்கள் என்றும் கூறுகின்றார்கள்.

பார்த்தீர்களா? றொஸ்வெல் சம்பவம் எப்படியெல்லாம் விவகாரப்படுத்தப்பட்டுள்ளது. இச்சங்கதிகள் எல்லாம் ரீவிக்களின் சிறப்பான அலைவரிசைகளில் காலத்திற்குக் காலம் வந்ததை, இன்னமும் வந்து கொண்டிருப்பதை உங்களிற் சிலர் அறிந்திருப்பீர்கள். அத்துடன் இணையத்தில் கூட இச் செய்திகள், இவை பற்றிய விவரணப்படங்கள் வந்து கொண்டிருப்பதையும் அறிவீர்கள். இவ்விடயங்களில் ஆர்வமுள்ளவர்களின் கண்களில் நின்றும் இவை தப்பிருக்கவே முடியாது. றொஸ்வெல் - ஏரியா 51 சங்கதிகள் பற்றிய புத்தகங்கள் ஆயிரக்கணக்கில் உள்ளன. இன்னமும் புதுப்புதுத் தகவல்களுடன் வந்து கொண்டும் இருக்கின்றன. பெரும் வசூல் சாதனைகள் செய்த திரைப்படங்களும் கூட வந்துள்ளதை நீங்கள் அறிவீர்கள், பார்த்தும் இருப்பீர்கள். ஆரம்பகாலத்தில் அரச மட்டத்தில் இருந்து இவ்விடயங்களுக்கு பெரிய எதிர்ப்புகளும் மறுப்புகளும் வந்து கொண்டிருந்தாலும் தற்போது அரச மட்டத்தினர் இவை பற்றி அவ்வளவாக அலட்டிக் கொள்வதில்லை.

சரி, இவ்விடயங்களுக்கும், அம்புலிப் பயணங்களுக்கும் என்ன தொடர்பு உள்ளது? எப்படி றொஸ்வெல் விவகாரம் எமது அறிவியல் நிலையை உயர்த்தியது? என்ற கேள்விகள் உங்களுக்கு எழலாம்.

அடுத்த தடவையில் அவை பற்றிக் கூறப் போகிறேன்.

- கனி -
416.261.1348
leptons@hotmail.ca



தமிழ்வணக்கம்.கொம்
www.tamilvanakkam.com

# REFINANCE TO LOWER RATES & SAVE 75%

| | | Before | After |
|---|---|---|---|
| Mortgage Payment | 320,000@2.9% | 1,498.02 | - |
| Car Loan | 21,000@7.5% | 764.25 | 0.00 |
| Line Of Credit | 16,000 @6.5% | 566.67 | 0.00 |
| Line Of Credit2 | 12,500 @7% | 447.92 | 0.00 |
| Credit Card 1 | 8,800 @12% | 352.00 | 0.00 |
| Credit Card 2 | 5,200 @19% | 238.34 | 0.00 |
| Store Card | 3,000 @24% | 150.00 | 0.00 |
| | | | |
| New Mortgage Payment | 386,500@2.5% | | 1,524.55 |
| Total Dept | | 386,500.00 | 386,500.00 |
| Total Payment | | **4,014.20** | **1,524.55** |

MONTHLY SAVING

$2,489.65

VERICO MORTGAGE BROKERS NETWORK

APPLY ONLINE kiruba.ca OR Call Me

ULTIMATE MORTGAGE & FINANCIAL SOLUTIONS
LIC#: 11995
305-5200 Finch Ave East
Scarborough, ON. M1S 4Z5

KIRUBA THANABALASINGHAM
Mortgage Agent
LIC#: M12002440

416.298.2777
info@kiruba.ca





Ajax | Markham | Scarborough

நடன வகுப்புகள் ஆரம்பம்

**Bharathanatyam**
**Bollywood**
**Gaana**

## irudaya DANCE COMPANY

ஆசிரியர்கள்:- "நாட்டியகலாமணிகள்"

**நிவேதா மூத்ததம்பி**
**கீர்த்தனா அருளானந்தராஜா**

- அரங்கேற்றம் முடித்த மாணவிகள் (ஆசிரியர்: - வாசு சின்னராசா)
- அண்ணாமலைப் பல்கலைகழகப் பட்டதாரிகள் (Canada Campus)
- நடன அமைப்பாளர்கள் (8 வருட அனுபவம்)
- மேடை நிகழ்வுகளில் பல வருடங்களாக சிறந்த அனுபவம்



மேலதிக தொடர்பகளுக்கு:
(647)967-1994 (416)319-0164



## ASVITHA CAKES & BRIDAL

அனைத்து வைபவங்களுக்குமான எல்லா வகையான **Cake** மற்றும் மணமகள் அலங்காரங்களும் செய்து தரப்படும்

- RICH CAKE
- WEDDING CAKE
- EGG LESS CAKE





**Contact: 416-986-9001 / 289-660-1972**
**pathma.kandasamy@gmail.com**


கோடையில் ஓர் வசந்தம்
AUGUST 8 & 9, 2015
1 St South Asian Indoor Mall
in North America
OPEN 7 DAYS A WEEK
Finch and Middlefield
5215 Finch Ave
Scarborough, ON
m1s 0c2
GTA
SQUARE
GTA SQUARE இன்
8 வது கோடைக்கால வசந்தம்


JRS AUTO TECH
OPEN 24 HOURS
7 DAYS A WEEK
MECHANICAL & ELECTRICAL REPAIRS FOR ALL MAKES & MODELS
VISA
Free Inspection & Diagnostics
Complete Car & Truck Care
Licensed Mechanics
Insurance Work Done
All Fluid Top Ups & A/C Repairs
Fuel Injection Service & Muffler/ Turbos
Courtesy Drop Off & Pick Up Available
Purchase Any Oil Change And Receive A Free Voucher For Basic Car Wash
SENIOR'S SPECIAL
Free Shuttle Available for Seniors
TIRE SPECIALS
NEW TIRES FROM $75
USED TIRES FROM $35
FREE OIL CHANGE WITH RUST PROOFING
$99 Car
$120 SUV
BRAKE JOB
STARTING FROM
$159
WATER PUMP TIMING BELT & LABOR
STARTING FROM
$450 Most Cars
$550 Most Vans
Castrol
REGULAR OIL CHANGE
$29.95
CASTROL OIL CHANGE
$39.95
SYNTHETIC OIL CHANGE
$49.95
SUV'S SYNTHETIC SPECIAL WITH FLUID TOP-UP PACKAGE FOR
$149.95
TRANSMISSION FLUSH
Starting From…
Imports
$74.95
Radiator Flush
$79.95
Domestic
$149.95
ENGINE CHECK WITH FREE DIAGNOSTICS
CHECK
LEXUS
FREE DTC Code Run and Inspection
2655 Lawrence Ave. East, Unit 5
(Midland & Lawrence, rear of the building)
CALL SUBAS DIRECT→ 416-206-9489
Tel: 416-628-4399
Email: jrsautotech@hotmail.ca
Like, Share & Follow us at www.facebook.com/jrsautotech
*Prices subject to change. Valid with flyer.
Cannot be combined with any other offers.

## For the very first time a Tamil Street Festival outside of Asia!
## ஆசியாவுக்கு வெளியே முதன்முறையாக ஓர் தமிழ்த் தெருவிழா!

# Lebara's Tamil Fest
தெரு விழா

Powered by IDEAL DEVELOPMENTS


மரபுக் கலைகள் – தெருக்கூத்து, பொய்க்கால் குதிரை, பறை இசை


இளையோர் மற்றும் குழந்தைகளுக்கான நிகழ்ச்சிகள்


சுவைமிகு தமிழர் உணவுகள் மற்றும் ஆடைகள்


இசை ஆடல் மற்றும் நகைச்சுவை விருந்து


கனடியத் தமிழர் வரலாற்றுக் காட்சிக்கூடம்

**AUGUST 29 & 30**

**Morningside Ave**
Between
Finch & Neilson

நுழைவுக்குக் கட்டணம் இல்லை **Free Admission**

குறிப்பிட்ட சாவடிகளே உள்ளதால் தங்கள் வர்த்தக மற்றும் உணவுச் சாவடிகளைப் பதிவு செய்ய முந்துங்கள்

யூலை 20ஆம் நாளுக்கு முன்னர் பதிவு செய்வதன் மூலம் சிறப்புச் சலுகைகளைப் பெறுங்கள்

அழையுங்கள் 416.240.0078

இவ்வாண்டின் மிகப் பெரிய தமிழர் விழாவின் பங்காளராகுங்கள்

Zone Sponsors

Formula Honda — Where You're Treated like Family.
747 AUTOPARTS — The Right Price; The Right Choice — www.747autoparts.com
Aalayaa — THE MAGIC OF AUTHENTIC KANCHIPURAMS
BonaFide Mortgage
GALAN — Gary Anandasangaree & Associates Professional Corporation
SUTHAHOMES.ca

Media Sponsors

ATN
metrolandmedia toronto — Connected to your community
geniemedia

#tamilfestTO @tamilfestTO #tamilfestTO

Proudly Hosted by
Canadian Tamil Congress

TamilFest.ca
info@canadiantamilcongress.ca

# வேர்களைத் தேடி - நாடகக்கூத்து

கடந்த 25.07.2015 சனிக்கிழமை மாலை கனடா இலக்கியத்தோட்டத்தின் நாடகம் இடம்பெறுவதாக அறிந்தேன். வழமையாக இடம்பெறும் மாதாந்த இறுதிச்சனிக்கிழமை நிகழ்வான தமிழ்ச்சங்கத்தின் ஐயந்தெளிதல் கருத்தரங்கில் இருந்து அவசர அவசரமாக வெளியேறி தாமதமாகிவிட்டது என்பதனால் விரைந்து ஆர்மேனியன் கலையரங்கை அடைந்தேன். அங்கு 6:30க்குத்தான் பார்வையாளர்கள் அனுமதிக்கப்பட்டார்கள். 7:20 வரை பொறுமையோடு காத்திருந்தோம். இலக்கியத்தோட்டத்தின் முக்கிய இயங்குதலாக இருப்பவர்களுள் ஒருவரான காலம் செல்வம் மேடையில் தோன்றினார். வழமைபோல கனடா நாட்டுப்பண்ணையும் வாழ்க நிரந்தரம் எனும் பாரதியின் தமிழ்த்தாய் வாழ்த்தினையும் இரு இளம் யுவதிகள் பாடிமுடித்தனர். தொடர்ந்து இலக்கியத்தோட்டத்தின் முக்கியமானவர்களில் ஒருவரான சட்டத்தரணி மனுவல் ஜேசுதாசன் அவர்கள் வரவேற்று நன்றி உரையாற்றினார். நாடகத்தை முதன் முதலாக இன்று இலவசமாக மேடையேற்றுவது பற்றியும் கடந்தகால, நிகழ்கால, எதிர்கால நிலைமைகளைத் தொடுப்பதாக இந்த முயற்சி அமைந்துள்ளது என்பதனையும் குறிப்பிட்ட அவர், நாடகத்தைப் பார்த்து நிட்சயமாக மகிழ்வீர்கள் என்ற நம்பிக்கையையும் ஊட்டி நாடகத்தை தயாரித்து தந்து ரொறன்ரோ கல்விச்சபையின் அனைத்துலக மொழிகள் திட்ட அலுவலர் பொன்னையா விவேகானந்தனுக்கும் நாடக நடிகர்களுக்கும் நன்றியைத் தெரிவித்ததோடு வருகை தந்திருந்த அனைத்துப் பார்வையாளர்களையும் வரவேற்று நன்றியும் கூறினார். தொடர்ந்து வணக்கத்திற்குரிய அடிகளார் ஜோசெப் சந்திரகாந்தன் அவர்கள் உரையாற்றும்போது மறைந்துபோன எமது கலைகளைத் தேடி இளம் தலைமுறைக்குத் தரும் கடப்பாடு எங்களிடம் உண்டு. அவற்றை நாம் இப்போது செய்யவில்லை என்றால் அனைத்தையும் இழந்தவர்களாக வாழ நாமே காரணமாக அமைந்து விடுவோம். உலகில் உள்ள பல்வேறு இனங்களிடையே இப்படியான நிலைகள் இடம்பெற்றுள்ளன. யூத இனமக்கள் பாலஸ்தீனத்தில் இருந்து 1000 ஆண்டுகளுக்கு முன்னர் விரட்டியடிக்கப்பட்டு ஐரோப்பா, வட அமெரிக்கா போன்ற இடங்களில் வாழ்ந்து வந்தனர். அவர்கள் இன்று தங்கள் மொழியை மறந்துவிடவில்லை, பண்பாட்டை மறந்துவிடவில்லை ஒரு நாட்டையே கட்டி எழுப்பியுள்ளனர் என்று உரைத்த அவர் தொடர்ந்தும் இவ்வித நிகழ்வுகளினால் நாம் இளையோர் இடையே எமது பண்பாடு, கலை, கலாசாரத்தை அறிய வைக்கமுடியும் என்றார்.

- குமுளன் -

அவரைத் தொடர்ந்து பார்வையாளராக வந்திருந்த யாழ். பல்கலைக்கழக தமிழ்த் துறை விரிவுரையாளரான விசாகரூபன் அவர்கள் கனடாவில் இவ்விதமான ஒரு நிகழ்வு இடம்பெறுவதனை அடிகளார் சந்திரகாந்தன் அவர்கள் மூலம் கேள்விப்பட்டு வந்தேன். நாங்கள் பேராசிரியர் பாலசுந்தரம் அவர்களின் நெறியாளுகையில் அருந்தவநாதன், பூங்கொடி, ரமணிகரன் ஆகியோருடன் இணைந்து காத்தவராயன் கூத்தில் பங்குகொண்டமையை மீட்டுப் பார்க்கும் சந்தர்ப்பம் கிட்டியுள்ளதோடு அவர்களைப் பார்க்கும் சந்தர்ப்பமும் கிட்டியது இரட்டிப்பு மகிழ்ச்சியைத் தருகின்றது என்றார்.

தொடர்ந்து நாடகம் ஆரம்பமானது. ஆரம்பத்தில் மூன்று இளம்பெண்களும் ஓர் இளைஞனும் மேடையில் தோன்றினர். இன்றைய இளந்தலைமுறை குறிப்பாக பல்கலைக்கழகத்து தமிழ் மாணவர்களின் நிலையைச் சித்தரிக்க முற்பட்டுள்ளனர் என்பதை ஊகிக்கமுடிந்தது. அவர்கள் நால்வரும் தமக்குக் கொடுக்கப்பட்ட பாத்திரங்களை மிகச்சிறப்பாகச் செய்தனர் என்னுமளவிற்கு பாத்திரத்தில் ஊறியிருந்தனர் எனலாம். போத்திலுடன் ஓர் இளைஞன் (செல்வன் ரிஜிகரன் ரமணிகரன்) பெண்பிள்ளைகள் மூவர் (செல்விகள் தர்சிகா ரமணிகரன், லாவண்யா ராஜா, அனி கஸ்தூரி சவரிமுத்து) இருக்கும் இடத்திற்கு வருகின்றார். அவர் மகிழ்ச்சியாக இருக்கவேண்டும் என்ற தாரக மந்திரத்தைத் தனது இலக்காகக் கொண்டிருந்தார். ஆரம்பத்தில் ஆங்கிலத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலை இடையில் வந்த கட்டியக்காரனா அல்லது காத்தவராயன் கூத்தில் வரும் டாப்பர் மாமாவோ ஏதோ ஒன்றாகத் தோன்றினார் கந்தசாமி கங்காதரன். அவர் இடையிடையே கதையமைப்பை பார்வையாளர்களுக்கு எடுத்துக்கூறும் அல்லது அதனைத் தெளிவுபடுத்தும் பாத்திரமாகக் காட்சியளித்தார். நிறுத்துங்கள் என்று அவர்களிடம் சொன்னவர். இதோ இவர்கள் தமிழையும் பண்பாட்டையும் தொலைத்தவர்கள். இவர்கள் உரையாடுவதை விளங்கிக் கொள்ள நான் இப்போது ஒரு கருவியைப் பயன்படுத்தப்போகின்றேன் என்று பின்னர் அவர்களின் உரையாடல்கள் தமிழில் இடம்பெற்றது.



அருள்மிகு சண்முகநாத சுவாமி கோயிலுக்கு 05.07.2015 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை வருகை தந்து பூசை வழிபாடுகளை சிறப்பாக செய்து பக்தர்களின் துன்பத்தை துடைத்த அற்புதம் பெருமைக்குரியது. ஆஞ்சநேயர் தெய்வத்தின் திருவருள் சிறப்பினையும், அற்புத திருவிளையாடல்களையும் அனுபவரீதியாக நன்கு தெரிவித்தவர் தெகிவளை திரு. மாதவன் சந்திரசேகர சுவாமிகள் அவர்கள். ஆஞ்சநேயர் தெய்வத்தின்பால் சுவாமிகள் மன்றாடி, மன்றாடி வழிபடும் நம்பிக்கையை அத்தெய்வம் விரைந்து ஏற்று நல்லருள்புரியும் தெய்வீக சக்தி மிகப் பெருமைக்குரியது. கனடாவில் வாழும் தமிழ் மக்கள் சுவாமிகளின் வழிபாட்டில் பங்கு கொண்டு மனநிறைவு பெற வேண்டும். இவ்வாலயத்தில் எடுக்கப்பட்ட படங்களையும் வெளியிடுகின்றோம்.

# ஊர் மக்களின் ஒன்றுகூடல்



ஊர் மக்கள் எல்லாம்
ஒன்று கூடினர் பூங்காவிலே
கார்மேகம் வந்து சூழ்ந்தபோதும்
கலங்காமல் நின்றனர் களத்தினிலே
பார் எல்லாம் பரந்துவாழும்
பண்பான எமது மக்கள்
சோர்வின்றி வந்து கலந்துமே
சொந்தங்கள் சேர்ந்து களித்தனரே!

வருடத்தில் ஒரு நாள்
வரும் இந்தத் திருநாள்
கருவுற்றுக் கொண்டது காலையிலே
கன்னியரும் காளையரும் காதலரும்
பருவம் அடையாத பாலகரும்
பகிர்ந்து கொண்டனர் பாசத்தையே!
விருப்புடனே விருந்துகளில் கலந்துமே
விரும்பியதை உண்டு மகிழ்ந்தனரே!

விளையாட்டுப் போட்டிகளில் எல்லாம்
விருப்புடனே கலந்து கொண்டே
சுளையாகப் பரிசுகளைச் சொந்தமாக்கி
சாதனைகள் பலபுரிந்து சாதித்தனரே!
வளையாத மூங்கில் கழிகொண்டே
விரைவாக தயிர்முட்டி அடித்துமே
அழையாத விருந்தாளி வந்தபோதுமே
அழகாக ஒன்றுகூடல் அரங்கேறியதே!



- மார்க்கம் சந்திரன் -

## Math Tutorial 304 (1.08.2015)

### Answers to Tutorial 303

**(1)** Let father's age = x years now. Then son's age = (33-x) years. Let it be after t years.
After t years their ages will be (x+t) & T+33-4
x+t = 4(T+33-x) solving
5x-3T=132. Since we want the smallest value of t when t=1,
5x-3=132
$x = \frac{135}{5} = 27$ → So present age of the father is 27.
And son's: (33-27) = 6
So after 1 year father's age is 28 and son's age is 7.

**(2)** $\frac{\binom{6}{4}}{\binom{15}{4}} + \frac{\binom{9}{4}}{\binom{15}{4}} = \frac{15}{1365} + \frac{126}{1365} = \frac{144}{1365} = \frac{47}{455}$

therefore $\lim_{x \to \infty} (2 + \frac{\sin(x)}{x}) = 2$

**(4)** $\vec{n} = (4, -7, 1)$
This (x+1, y, z-3) × (4, -7, 1) = 0
The require equation is
$4x - 7y + z + 1 = 0$

### Tutorial 304 Questions

**(1)** Find all values 6p such that

$$\left({}_{8}\quad p\quad {}^{2}\right) \times \left(\quad 4\quad {}^{p}\right) = 2$$

[grade 9-10]

**(2)** A sequence $t_1, t_2, t_3\ldots$ is defined by $t_1 = 1000$ and $t_n = 1{,}06t_{n-1}$ where $n$ is a positive integer and $n \geq 2$. Find the smallest value of $n$

**(3)** Prove that the line whose equation is $y = 2x - 1$ does not intersect the curve with equation $y = x^4 + 3x^2 + 2x$.

[grade 12]

**(4)** Find the area of the Δ with vertices P (7, 2, -5), Q (9, -1, -6) and R (7, 3, -3).

[grade 12]



# 36 வயதினிலே - விமர்சனம்

மலையாள படமான 'How old are you? வின் தமிழ் Remake தான் 36 வயதினிலே என்னும் படம். எட்டு வருடத்திற்கு பின் ஜோதிகா நடிக்கும் படம் இதுவாகும்.

English Vinglish ஐப்போல இப்படமும் கதாநாயகியை முக்கிய கதாபாத்திரமாக கொண்டு வருகிறது. எங்கள் கதாநாயகி வசந்தி கல்யாணம் செய்து கணவனுடனும், பதின்ம வயது மகளுடனும் வாழ்கிறாள். அவள் வீட்டு வேலை செய்வதுடன் வேலைக்கும் செல்கிறாள். அத்துடன் வீட்டில் அவரது கணவனின் பெற்றோர்களும் வாழ்கின்றனர். எனவே வீடு, வேலை என வசந்தியின் வாழ்க்கை ஒரே மாதிரி ஓடுகிறது.

இப்படி இருக்கும் வசந்தியைக் கண்டு கணவனும் இவளால் ஒன்றும் சாதிக்க முடியாது என்கிறார். அத்துடன் வேலைக்கு கணவனும், பள்ளிக்கு மகளுமாக அயர்லாந்திற்கு செல்ல முற்படும் போது, அவர்களுடன் செல்ல விரும்பும் வசந்திக்கு வயது கூடிவிட்டதால் வேலைக்கான விசா கிடைக்கவில்லை.

அதற்கும் மேல் மகள் இந்திய ஜனாதிபதியிடம் ஏதோ ஒரு கேள்வியை கேட்டு அவரை அதிசயப்படுத்தியதால் அவரும் வசந்தியை சந்திக்க அழைக்கிறார். அச்சந்திப்பு தலைகீழாக மாறும் போது வசந்தியும் குடும்பத்தாரும் Facebook இன் பரிகாசத்திற்கு ஆளாகின்றனர். இதனால் மகளும் வசந்தியை வெறுக்கிறாள்.

எனவே இப்படி குடும்பத்தார் மதிக்காத சாதாரண வாழ்க்கையை எப்படி வசந்தி திருப்பி முழு இந்தியாவிலேயும் பாராட்டுப் பெறும் வாழ்க்கையாக மாற்றுகிறாள் என்பது மிச்சக் கதை. இனி இப்படத்தின் கருத்தைப் பார்ப்போம்.

'கணவனும் பிள்ளையும் மதிக்காத நிலையில் எப்படித்தான் வசந்திக்கு தைரியம் வந்து வாழ்க்கையை மாற்றுகிறாள்?' என்ற கேள்வி எழும். குடும்பத்தார் இல்லாவிட்டாலும் வசந்தியின் வேலையிடத்து நண்பர்கள், அக்கம்பக்கத்தார், கணவனின் பெற்றோர் எல்லாரும் அவளுக்கு உதவியாக இருக்கிறார்கள். வசந்திக்கு 'தான் யார்' எனக் காட்டுபவள் அவளது பள்ளிக்கூட சிநேகிதி. என்னவோ சொந்தத்தை விட தூரத்திலிருப்பவர்களுக்குத்தான் வசந்தியின் திறமை தெரிகிறது. இந்தியா முழுவதும் இத்திறமை தெரிந்த பின்னரே குடும்பத்தாருக்குத் தெரிகிறது.

'இந்தியாவே திரும்பிப் பார்க்கிற அளவிற்கு வசந்தி ஏதோ பெரிய காரியம் செய்திருக்க வேண்டுமே, இது நிஜத்தில் சாத்தியமா?'



என்ற கேள்வியும் உண்டு. வசந்தி என்ன செய்கிறாள் எனப் படத்தை பார்த்து அறியுங்கள். ஆனால் அவள் செய்தது மிகச் சாத்தியமான விடயம். எங்களுக்கு உதவி செய்து எம்மை பெரிய ஆளாக்கக் கூடிய விடயங்கள் எல்லாம் எமது கையிற்கு அருகேதான் இருக்கின்றன என்பதற்கு வசந்தி ஓர் உதாரணம். இவ்வாறான விடயத்தை இலகுவாக கண்டுபிடித்து, எமது விடா முயற்சியுடன் எமக்கு கொஞ்ச ஊக்குவிப்பு கிடைத்தால் பின்னர் எல்லாம் சரியாகி வெற்றி கிடைத்து விடும். இதற்காக வசந்தியினாலோ, குடும்பப் பெண்ணினாலோ மிகப்பெரிய விடயங்களை சாதிக்க முடியாது என நினைக்ககூடாது. வேண்டும் என்றால் வசந்தியை இந்தியாவின் ஜனாதிபதி ஆக்கி படத்தை முடித்திருக்கலாம். ஆனால் ஜனாதிபதியாக எத்தனை பேர் வரமுடியும்?

கருத்துள்ள படங்கள் எல்லாவற்றிலும் எங்களுக்கு சாத்தியமாக முடிவு இருத்தல் வேண்டும். இப்படத்தைப் பார்க்கும் பெண்களும் நாங்களும் இப்படி ஒன்றை செய்யலாம் என யோசிக்க வைக்க வேண்டும் என்ற நல்ல எண்ணத்துடன் இப்படம் எடுக்கப்பட்டிருக்கிறது. 36 வயதினிலே படம் இப்படி எங்களை யோசிக்க வைக்கிறது. எத்தனை வசந்திகளை எங்களுக்கு இப்படம் தரப்போகிறது எனப் பார்ப்போம்.



ஞா. ஆரணி
அகவை 16

## இளையோர் ஆக்கம்

இதில் 19 வயதும் அதற்கு உட்பட்டவர்களும் தமிழில் எழுதும் சொந்த ஆக்கங்கள் கதை, கட்டுரை, கவிதை எதுவாக இருந்தாலும் தரமானதாயின் பிரசுரிக்கப்படும்.




## தமிழ் பாடசாலைகள் விளையாட்டு சங்கம் - கனடா - 2015

தமிழ் பாடசாலைகள் விளையாட்டுச் சங்கத்தின் (TSSA - Canada) 25வது வருட விளையாட்டுப் போட்டிகள், ஓகஸ்ட் 08 ஆம் திகதி அன்று Pharmacy & Finch சந்திப்பில் அமைந்துள்ள Sir John McDonald C.I. மைதானத்தில் நடத்தப்படும். இந் நிகழ்வில் உதை பந்தாட்டம் (Soccer), வலைப்பந்தாட்டம் (Netball), துடுப்பாட்டம் (Cricket), கரப்பந்தாட்டம் (Volleyball) அணிநடை, மற்றும் ஓட்டப் போட்டிகள் (100m, 4x100m அஞ்சல்) ஆகிய விளையாட்டுப் போட்டிகள் இடம்பெறும்.

மேற்படி போட்டிகளில் பங்கு பற்றுவதற்கான முடிவுத்திகதி ஓகஸ்ட் 02, 2015 பி.ப 3:00 ஆகும். கனடாவில் உள்ள, இலங்கைத் தமிழ்ப் பாடசாலைகளின் பழைய மாணவர் சங்கங்களின் உறுப்பினர்களும், வழித் தோன்றல்களும் இப் போட்டிகளில் பங்கு பெற அனுமதிக்கப்படுவர்.

| | |
|---|---|
| S. D. Kulanathan (Vice President) | 416-818-5732 |
| S. Ganeshalingam (Treasurer) | 416-499-6248 |
| Soccer: C. Balakumar | 647-407- 2279 |
| Cricket: T. Srirangan | 416-902-6600 |
| Netball: Ms. K. Jeyapillai | 905-947-0967 (cell: 416-826-5306) |
| Track & Field: R. Thangarajah | 647-340-6887 |
| Volleyball: T. Rajeswaran | 416-264-8289 |
| Men (over 45) Soccer: Ravin Rathnasingam | 647-989-6477 |
| Girls Soccer: Ravin Rathnasingam | 647-989-6477 |

Thambiah Thavarasalingam - President.

# எம்.எஸ்.வி.யை தமிழ் சமூகம் கௌரவிக்குமா?

## திரை இசையமைப்பாளர் பிரபாகர் கேள்வி

காலத்தால் அழியாத தமிழ்த் திரையிசைப் பாடல்களைத் தந்து, உலகம் முழுக்கத் தமிழர்களின் மனங்களில் நிறைந்திருக்கும் மெல்லிசை மன்னர் எம்.எஸ்.விஸ்வநாதன் சென்ற மாதம் தமிழகத்தில் காலமானார். 1000 படங்களுக்கு மேல், 5000 பாடல்களுக்கு மேல் தந்து, ஏறத்தாழ மூன்று தலைமுறை தமிழ் திரையிசை ரசிகர்களைத் தன் இசையால் மகிழ்வித்தவர். 30 ஆண்டுகளுக்கும் மேலாக தமிழ் சமூகத்தின் பண்பாட்டுக்குள் ஆழமாய் வினையாற்றியவர்.

கேரளாவில், பாலக்காடு அருகில், எலப்புள்ளி என்ற கிராமத்தில், 1928 ஜூன் 17 அன்று பிறந்தவர் எம்.எஸ்.விஸ்வநாதன். முழுப் பெயர்: மனயங்கத் சுப்பிரமணியன் விஸ்வநாதன். இசையில் மகா பாண்டித்தியம் பெற்ற எம்.எஸ்.வி. கல்விக்காகப் பள்ளிக் கூடம் பக்கம் கால்வைத்ததே இல்லை. வீட்டுக்கு அருகில் இருந்த நீலகண்ட பாகவதரிடம் கர்னாடக சங்கீதம் பயின்றார். ஆனால், வீட்டு வறுமை காரணமாகக் குருவுக்குத் தட்சணை கொடுக்க இயலாமல், அவருக்குப் பணி விடை செய்து, அந்தக் கடமையை நிறைவேற்றியிருக்கிறார். 13 வயதில் தனது முதல் இசை மேடை நிகழ்ச்சியை அரங்கேற்றினார். தொடர்ந்து சினிமா வாய்ப்புகள் தேடி சென்னை வந்தார். ஆரம்பக் காலங்களில் சினிமா கம்பெனியில் சர்வராக வேலை பார்த்திருக்கிறார்.
1945ஆம் ஆண்டு திரைப்பட இசைத் துறைக்கு அறிமுகமான எம்.எஸ்.வி., எஸ்.எஸ். சுப்பையா நாயுடுவுடன் சேர்ந்தார். அடுத்து, இசையமைப்பாளர் ராமமூர்த்தியோடு இணைந்து திரைப்படங்களுக்கு இசை யமைக்கத் தொடங்கினார். அடுத்த பத்து வருடங்கள் இவர்கள் கொடிதான் தமிழ்த் திரையிசையில் பறந்தது. விஸ்வநாதன் - ராமமூர்த்தி என்கிற பெயரில் இரட்டையர் களாக இவர்கள் இசையமைத்த திரைப் படங்களின் எண்ணிக்கை கிட்டத்தட்ட 700 எனக் கணக்கிடப்பட்டுள்ளது. பிறகு, ராமமூர்த்தியிடமிருந்து பிரிந்தார். அதன் பின்னரும், எம்.எஸ். விஸ்வநாதன் மட்டுமே தனியாக 500 படங்கள் வரை இசையமைத்துள்ளார்.

தமிழ்நாட்டில், 1951இல் ஆரம்பித்து 1981 வரை, 30 வருடங்கள் எம்.எஸ்.வி-யின் இசை ராஜ்யம்தான். தமிழ் தவிரத் தெலுங்கு, மலையாளம், கன்னடம், இந்தி என அனைத்து மொழிகளிலும் சேர்த்து 1,200 படங்களுக்கு மேல் எம்.எஸ்.வி. இசை அமைத்திருக்கிறார். தமிழில் மிக அதிகமாக பீம்சிங், கிருஷ்ணன் பஞ்சு, ஏ.சி. திருலோகசந்தர், கே.பாலசந்தர் என இந்த நான்கு டைரக்டர்களிடம் வேலை பார்த்திருக்கிறார். இவர் இசையமைத்த பெரும்பாலான தமிழ் திரைப்படப் பாடல்கள், கவிஞர் கண்ணதாசனால் இயற்றப்பட்டவை. அது தமிழ் சினிமாவின் பொற்காலம்.

எம்.எஸ்.வி.யின் இசைப் பயணத்தில் பல ஆச்சரியங்கள் உண்டு. 'புதிய பறவை' படத்தில் 300-க்கும் மேற்பட்ட இசைக் கருவிகளைக் கொண்டு, 'எங்கே நிம்மதி' பாடலுக்கு இசைக் கோர்ப்புச் செய்துள்ளார். இன்னொரு பக்கம், 'பாகப் பிரிவினை' படத்தில் 'தாழையாம் பூ முடிச்சு' பாடலுக்கு மூன்றே இசைக் கருவிகளைக் கொண்டு இசைக் கோர்ப்புச் செய்துள்ளார். 'நெஞ்சில் ஓர் ஆலயம்' படத்தில் இடம்பெற்ற 'முத்தான முத்தல்லவோ' பாடலுக்கு 20 நிமிடங்களில் இசைக்கோர்ப்புச் செய்துள்ளார். இன்னொரு பக்கம், 'நெஞ்சம் மறப்பதில்லை' பாடல் உருவாக இரண்டு மாதங்கள் உழைத்துள்ளார். எம்.எஸ்.வியின், 'அத்தான்..... என்னத்தான்....' பாடலைக் கேட்டுவிட்டு, 'இந்த மாதிரி பாடலைப் பாட வாய்ப்பு கிடைத்தால், சென்னையிலேயே வந்து தங்கிவிடுவேன்' என்று சொன்னாராம், லதா மங்கேஷ்கர்.

இந்தியாவில் முதன்முதலாக முழு ஆர்கெஸ்ட்ராவை மேடையில் ஏற்றி நிகழ்ச்சியை நடத்திக் காட்டியவரும் எம்.எஸ்.வி.தான். சேலத்தில் நடைபெற்ற அந்த இசை நிகழ்ச்சி அந்த நாளில் பெரும் ஆச்சர்யத்தை ஏற்படுத்தியது.



எம்.எஸ்.வி.யும் இளையராஜாவும் போட்டியா-ளராகக் கருதப்பட்ட காலத்தில், ராஜாவோடு சேர்ந்து, 'மெல்லத் திறந்தது கதவு', 'செந்தமிழ்ப் பாட்டு', 'செந்தமிழ் செல்வன்' என மூன்று படங்களுக்கு இசை அமைத்துள்ளார். இது எம்.எஸ்.வி.யின் விசால மனப்பான்மைக்கு அடையாளம். அது போல் வி.குமார், இளையராஜா, ரஹ்மான், கங்கை அமரன், தேவா, யுவன்ஷங்கர் ராஜா, ஜி.வி.பிரகாஷ் போன்ற, அனைத்து அடுத்தடுத்த தலைமுறை இசையமைப்பாளர் களிடமும் பாடி இருக்கிறார்.

நடிப்பிலும் ஆர்வம் கொண்ட எம்.எஸ்.வி., 'கண்ணகி' படத்தில் நடிக்க ஆரம்பித்தார். தொடர்ந்து 'காதல் மன்னன்,' 'காதலா.... காதலா' உட்பட 10 படங்களுக்கு மேல் நடித்திருக்கிறார். குறிப்பாக நகைச்சுவை பாத்திரங்களில் வெளுத்து வாங்கினார்.

எம்.எஸ்.வி.யின் இஷ்ட தெய்வம் முருகன். எந்தக் கணமும் பேச்சுக்கு நடுவிலும் 'முருகா முருகா' என்ற வார்த்தையை உச்சரிப்பாராம். பியானோ, ஹார்மோனியம், கீ-போர்டு மூன்றையும் பிரமாதமாக வாசிப்பார். சற்று ஓய்வாக இருக்கும் பொழுதுகளில் வீட்டில் பியானோவின் இசை பெருகி நிரம்பி வழியுமாம். தமிழ்த் தாய் வாழ்த்தான 'நீராடும் கடலுடுத்த' பாடலுக்கு இசைக் கோர்ப்பு செய்த பெருமையும் எம்.எஸ்.விக்கு உண்டு.

எம்.எஸ்.வி. மனைவி ஜானகி அம்மாள். இவர்களுக்குக் கோபி கிருஷ்ணா, முரளிதரன், பிரகாஷ், அரிதாஸ் என நான்கு மகன்கள் லதா மோகன், மதுபிரசாத் மோகன், சாந்தி குமார் என மூன்று மகள்கள் உள்ளனர். கலைமாமணி, ஃபிலிம்ஃபேர், வாழ்நாள் சாதனையாளர் விருதுகள் உட்படப் பல விருதுகள் எம்.எஸ்.விக்கு கிடைத்துள்ளன. இந்த விருதுகளைவிட எம்.எஸ்.விக்குப் பிறகு தமிழ் திரையிசையில் கொடிகட்டிப் பறந்த இளையராஜா, ஏ.ஆர். ரஹ்மான் போன்றவர்கள் எம்.எஸ்.வி. மீது வைத்திருந்த மரியாதையும் அன்புமே எம்.எஸ்.வியின் முக்கியத்துவத்தைச் சொல்லக்கூடியது.
சரி, இன்றைய இசையமைப்பாளர்கள் எம்.எஸ்.வி. பற்றி என்ன நினைக்கிறார்கள்? எம்.எஸ்.வி. பற்றி, 'சிநேகாவின் காதலர்கள்' இசையமைப்பாளர் இரா. பிரபாகர் சொல்கிறார்: "80களின் இளைஞர்கள் இளையராஜாவின் ரசிகர்களாகவும் பக்தர் களாகவும் வெறியர்களாகவும் இருந்த நேரம். ஒரு துறையில் ஒருவரைப் பிடித்தால் இன்னொருவரை வெறுத்தாக வேண்டும் என்ற தமிழ்கூறும் நல்லுலக மரபுப்படி, நாங்கள் எம்.எஸ்.வியை பொருட்படுத்தாதவர்களாய் இருந்த காலகட்டம். மட்டுமல்லாமல், எம்.எஸ்.வியையும் டி.எம்.எஸ்.சின் அப்போதைய பாடல்களையும் கிண்டலடித்து மகிழ்வதுதான் எங்கள் வழக்கமாக இருந்தது. இந்நிலையில்தான் எம்.எஸ்.வியின் 'நினைத்தாலே இனிக்கும்' படப் பாடல்கள் வெளியானது. இப்பாடல் ஏற்படுத்திய அதிர்வில் அதுவரை எம்.எஸ்.வியை துச்சமாக நினைத்த இளைஞர்கள் கூட்டம் எப்படி எதிர்வினை ஆற்றுவது என்று புரியாமல் நிசப்தமானோம். இளையராஜா தாக்குப்பிடிப்பாரா என்ற கவலை எங்களுக்கு வந்துவிட்டது.

திரையிசை என்பது சராசரி ரசிகனைப் பொறுத்த அளவில் சுய சார்புகளும் விருப்பு வெறுப்புகளும் அவர்களின் பதின்பருவ கனவுகளும் சேர்ந்தது. ஆனால், ஒரு பாடல் உடனடி வெற்றி பெறுவதென்பது அந்தப் பாடல் எந்த நாயகனோடு தொடர்புடையது என்பதையும் பொறுத்தது. ரஜினிகாந்துக்கு இசையமைத்த எல்லா இசையமைப்பாளர் களின் பாடல்களும் வெற்றிப் பாடல்களாகி யிருக்கின்றன. எம்.எஸ்.வி., சங்கர்-கணேஷ், இளையராஜா, சந்திரபோஸ், தேவா, ரஹ்மான், வித்யாசாகர்... இப்படி. ஒரு பாடலின் வெற்றிக்குப் பல காரணங்கள் இருக்கக்கூடும். ஆனால், ஒரு பாடல் காலம் கடந்து நிற்கத் தகுதி படைத்ததா என்பதை யறிய கொஞ்ச காலங்கள் காத்திருக்கத்தான் வேண்டும். அந்தக் காத்திருத்தலுக்குப் பின்னும் காலம் கடந்து நின்று தன்னை இன்று நிரூபித்துக்கொண்டிருக்கிறார் எம்.எஸ்.விஸ்வநாதன்.

ஒரு வழித்தட ஒலிப்பதிவு முறையில் பதிவு செய்யப்பட்டு, கிராமபோன்களில் ஊசிகளின் வருடல்களில் இசையைக் கேட்ட காலத்தைச் சார்ந்த கலைஞர் எம்.எஸ்.வி. அவர் காலத்து இசை உருவாக்கமுறை இப்போது பழங்கதையாய் போய் வெகுகாலம் ஆகிறது. அவருக்குப் பின் இரண்டு பெரும் இசை ஆளுமைகள் தமிழ் சினிமாவில் மட்டுமல்லாமல் இந்திய சினிமா இசையிலும் பெரும்தாக்கத்தை ஏற்படுத்தி இருக்கிறார்கள். ஆனாலும், இன்றும் எம்.எஸ்.வியின் உயிரோட்டமான மெட்டுக்கள் 'எம்.ஜி.ஆர். பாட்டு, சிவாஜி பாட்டு' என்ற முன்னொட்டுகள் இல்லாமலே அதன் தனித்துவத்தால் மட்டுமே நீர்த்துப் போகாமல் இருக்கின்றன.

பொதுவாகத் திரைப்பட இசையை வெகுசன இசை (Popular Music) என்ற வகைப் பாட்டிற்குள் அடக்கினால் 'வெகுசன இசை என்பது ஒரு செய்தித்தாளைப் போன்று தற்காலிகத் தன்மையுடையது' என்றுதான் நம்பப்பட்டது. ஆனால், உலகம் முழுவதும் வெகுசன இசை (Pop Music) தற்காலிக வெற்றிகளைத் தாண்டி குறைந்தது அரை நூற்றாண்டுகளைக் கடந்தும் அதன் வேறு வடிவங்களோடு புழக்கத்தில் இருப்பதைக் காணமுடிகிறது. இந்தியச் சூழல் இல்லை என்பதைக் கவனத்தில் கொள்ளும்போது

தொடர்ச்சி 36ஆம் பக்கம்


நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்
இலவச ஆலோசனை வழங்கப்படும்



சிறியோர் தொடக்கம் முதியோர்வரை இதுவரை தீராத வியாதியினால் பீடிக்கப்பட்டு குணமடையாமல் இருப்பவர்களுக்கு இயற்கை மூலிகைகளிலான தீங்கு விளைவிக்காத சூரணங்கள், குளிகைகள், லேகியங்கள், உயிர்ச்சத்துக்கள், பானங்கள் போன்றவற்றினாலும் எண்ணையினாலும் குணமடைய தகுந்த ஆலோசனை! இலவசமாக வழங்கப்படும். இது தவிர விளம்பரம் பத்திரிகை அலுவலகத்தில் "எம்மை நாம் பாதுகாப்பது எப்படி" என்ற புத்தகம் விற்பனைக்கு உள்ளது.
இலவச ஆலோசனைகளுக்கு: 647.456.9796
வைத்திய கலாநிதி கே.ரி. கோபால்
D.A.M.S - R.A.M.P. (SriLanka) M.H.D.C (Madras) C.D.S. _ C.N.H.P. (Canada) Herbalist - Sidha - Ayurvedic - Homeopathic & Biochemic Family Physician LG.Ayurvedic Medical Services (SriLanka)

# சில தகவல்கள் - தெரிந்து கொள்ளுங்கள்

## கனடிய தகவல் தொடர் 234

1. கனடா வாழ்வில் பலபேருக்கு மருந்துகளுக்குரிய செலவுகள் பெரும் தொகையாக உள்ளது. வருமானத்துக்கு கட்டுப்படுத்த முடியாத நிலைமை. தீர்வு என்ன? மாகாண அரசின் சலுகைகளுடன் சேர்ந்த 'மருந்து திட்டம்' ஒன்று இதற்கு கை கொடுத்து உதவுகின்றது. (Ontario Trillum Drug Program)

2. கனடாவிலிருந்து ஏனைய நாடுகளுக்கு பிரயாணம் செய்தபோது எதிர்பாராத சுகயீனங்களினால் அங்கு ஏராளமான பண செலவு ஏற்பட்டு விட்டது. அங்கு மேற்கொண்ட சிகிச்சை விபரங்கள், மற்றும் செலவழித்த பணத்துக்குரிய ஆதாரங்களை கொண்டு வந்து, அதனை மாகாண அரசின் மருத்துவ காப்புறுதி திட்டத்திற்கு விண்ணப்பித்து ஓரளவு செலவுகளை மீளப்பெறலாம். (Out of country claim submission with Ontario ministry of health & long term care)

3. விமான பிரயாணங்களின் போது விமான சேவை கம்பனியின் அசட்டைகளினால், சில அசௌகரியங்களை எதிர்கொள்ள வேண்டிய நிலைமை ஏற்பட்டு விட்டது. முறைப்பாடு செய்தால் இருபக்கமும் விசாரித்து இலவசமாக தீர்வு பெற்றுத் தர என கனடிய மத்திய அரச போக்குவரத்து அமைச்சின் நியாயமன்றம் ஒன்று என்றும் தயார் நிலையில் உள்ளது. (Air travel complaints directorate of canada)

4. அரச அனுமதிப்பத்திரம் பெற்று வாகனங்கள் விற்பனை செய்யும் நிறுவனம் ஒன்றில் (License auto dealer) நம்பிக்கையுடன் வாகனம் வாங்கி வந்தால் பாரிய ஏமாற்றம் ஏற்பட்டுவிட்டது. பிரச்சினைகளை அவர்களோடு கதைத்து தீர்க்க முடியாது உள்ளது. இத்தகைய பிரச்சினைகளை விசாரித்து தீர்த்து வைக்கவென மாகாண அரசின் நியாயமன்றம் ஒன்று கைகொடுத்து உதவுகிறது. உங்கள் பக்கம் நியாயம் இருந்தால் அவர்களின் தீர்ப்பு ஒரு நீதி மன்றத்தின் தீர்ப்பு போலவே இருக்கும். எதுவிதமான செலவுமில்லை. CAMVAP - Canadian motor vehicle arbitration plan)

5. என்றோ ஒரு நாள் கனடாவில் காலம் பிழைத்த தருணங்களில் செய்த கிரிமினல் குற்றம் பதிவில் இருந்து வாழ்வின் ஒவ்வொரு படி முன்னேற்றத்திற்கு அறுத்துக்கொண்டிருக்கும். சிறு சிறு பிரச்சினைகளில் பொலீஸ் விசாரணைகளில் அகப்பட்டிருந்தால் படங்கள், கைவிரல் அடையாளங்கள் எடுக்கும் நிலைமை உருவாகியிருக்கும். இக்குற்றங்களைத் தொடர்ந்து தற்போது ஒழுங்கான முறையில் வாழ்பவர்கள், தங்களுக்கு விண்ணப்பித்து இவை யாவற்றினையும் நிரந்தரமான அழித்து அதிலிருந்து விடுதலை பெறுங்கள் என கனடாவின் காவல்துறை நிறுவனம் ஒன்று அழைக்கிறது. (National parole board clemency & pardon division)

6. நிரபராதியான நிலையில் இன்னொரு குற்றவாளியினால் துர்அதிஸ்டவசமாக உடல் காயம் அடைய வேண்டிய நிலைமை ஏற்பட்டு அதனால் ஏராளமான மன உளைச்சலும் ஏற்பட்டிருக்கலாம். இவ்வாறு பாதிக்கப்பட்டவர் பொலீஸ் அறிக்கைகள், மருத்துவ அறிக்கைகள் யாவற்றினையும் சமர்ப்பித்து நட்டாடு பெற விண்ணப்பித்தால் அதனை பரிசீலனை செய்து சிறுதொகை நட்டாடு வழங்க என மாகாண அரச நிறுவனம் ஒன்று இயங்கி வருகின்றது. (Ontario criminal injuries compensation board)

7. கனடாவின் கடல் நீரேரிகளில் மரணமானவர்களின் சாம்பலாக்கப்பட்ட அஸ்தியினை கரைக்கலாமா? உறையும் பனி குளிர் காலத்தில் அஸ்தியினை கரைக்க கடல் நீரேரியினை நோக்கி போய் சூழல், சுற்றாடலை மாசுபடுத்த வந்துவிட்டார்கள் என்ற தொல்லைகளை எதிர் கொண்டவர்கள். தொல்லைகள் வரலாம் என அஞ்சுபவர்கள் என அறிந்திருப்போம். ஆனால் சமய கலாச்சாரங்களுடன் தொடர்புடைய அஸ்தி கரைக்கும் சம்பிரதாயம் கனடாவில் சட்டரீதியாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது என்பது பலரும் அறியாத விடயமாக இருக்கலாம். தாரளமாக மரணமானவர் களின் அஸ்தியினை எந்த கடல் நீரேரியி லும் எந்த நேரத்திலும் கரைக்கலாம். ஆனால் தனியாருக்கு சொந்தமான பிரதேசத்தினுள் செல்ல வேண்டாம். சில்லறை காசுகள், தகரங்கள், பிளாஸ்ரிக் பைகள், தேங்காய்கள் போன்றவற்றினை மட்டும் கடல் நீரேரியில் வீசக் கூடாது என்பது மட்டும் இந்த அனுமதிக்கப்பட்ட சட்ட பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளது. (Scattering cremated human remains is legall allowed in Ontario)

தொடரும்...



சிவ. பஞ்சலிங்கம் B.Com.,
(Licensed Insurance Broker)
காப்புறுதி சம்பந்தமான ஆலோசனைகளுக்கு:
416.321.0999



# EDUCATION

## Review Questions15 -15

- **BIOLOGY(Gr12)**

**(i) Explain when and how mRNA is modified in the nucleus and the purpose.**

**(ii) Explain how does mammalian red blood cells derive energy.**

- **MATH**

**(G12) John makes a pet box by cutting off squares with sides $x$ cm in length . The dimensions of the solid rectangle are 20cm by 30cm. The volume of the box is 1008 $cm^3$.**

**(i) Determine an equation that models this situation.**

**(ii) Determine the value of x.**

**(11B) A 20.0 g sample that is 95% $K_2Cr_2O_7$ is allowed to react with 50.0 g of gaseous hydrogen chloride. How much $Cl_2$ is produced in grams?**

$K_2Cr_2O_7\,(aq) + 14HCl(g) \rightarrow 7H_2O(l) + 2KCl\,(aq) + 2\,CrCl_3(aq) + 3\,Cl_2(g)$

**(GR 11B) Calculate the number of moles of each reactant**

$K_2Cr_2O_7$= 0.9x 20 = 18g; $K_2Cr_2O_7$ = 0.061225mol

Number of moles of HCl = 50/36.46= 1.3714

Limiting reactant is $K_2Cr_2O_7$

## Answer Key : 15-14

(Gr 11) $x^4 + 9 \le 6x^2$;

$$(x^2-3)^2 \le 0;\quad x = \mp\sqrt{3}$$

**BIOLOGY 11 &12**

- Cancer cells rapidly dividing and abnormally reproducing.
- Cell division occurs followed by DNA replication.
- Chemical analogues that mimic the structure of nucleotides will prevent DNA polymerase and therefore the DNA replication will be prevented.
- Thus cancer cells won't be able to reproduce/ further division.

**BIOLOGY(Gr12)**

Intron sequences direct the synthesis of different proteins and may control gene activity.

The splicing process itself may help to regulate the export of mRNAto the cytoplasm.

Introns may allow single gene to direct the synthesis of different proteins. This can occur if the same transcript is processed differently among various cell types in the same organism.

**PHYSICS 12**

(a) T= mg = 900x9.8N

(b) (i) pulling back, (h=15-15cos20)= 0.905m

Δ Eg =Δ mgh=mg x0.905 J= $\Delta E_k$ = ½ $mv^2$; V= 4.2m/s

(ii) T = mg + $mv^2/r$ = 9.9x$10^3$ N

(c) $V_2$=0, $V_1$ = 4.2m/s

a= 4.2/0.2 =21m/$s^2$;

F= ma = 900x21N=1.9x$10^3$N




- **POLYNOMIAL FUNCTION (Gr 12)**

$f_{(x)}= ax^3 + bx^2 + cx + d$

$a+b+c+d=-7$ ..........(1)

$8a+4b+2c+d=-8a+4b-2c+d$ ....(2)

$4a+c=0$ ....(2)

The graph passes through origin, d = 0 .....(3)

The graph passes through (-1,17)
$-a+b-c+d=17$ ........(4)

Solve for a, b, c.

$f_{(x)}= 4x^3 + 5x^2 - 16x$

Ans. key
15-15 - next issue
☎ 647 341 3975
KEEN TUTORING CENTRE

# எம்.எஸ்.வி.யை...

34ஆம் பக்கத்தொடர்ச்சி

திரைப்பட இசையே பெரும்பான்மை மக்களின் இசை வடிகாலாக இருக்கிறது. அப்படியானால் எம்.எஸ்.விக்கு முன்னால் இயங்கிய எம்.கே.டி., ஜி.ராமநாதன், எஸ்.எம். சுப்பையா நாயுடு உள்ளிட்ட இசைஞர்களின் படைப்புகள் எங்கே? அவற்றை இன்றைய தலைமுறையினர் கேட்கிறார்களா? பழைய தலைமுறையினரில் கே.வி.மகாதேவனும் எம்.எஸ்.வியுமே இன்று புழக்கத்தில் இருக்கிறார்கள். எ்.ப்.எம். வானொலிகளின் 24 மணி நேரச் சேவைக்காகப் பின்னிரவு களிலும் நேரடி இசை நிகழ்ச்சிகளிலும் ஒலித்துக் கொண்டிருக்கிறார்கள். மற்றபடி, தனிப்பட்ட முறையில் தங்கள் சேகரிப்புகளில் பத்திரப்படுத்திக் கேட்கும் ரசிகர்கள் போன தலைமுறையினராகத்தான் இருக்க முடியும். இவர்கள் அனைவரிடமும் - 50களுக்கு முந்தைய தலைமுறை இசையமைப்பாளர் களிடம் - இல்லாத ஒரு சிறப்பு, எம்.எஸ்.வியின் பாடல்களின் மெட்டுக்களில் காணப்படும் சமகாலத்தன்மை (Contemporariness).

கர்நாடக, மரபார்ந்த சாயல்கள் தூக்கலாகத் தெரியும் மெட்டுக்களிலிருந்து புதியதொரு மெல்லிசை மெட்டுக்களை உருவாக்கும் கற்பனை அவருக்கு முன் யாருக்கும் கைவந்திருக்கவில்லை. 'அன்புள்ள மான்விழியே ஆசையில் ஒரு கடிதம்', 'யார் அந்த நிலவு', 'நான் என்றால் அது அவளும் நானும்', இப்படி நூற்றுக்கணக்கான எம்.எஸ்.வியின் மெட்டுக்கள் காலத்தால் அழியாது. அழியாமல் நாம் பாதுகாக்கவும் வேண்டும்'' என்கிறார், இரா. பிரபாகர்.

மேலும், "எம்.எஸ்.வி. உயிரோடிருந்த கால் நூற்றாண்டு காலத்தில் அவரை என்ன விதத்தில் தமிழ் சமூகம் கௌரவித்திருக் கிறது? சிலைக்குப் பெயர் வைப்பது, தெருக்களுக்குப் பெயர் வைப்பது என்பதைக் கடந்து கலைஞர்களைக் கௌரவிப்பது என்பதன் பொருளையாவது தமிழ்ச் சமூகம் உணர்ந்திருக்கிறதா? 60களில் புகழ் பெற்றிருந்த இங்கிலாந்தின் 'ஜோன் லென-னின் (John Lenon) இமாஜின்' (Imagin) என்றொரு பாடல் 2015 வரை வெவ்வேறு அவதாரங்கள் எடுத்துக் கொண்டிருக்கிறது. மிகவும் எளிமையும் ஆழமும் நிரம்பிய பாடல்.



ஈகிள்ஸ் என்ற குழுவினரின் 'ஹோட்டல் கலிபோர்னியா' (Hotel California) நூற்றுக் கணக்கான பரிமாணங்களைப் பெற்றிருக்கி றது. உலகம் முழுவதும் மரபிசைகளும் வெகுசன இசைகளும் புதிய தொழில் நுட்பத்தால் மறுஆக்கம் செய்யப்பட்டு, புதிய சோடனைகளுடன் புதிய ஊடகங்களில் வலம் வந்துகொண்டிருக்கின்றன. ஆனால், நம்முடைய பல ஜாம்பவான்களின் இசைப் படைப்புகள் அந்தக் காலத் தொழில்நுட்பத்தில் கிராமபோன் கரகரப்புடன் அடுத்த தலைமுறையைத் தொடமுடியாத தூரத்தில் நிற்கின்றன. புதிய பாடகர்ளைக் கொண்டு துல்லியமான தொழில்நுட்பத்தில் அவை வெளிவரவேண்டும். பீத்தோவனும் மொசார்ட்டும்கூட அப்படித்தான் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். சென்ற ஆண்டுச் சூப்பர் சிங்கர் நிகழ்ச்சியில் பதினைந்தைத் தாண்டாத சிறுவன் ஒருவன் சீர்காழி கோவிந்தராஜனின் 'உள்ளத்தில் நல்ல உள்ளம் உறங்காதென்பது...' என்ற கர்ணன் படப் பாடலைப் பாடியபோது அப்பாடலின் மூலப்பிரதி உண்டாக்காத அதிர்வுகளை அது ஏற்படுத்தியது. அரங்கத்தில் இருந்த அத்தனை பேரும் உணர்ச்சி மேலிட்டுக் கண்ணீர் உகுத்தனர். எத்தனையோ முறை கேட்டிருந்தாலும் அந்தச் சிறுவனின் உணர்ச்சிமயமான நிகழ்த்துதலும் இசைக் குழுவினரின் புதிய அணுகுமுறையும் சேர்த்து அப்பாடலை மீண்டும் உயிர்ப்பித்தது. இந்தத் தலைமுறையில் மிகவும் திறமை படைத்த இளம் பாடகர்களும் இசை கலைஞர்களும் இருக்கிறார்கள் என்பதில் சந்தேகத்திற்கு இடமில்லை. ஆகவே, எம்.எஸ்.வி. உள்ளிட்ட கலைஞர்களின் தேர்ந்தெடுக்கப்பட்ட படைப்புகள் மறுபதிவு செய்யப்படவேண்டும். அதோடு அவர்களின் மெட்டுக்களின் அமைப்பு, புதுமையாக்கம் (Innovation), மரபிசையைக் கையாளும் விதம், மேற்கத்திய இசைத்தாக்கம், படைப்பாற்றல் போன்ற பல்வேறு தலைப்புக்களில் ஆழமான ஆய்வுக் கட்டுரைகள் தொகுக்கப்பட்டு நூல்களாக்கப்பட வேண்டும். கல்விப்புலமும் அறிவுப்புலமும் உருவாக்கும் காத்திரமான உரையாடல்களே கலைஞர்களை வரலாற்றில் இருத்தும் என்பதைத் தமிழ்ச் சமூகம் இனியாவது உணரவேண்டும்'' என்கிறார் இசையமைப்பாளர் இரா. பிரபாகர். தமிழ்ச் சமூகம் செய்யுமா? நாம் செய்வோமா?



யோகா சோதிடம்

• கிரகப்பொருத்தம் பார்த்தல் • சுபமுகூர்த்தம் கணித்தல்
• பலன் பார்த்தல் • சாதகக் குறிப்புக் கணித்தல்

தொடர்புகளுக்கு: 416.299.8361

# டாக்டர் அப்துல் கலாம்



அரசுப்பள்ளியில் படித்த
இந்தியாவின் குடியரசே ---

விரிகுடா மீன்களுடன் விளையாடியபடி
விண்மீன்களுக்கு பாதை காட்டியவனே ---

கடலைத்தொட்டபடி
அலைகளில் நனைந்தபடி
அசையாத அறிவியல் பார்வையால்
வானத்தில் மீன்களை செலுத்தியவரே ---

உன் தெருவிளக்கு அறிவில் தான்
பல விமானங்கள்
திருவிழா கொண்டாடின ---

"அக்னி" கணைகள்
ஏவும் போது
கீழே அக்னிகுழம்பு தெரியும்-
அதைப்போன்ற பல மடங்கு
கனல் உனக்குள் இருந்தது தெரியுமோ??

பூமிக்குள் சுற்றிக்கொண்டிருந்தவர் மத்தியில்
நீ ரோகிணிக்கால்களால் பூமியை சுற்றி வந்தாய். ----

உன் கருப்பைக்குள் பல
ப்ரித்விகள் ஜனித்ததே---

இந்தியாவில் பல விருதுகளும் பரிசுகளும்
உன்னை பரிசாகப்பெற்றன-

உனக்கு டாக்டர் பட்டம் கொடுத்து
பெருமை பெற்றன பல பல்கலைக்கழகங்கள்

20-20 ஓவர்களில்
மூழ்கிய மனிதர்களை
"இந்தியா 2020" என்ற
முத்தெடுக்க வைத்தவரே -

மாணவர்கள் மனதில்
எழுந்த அணுசக்தியே -
அவர்களை கனவுகளால்
குளிக்கச்சொன்னாய் ---

அக்னிச்சிறகுகளாய்
பறந்து வந்த இந்த பறவை
இறப்பில்லை -

இந்தியாவிற்கு வெளிச்சத்தை
காட்டியபடியே உயிருடன் நீ --

நீ இந்தியாவின்
பதினோராம் அவதாரம்
ஆம் நீ இந்த நாட்டின் பதினோராம் அவதாரம்

ஆக்கம் -
டாக்டர் எஸ். பார்த்தசாரதி, MD DNB PhD FICA

# மூதறிஞர் சிவத்தம்பி

பேராசான் அவர்களுடனான தொடர்பை உறவை உரையாடல்களை எழுத்தில் முற்று முழுவதுமாக வரைந்துவிட இயலாது. யாழ். குடாநாட்டில் வடமராட்சிப் பிரதேசத்தில் கலையும் கல்வியும் ஊற்றெடுக்கும் 'கரவெட்டி' ஊரில் பிறந்தார். ஊருக்கும் உலகுக்கும் அவர் பெருமை சேர்த்தார். வாழ்க்கைத் துணைவியைப் பெற்ற 'வல்வெட்டித் துறைக்கும்' மகிமை ஆனார்.



பெற்ற கல்விக் கடலாக விளங்கினார். இலக்கிய இயங்கு நிலைகளை மார்க்சிசக் கொள்கைக்குள் தேடினார். இலங்கையிலும் தமிழ்நாட்டிலும் பேராசிரியப் பணிசெய்தார்.

உலகின் சிறப்புப்பெற்ற பல்கலைக் கழகங்களுக்கும் வருகைப்பேராசானாகச் சென்று விரிவுரைகள் ஆற்றினார். ஆய்வுக் கட்டுரைகள் சமர்ப்பித்தார். மறைந்து கிடந்த படைப்பாளிகளின் திறமை கண்டு நீதியான விமர்சனம் செய்து பல எழுத்தாளர்களை உலக வெளிச்சத்தில் மிதக்கவிட்டார். முற்போக்குச் சிந்தனையில் மூழ்கி எல்லாவித குழும மக்களின் இதயங்களிலும் ஞான ஒளிவிளக்காக வாழ்கின்றார்.

ஏறத்தாழ எழுபதுக்கும் மேற்பட்ட நூல்கள் இருநூறுக்கும் மேற்பட்ட கட்டுரைகள் இதுவரையில் வெளிவந்தவை. இன்னும் பதிப்புப் பெறுவதற்கென எழுத்துக்கள் ஒலி ஒளி நாடாக்கள் பல்கலைக்கழகங்களின் பாதுகாப்பில் இருக்கின்றன.

தமிழ்நாட்டு அரசு மேன்மைமிக்க வி.க. அதிஉயர்விருதை வழங்கிக் கௌரவித்தது. பேராசிரியரின் அறிவும் புகழும் இவ்வுலகம் உள்ளவரை என்றென்றும் நிலைத்து நிற்கும்.

பேராசிரியர் தனது புலமைத்தேடலால் 'அறிவு விருட்சமானார்'. அரசியலா அறிவியலா பொருளியலா சமூகவியலா இலக்கியமா நாடகமா மானிடவியலா விமர்சனமா பல்துறைகளிலும் தெளிவு

கடமை கண்ணியம் கட்டுப்பாடு கருணை பொறுமை மனிதநேயம் முதலிய நற்பண்புகளுடன் "பேராசிரியர்" என்பதன் இலக்கணமாய் வாழ்ந்தவர்தான் 'பேரறிஞர் கார்த்திகேசு சிவத்தம்பி' அவர்கள்.

- கந்தசாமி முத்துராஜா -

# எம் எஸ் வி இன் இசை ஆன்மாவுக்கு இறுதி அஞ்சலி

நல் இசை எல்லாம் வழங்கியதாலே மெல்லிசை மன்னர் மாமணி என ரசிகர்களாலே போற்றப்பட்டார். இன்னிசை மேதை என்றால் எம் எஸ் வி தான். காலா காலம் தலை முறையாக தமிழ், மலையாளம், தெலுங்கு, கன்னடா, ஹிந்தி போன்ற மொழி வழியாக இசை அமைத்து சினிமா கலையோடு இரண்டறக் கலந்தார்.



எம் எஸ் வி இளமையில் இருந்தே இசைதனைக் கற்று திரைப்பட உலகில் சிறந்த பல படங்களுக்கு சிறப்பாக பாடல்களுக்கு இசை அமைத்து முடிசூடா மன்னனாய் புகழ்பெற்றவர். இவர் டி கே இராமமூர்த்தியுடன் இணைந்து இரட்டையர்களாக சேர்ந்து இசையில் கொடிகட்டிப் பறந்தவர். எம் எஸ் வி, இசை ஞானி இளையராஜாவுடன் சேர்ந்து இசை அமைத்த சிறந்த படங்கள் பல. அதில் பாடல்கள் பாடியும் பாத்திரம் ஏற்று நடித்தும் புகழ் பெற்றவர் எம் எஸ் வி. கலை மாமணி போன்ற பல விருதுகளும் பல்கலைக்கழகத்தால் டாக்டர் பட்டமும் தமிழக முதல்வர் ஜெயலதா அம்மையாரிடம் இசை சக்கரவர்த்தி என்ற பட்டமும் பெற்றவர். எம் எஸ் வி கலை மாமணி போன்ற பல விருதுகளும் பல்கலைக்கழகத்தால் டாக்டர் பட்டமும் தமிழக முதல்வர் ஜெயலலிதா அம்மையாரிடம் இசை சக்கரவர்த்தி என்ற பட்டமும் பெற்றவர் எம் எஸ் வி இன்று மண்ணை விட்டு மறைந்தாலும் இசை ரசிகர்களின் இதயம் விட்டு அகலா இசைச்சக்கரவர்த்தி எம் எஸ் வி யே உமது இசை ஆன்மாவுக்கு ரசிகர்களின் சார்பில் எமது இறுதி அஞ்சலி.

- கவிநாதம் பரந்தாமன் -


கனடா மாதகல் நலன்புரி சங்கத்தின்

## வேனிற்கால ஒன்றுகூடல் - 2015

இடம்: Morning Side Park Area # 8 நேரம்: காலை 9:30
மோர்ணிங்சைட் பூங்கா: திடல் எண்: 8 (Morningside & Ellesmere Rd.)

காலம்: ஆகஸ்ட் 2ஆம் நாள் (02-08-2015) ஞாயிற்றுக்கிழமை

சிறுவருக்கான பல்வேறு விளையாட்டுகளும், பெரியோருக்கான பொழுதுபோக்கு நிகழ்வுகளும் கூடிக்குலவி உண்டுமகிழும் உபசார நிகழ்வுகளும் இடம்பெறும்.

நல்வாய்ப்புச் சீட்டிழுப்பில் 1000 டொலர் பெறுமதியான பரிசில்கள் வழங்கப்படவுள்ளன.
கனடாவாழ் மாதகல்மக்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

தொடர்புகட்கு: (416) 282-0947 (416) 903-7430 (905) 472-7208 (416) 494-6089



நகைச்சுவைத் தொடர் 315

# ராசம்மா ராச்சியம்

கலகலப்பு தீசன்



(கனவுகள் தான் நினைவாகின்றன.
கடும் சிந்தனை தான் கனவாக உருவெடுக்கிறது)



மனதிலுறுதி வேண்டும்
வாக்கினிலே யினிமை வேண்டும்
நினைவு நல்லது வேண்டும்
நெருங்கின பொருள் கைப்பட வேண்டும்
கனவு மெய்ப்பட வேண்டும்
கைவசமாவது விரைவில் வேண்டும்
தனமு மின்கமும் வேண்டும்
தரணியிலே பெருமை வேண்டும்-மகாகவி பாரதியார்

"உறக்கத்தில் வருவதல்ல கனவு உன்னை உறங்கவிடாமல்
செய்வதுதான் கனவு" - அணு விஞ்ஞான நாயகன் - அப்துல் கலாம்




கடந்த 4, 5 நாட்களாக ரி.வி. ரேடியோ பத்திரிகைகள் முழுவதும் அப்துல் கலாமின் மரணச் செய்தியும் அவரது விஞ்ஞான சோதனைகளும் சாதனைகளும் தான்.
பார்த்தவர்கள் எல்லாம் மந்திரத்தில் கட்டுப்பட்டவர் போலாகிவிட்டனர்.
அவ்வப்போது சிறுசிறு செய்திகளாகப் பார்த்து மரணத்தின் பின்தான் செய்திக் கோவையை பலர் பாத்திருப்பார்கள்.
போலியோ நோயால் பாதிக்கப்பட்டவர்களும் அநியாயப் போரால் காலை இழந்தவர்களும் செயற்கை கால்களை பொருத்தி நடந்தனர். ஆனால் அதன் பாரம்?....
மற்றவர் நடையில் தான் வலியைக்கண்டார். அதன் பாரத்தை பத்திலொன்றாக குறைத்து பலருக்கு வாழ்க்கைப் பாதை வகுத்தவர்.
கடமையில் இருக்கும்போதே மரணம் வேண்டுமெனக் கேட்டவர்.
கோடிக்கணக்கான மக்கள் முகத்தில் எப்போதும் சிரிப்பை பார்க்க வேண்டுமென்றவர்.
கண்ணீரை வரவைத்துவிட்டு சென்றுவிட்டார்.
தண்ணீரில் தளம்பிய இராமேஸ்வரம் இன்று கண்ணீரில் மிதக்கிறது.

மாறி மாறி செய்திகளைப்பார்த்து களையிழந்து போயிருந்தது உலகர் குழாம். வளமைபோலின்றி மிகவும் மெதுவாக விமான நிலையத்தில் மேக்கப் இன்றி வந்திறங்கிய நடிகைபோல காய்ந்த முகத்துடன் வந்தா ஐபொட் அகிலாண்டேஸ்வரி.
உள் மனதில் மகிழ்ச்சியோடு அதனை வெளிக்காட்டிக் கொள்ளாமல் என்ன



அகிலா...ஒருமாதிரி வாறாய் என்று ஆட்டிலறி அன்னம்மா கேட்க... என்ன தெரியாத மாதிரி கேட்கிறியள் என தொடங்கினா செக்கண்ட புளோர் செல்லம்மா. மார்க்கம் ஃபெயர் கிறவுண்ட் விழா வுக்கு போறதெண்டு பியூட்டி பார்லர் போய் முகம் நெளிவெடுத்தவை, எல்லாம் வேஸ்ற் எனும்போது அகிலாண்டேஸ்வரி எல்லோரையும் பார்த்த பார்வை...

அது முகம் நெளிவெடுக்கிறேல்லை பேசியல் என்று காதுக்குள் ரூபி சொல்ல அது எனக்குத்தெரியும் என சிரித்தா செக்கண்ட் புளோர் செல்லம்மா.

உலகர் சேல் பேப்பரைப் பார்த்துக் கொண்டிருந்தாலும் செல்லம்மா குறூப்பின் பிரச்சினை வாக்குவாதங்களைப் பார்க்கத் தவறமாட்டார்.
சில பிரச்சினைகள் பிறேக் இல்லாமலே தொடரும்.

றியலி யுவன் சங்கர் ராஜா சிக்காம். அதுதான் புறோகிறாம் கான்சல். ஆனா..இனி 2-3 கிழமை தொடர்ந்து வேறை வேறை இருக்குமாம் என சமாளித்தா.



உலகண்ணை பராக் ஒபாமா முதலாவது தடவையாக கென்யா நாட்டிற்கு உத்தியோகபூர்வமாக போட்டு வந்திட்டார் என ஆட்டிலறி அன்னம்மா சொல்ல அதுதான் அவற்றை தகப்பன்ரை நாடு என.. தான் படித்த சரித்திரத்தை விளக்கினா செக்கண்ட்புளோர் செல்லம்மா.

தனது தந்தையாரின் நாடெல்லவா..
தந்தையர் நாடெனும் போதினிலே ஒரு சக்தி பிறக்குது மூச்சினிலே.. - பாரதியார்
'பெற்ற தாயும் பிறந்த நன்நாடும் நற்தவ வானிலும் நனிசிறந்ததுவே.'

ஆனால் ஒபாமா அவர் ஹவாயி..ஹொனலுலுவில் தான் பிறந்தவர் என்றா ஐபொட் அகிலாண்டேஸ்வரி. இப்ப லெக்சன் சண்டை. நினைக்க சிரிப்பா இருக்கு. யாழ்ப்பாணத்தில் அல்லது கொழும்பில் பிறந்து அனுராதபுரத்தில் லெக்சன் கேட்டா என்ன பரம்பரை, எந்த ஊர் என சண்டை பிடிக்கினம்.

ஆனால் ஒபாமாவின்ரை அப்பா கென்யா, ஒபாமா பிறந்தது ஹவாய். அமெரிக்காவில் படிச்சு ஜனாதிபதியாக வந்திட்டார். நல்லகாலம் ஒபாமா ஒட்டிசுட்டானிலை பிறக்கேல்லை. அங்கை பிறந்திருந்தா ஒண்டுக்கும் விட்டிருக்கமாட்டினம் எனச் சொல்லி சிரிச்சா செக்கண்ட்புளோர் செல்லம்மா.



பிறக்க ஒரு நாடு வாழ ஒரு நாடு என பராசக்தி படத்தில சிவாஜி கணேசனின் வசனம்தான் உலகருக்கு ஞாபகம் வந்தது.

'ஆளுக்கொரு தேதிவைத்து ஆண்டவன் அழைப்பான்.'
கடந்த வருடத்திலிருந்து இன்றுவரை ஈழத்திலும் ஐரோப்பாவிலும் இந்தியாவிலும் கனடாவிலும் பலரை இழந்துவிட்டோம்.

வாழ்ந்தோம் இறந்தோம் என்பதை விட மற்றவர்கள் வாழவேண்டும் என வழி காட்டியவர்களையும் தமிழுக்காக தம்மை அர்ப்பணித்த பலரையும் இழந்துவிட்டோம். என்றுமே அவர்களை மறக்கமுடியாது.



இன்றெல்லாம் உயிரோடிருப்பவர்களையே கண்டுகொள்வதில்லை.
உண்ண ஒருவருக்கு உணவில்லையென்றால்?..
மரணப் படுக்கையிலிருந்த மறைந்த மெல்லிசை மன்னர் எம்.எஸ்.விஸ்வநாதனை வாத்தியக் கலைஞர்கள் நண்பர்கள் பார்க்கச் சென்றபொழுது கை சைகையால் சுகமா.. சாப்பிட்டீர்களா என்று கேட்டாராம்.
கஸ்டத்திலிருந்து வந்தவனுக்குத்தான் தெரியும் கஸ்டம், பசி, பட்டினி... மற்றவர்களை மதிக்க...சொல்லித்தெரியாது பட்டவனுக்குத்தான் தெரியும்.

இங்கு நடைபெறும் கலை நிகழ்ச்சிகளில், மேடை நிகழ்ச்சிகளில் கலைஞர்கள், தொழில் நுட்பக் கலைஞர்கள் கவனிக்கப்படுவதேயில்லை. அவர்கள் அதனை வெளியில் சொல்வது குறைவு.
வாழும்போது கலைஞர்களை வாழ்த்துங்கள், பாராட்டுங்கள், கௌரவம் செய்யுங்கள்.

ஐபொட் அகிலாண்டேஸ்வரி தனது பழைய ஆசிரியரின் மரணச்சடங்கில் அவரைப்பற்றி தவறாகப்பேசி மரணச்சடங்கு முடிந்தபின் அவரது குடும்பத்தாரிடம் மணிக்கணக்காக வாங்கிக்கட்டினா. முன்னரே மனைவி இறந்த அந்த மாஸ்ரரின் மரணச்சடங்கில் 'இங்கிருக்கும் அவரது மனைவிக்கும் எனது ஆழ்ந்த அனுதாபத்தை கூறுகிறேன்' என்று பேசியது பெரும் குழப்பத்தை உண்டாக்கிவிட்டது. ஐபொட் அகிலாண்டேஸ்வரி அதனை உலகரிடம் வந்து சொல்லி அழுதபோது
உலகர் இதுபோல பல இடங்களில் நடைபெற்ற நிகழ்ச்சிகளை நினைத்துப்பார்த்தார்.
'கண் கெட்டபின் சூரிய நமஸ்காரம்' என்பது போல இறந்தபின் அவர்கள் வரலாற்றை தவறாக சேகரித்து மரணச்சடங்கில் மட்டும் பேசாதீர்கள்.

உங்களில் இறந்தவர்களின் நற்செயல்கள் பற்றியே கூறுங்கள் - நபிகள் நாயகம்



'ஊருக்காக வாழும் கலைஞன் தன்னை மறப்பான்.
தன் கண்ணீரை மூடிக்கொண்டு இன்பம் கொடுப்பான்' - சங்கமம் திரைப்பட பாடல்

ஒகஸ்ற் 1....15...



1. கனடா ஸ்ரீ ஐயப்பன் இந்து ஆலய தேர். ஜோதி விழா (ஒகஸ்ற் 1, 2)

1. கதிர்காம தீர்த்தம்.

2. அலெக்சாண்டர் கிரகாம் பெல் நினைவுதினம்.
   ரெலிபோனைக் கண்டுபிடித்தவர். (மார்ச் 3, 1847- -ஒகஸ்ட் 2, 1922)



3. சிவிக் விடுமுறை

4. பொன் கணேசமூர்த்தி (நினைவு தினம்) (ஒகஸ்ட் 4, 2006)
   எழுத்தாளர், வானொலி கலைஞர்.



10. 610 முகமது நபி குர்ஆனைப் பெற்றநாள்.
    இது இஸ்லாமில் "லாய்லாட்ஜ –காதர்" 'நாள் எனப்படும்.

11. ஆடி செவ்வாய் விரதம் (நிறைவு)



12. கனடா கந்தசுவாமி கோவில் தேர்.

13 கனடா கந்தசுவாமி கோவில் தீர்த்தம்.

13. ஆடி அமாவாசை

13. international left hander's day





இலங்கை தபால் தொலை தொடர்பு ஊழியர்கள் சங்கம் - கனடா நடத்தும்

## 19ஆவது பொதுக் கூட்டம்

காலம் : ஆவணி மாதம் 8ம் திகதி (08-08-2015)
நேரம் : காலை 10:30 மணிமுதல்
இடம் : 4725 Sheppard Ave East, Party Hall Scarborough ON M1S 5B2

இலங்கை முன்னாள் தபால் தொலை தொடர்பு ஊழியர்கள் யாவரையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கிறோம்.

தொடர்புகட்கு: 416-454-6360, 416-818-8990, 647-856-0951, 416-412-3481, 416-316-4417

# பத்திரகாளி சோதிட நிலையம்

# BADRAKALLI ASTROLOGY CENTER



## Pandit Sri Hanuman

Kerala (Choddankiri)

# 416.846.2798

## 100% Guaranteed Result



The Pandith can read the Past, Present & Future by Hand prediction, name, date of birth relating to love, education, marriage, money. I will help in all problems and work with god and holy spirit. Are you suffering in silence and nobody knows your pain or sorrow, but you and god know. Well you are not alone, the holy spirit will guide you tome and convince you. I will remove and destroy all bad, witchcraft, jealously and black magic permanently with superior strength & holy given power to protect to you and your family from evil things.

கேரளாவிலிருந்து வருகை தந்துள்ள பிரபல ஜோதிட வல்லுனர் பண்டித் **Pandit Sri Hanuman** சாஸ்திரிகள் பல இடங்களுக்குச் சென்று தற்போது கனடா வந்துள்ளார். இவர் கைரேகை, ஜாதகம், முகநாடி ஆகியவை கொண்டு மிகத்துல்லியமாக நடந்தவை, நடக்கவிருப்பவை பற்றிய விபரங்களைக் கூறுவார். இவற்றையெல்லாம் அறிந்து பரிகாரம் செய்து கொள்ள ஒருமுறை இவரைச் சந்தியுங்கள்.
கண்ணூறு, நாவூறுக்கு வெள்ளிக்கிழமை இலவசமாக நூல் கட்டப்படும்.

- கைரேகை
- நாம நட்சத்திரம்
- கல்வி, உத்தியோகம்
- தொழில், வியாபாரம்
- இலட்சுமி வசீகரம்
- வதிவிடப் பிரச்சனைகள்
- வெளிநாட்டுப் பயணங்கள்
- நீதிமன்ற வழக்குகள்
- பெண் பிள்ளைகள் – பெற்றார் பிரச்சனைகள்
- திருமணயோகம்
- குழந்தை பாக்கியம்
- கணவன் – மனைவி ஒற்றுமையின்மை
- எதிரிகள் கண்ணூறு, நாவூறு
- சர்ப்பதோஷம்
- கர்ப்பதோஷம்
- கஷ்ட – நஷ்டங்கள்
- வாகனப் பொருத்தம்
- ஒன்றுகூடுதல்

- Business Investments
- Jealousy
- Childless Couples
- Depression
- Worries About Loved Ones
- Enemy Problems
- Money Problems
- Sexual Problems
- Love Problems
- House Protection
- Work Problems
- Money Blessing
- Family Arguments
- Drinking Problems

பிளாக் மெஜிக் அகற்றி பாதுகாப்புக் கொடுக்கப்படும்.

**5215 Finch Ave. East, Unit #257, Upstairs, Scarborough ON M1S 0C2**

**GTA Square Mall (2nd Floor) (Middlefield & Finch)**

# மானைப் பாருங்கள் அழகு!

# அழகியற் கோலங்கள்

**கடந்த இதழ் தொடர்ச்சி....**

அழகு என்பதற்கு என்ன என்ற விளக்கம் இதுவரை எல்லோராலும் ஏற்றுக்கொள்ளும் தன்மையில் வரையறுக்கப்படவில்லை. பெண் என்றால் அழகு. அழகு என்றால்



**- த. சிவபாலு -**

பெண் என்பது கவிஞர்கள் முதல் கதா ஆசிரியர்கள் வரை தங்கள் எழுத்துக்குள் அகப்படுத்தாமல் விட்டபாடில்லை. பண்டைக் காலந்தொட்டு இன்றுவரை பெண்கள் பற்றிப் பாடிய பாடல்கள், எழுதிய கதைகள் வர்ணித்த வர்ணனைகள் எண்ணிலடங்கா. இவை அனைத்தும் பெண்களின் அழகை வெளிக்காட்டுபவையே. ஆண் என்றால் கட்டுடல், வீரம், துணிவு என்பனவற்றையே கண்டுகொள்கின்றார்கள். மேலைத்தேய வரலாற்றில் கிளியோபத்ரா, மர்லின்மன்றோ, எலிசபெத் ரெயிலர் போன்றவர்கள் அழகின் சின்னங்களாக கருதப்பட்டார்கள். சிறந்த அழகிகளாகக் கருதப்பட்டதற்கு அவர்களின் உடல் கட்டும், கவர்ச்சியுமே காரணம் எனக் கொள்ளப்படுகின்றது.

மன்மதன் அழகின் திரு உருவம் எனக்கருதப்படுகின்றது. எந்தக்குறையும் இல்லாமல் மனித உருவம் எதுவுமே இருக்கமுடியாது என்பது பொதுவான கருத்து. அப்படியானால மன்மதனின் சிருஷ்டி அப்படியான ஒன்றாக இருந்திருக்கலாமா? அதற்காகத்தான் உருவமே இல்லாத வருணனை உருவமாகக் கற்பனை செய்யப்படுவதாக என்று எண்ணத்தோன்றுகின்றது. ரதியும், மன்மதனும் போல எனக் கூறுவார்கள். அவர்களின் வருணனை அத்துணை அழகை அள்ளி எறிகின்ற சாயலில் புலவர்கள் ஏன் குரவர்கள் கூடப் பாடியுள்ளார்களே! விலங்குளில் அழகானது மான். மருட்சிப் பார்வை உடையது. அதனாலன்றோ பெண்களின் பார்வைக்கு மானை ஒப்பிடுகின்றார்கள். புள்ளிப் புள்ளி மானே என்று பாடல்களை யாத்திருக்கின்றார்கள். அள்ளி உந்தன் மேனியில் தங்கம்போல புள்ளியை யார் உனக்குத் தந்தது? என்று கேட்கும் அளவிற்கு பொன் நிறத்து மேனி ஜொலிக்கும் அழகோ அழகு. பொதுவாக விலங்குகள் பறவைகளில் ஆண் இனம்தான் அழகுத்தோற்றத்தையும் கம்பீரத்தையும் கொடுக்கின்றது. எனினும் மானினம் பேடை என்று கம்பன் குறிப்பிடும் சீதையின் அழகை கவிதையில் வடித்துத் தந்தமை எவ்வளவு சுவையாக உள்ளது. மரியா லூசியா ரெயிலர் என்னும் பிரபல ஆங்கில் கவிஞரின் பாடல் ஒன்றை இங்கு பார்ப்போம். அவர் எதற்கு எது அழகு என்று குறிப்பிடுவதோடு மட்டுமன்றி நீயே அழகு என மனிதப் பிறவியின் சிறப்பை வியக்கின்றாரா? அல்லது காக்கைக்கும் தன்குஞ்சு பொன்குஞ்சு என்கின்றாரா?

அழகு என்றால் என்ன மரியா லூசிய ரெயிலர் என்னும் கவிஞர் அழகைப் பற்றி எழுதிய ஒரு கவிதையை நோக்கும்போது அவர் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

வாழ்வில் அதிகமாக உள்ளது அழகு  
கடவுளின் ஒரு கொடை அழகு  
உள்ளத்தைத் தொடுவது அழகு,  
மற்றும்  
எதிலும் சாதாரணமாக இருப்பது அழகு

மாலையில் கடலில் மறையும் காட்சி  
சூரியனின் அழகு  
உண்மையே அழகு, அழகே உண்மை  
மிகச் சிறந்த புதையல் ஒருவரின்  
கண்ணில் படும் அழகு  
அன்பின் அழகே உண்மையானது.  
பிரகாசமான வானவில்லின் வர்ணங்கள்,  
வசந்தத்தின் அழகு  
அழகு எது?  
அழகே நீதான்.

மரியா லூசிய ரெயிலர் அழகை உன்னில் காண் என்கின்றார். காக்கை கறுப்பு என்பதால் அழகற்றது என்கின்றோம். 'காக்கைச் சிறகினிலே நந்தன் லாலா உந்தன் கரிய நிறம் தோன்றுதையா' எனப் பாவலன் காக்கையின் கரிய நிறத்திலும் அழகைக்காண்கின்றானே! எனவே எது அழகு என்பது அவரவர் உள்ளத்தைப் பொறுத்தது என்பதனை இக்கவிதையில் அழகாக அழகு இதயத்தின் அழகே அழகு என்கின்றார். உண்மை நெஞ்சத்து அழகே அழகு என்பதனைப் முன்னரே தமிழ் புலவர்கள் பாடியுள்ளனர்.

"A thing of beauty is joy for ever" என்று ஆங்கிலத்தில் ஒரு கவிதைவரி உண்டு. அழகு நமக்கு இன்பம் அளிக்கிறது. எந்தப்பொருளில் அழகு இல்லையோ அதில் நமக்கு இன்பம் இருப்பதில்லை. இன்பம் இல்லாத பொருட்கள் எல்லாம் சுமை யாகவே மாறிவிடுகின்றன. நம் மனநிலை வளரவளர வேற்றுமைகளையும், குறுகிய மனப்பான்மையையும் அறவே ஒழித்துவிட்டு அழகின் உண்மையை உணரமுடியும். மனம் பக்குவம் அடைந்து விட்டால் அழகிலே உண்மையையும் உண்மையில் அழகையும் சுலபமாகக் காண முடியும்.

குஞ்சி அழகும் கொடுந்தானைக்  
கோட்டழகும்  
மஞ்சள் அழகும் அழகல்ல - நெஞ்சத்து  
நல்லம் யாம் என்னும் நடுவு  
நிலைமையால்  
கல்வி அழகே அழகு.

என நாலடியார் என்னும் பழந்தமிழ் இலக்கியம் அழகுக்கு வரைவிலக்கணம் கொடுக்கின்றது.

தொடரும்....







# Special Tridel Package On GTA Square

## Summer Festival Day

## August 08 & 09, 2015








OPEN HOUSE
@ GTA Square Mall



Open Hours
1.00PM - 6.00PM

For Further Information Please Call

**HomeLife / GTA Realty Inc.** Brokerage*

"Dream is Yours Obligation is ours"

**5215 Finch Ave., E. #203 Toronto.**

**Contact: 416.321.6969**

*Independently owned & operated


சிவபாலா ஆன்மீக சுற்றுலா
வட தென்னிந்திய திருத்தல யாத்திரை - கேரளா உட்பட
புறப்படும் திகதி – 29-09-2015 திரும்பும் திகதி – 07-11-2015
1. மும்பை - சீரடி சாய்பாபா
2. மகாராஸ்டிரா - சனீஸ்வரன் கோயில்
3. டில்லி - ஹரிதுவா, ரிஷிகேஷ், தாஜ்மஹால்
4. ஹரியானா - குருசேஷத்திரம்
5. காசி - விஸ்வநாதர் கோயில், விசாலாட்சி கோயில், அன்ன பூரணி கோயில், சோழி அம்மன் கோயில், காளபைரவர் கோயில்
6. மேல் மருவத்தூர் - ஆதிபராசக்தி கோயில்
7. சென்னை:- மாமல்லபுரம், கோவளம் கடற்கரை (சென்னை) (V. G. P. Golden Beach) தங்கக் கடற்கரை
8. மதுரை - மீனாட்சி கோயில், கூடல் அழகர் கோயில், கள்ளழகர் கோயில்
9. ஆறுபடை வீடு:- பழநி, சுவாமிமலை, பழமுதிர்சோலை, திருச்செந்தூர், திருத்தணி, திருப்பரங்குன்றம்.
10. திருச்சி:- உச்சிப்பிள்ளையார், ஸ்ரீரங்கம், திருவானைக்கா, சமயபுரம், மாரியம்மன் கோயில்.
11. கும்பகோணம்:- கும்பேஸ்வரர் கோயில், மாமாங்கம், நவக்கிரக கோயில், ஒன்பது, மன்னார்குடி பெருமாள் கோயில்.
12. திருநள்ளாறு:- சனீஸ்வரன் கோயில்
13. இராமேஸ்வரம்
14. சிதம்பரம்:- தில்லைக் காளி கோயில்
15. அன்னை வேளாங்கண்ணி
16. காஞ்சிபுரம்:- ஏகாம்பரேஸ்வரர் கோயில், காமாட்சி அம்மன் கோயில்,வரதராசப் பெருமாள் கோயில்
17. காரைக்குடி:- பிள்ளையார் பட்டி கோயில், அரண்மனை
18. தேவிபுரம்:- கடல் கோயில்
19. வேலூர்:- ஸ்ரீநாராயணிபீடம், பொற்கோயில்
20. திருவண்ணாமலை:- அருணாசலேஸ்வரர் கோவில்
21. திருப்பதி:- வெங்கடாசலபதி
22. திருக்காளகஸ்தி
23. திருநெல்வேலி:- குற்றாலம், தென்காசி, நெல்லையப்பர் கோயில், அகத்தியர் அருவி
24. கன்னியாகுமரி:- குமரி பகவதி அம்மன் கோயில், விவேகானந்தர் பாறை, திருவள்ளுவர் சிலை, சுசீந்திரம்
25. பெங்களூர்:- ஹரேராமா ஹரே கிருஸ்ணா கோயில், புட்டபத்தி சாய்பாபா
26. திருவனந்தபுரம்:- பத்மநாபர் கோயில்
27. சபரி மலை
28. குருவாயூர் கோயில்
29. ஆலப்புழா படகு சவாரி (கேரளா)
30. கொடைக்கானல்
31. புதுக்கோட்டை:- ஆவுடையார் கோயில் (மாணிக்கவாசகர் நரியை பரியாக்கிய கோயில்)
32. தஞ்சாவூர்:- பெரியகோயில், கங்கைகொண்டான் சோழபுரம், அரண்மனை
33. வேதாரணியம்:- திருஞானசம்பந்தர் பதிகம் பாடியது
34. ஸ்ரீ வில்லிபுத்தூர்
35. திருவாரூர்
இந்த யாத்திரையில் பங்குபெற விரும்புவோர் செப்ரம்பர் மாதம் 5ம் திகதிக்கு (05-09-2015) முன்பாக எம்முடன் தொடர்புகொள்ளவும்.
தொட்புகளிற்கு:-
சிவா 416 854 5015 (cell) பாலா 647 778 9416 (cell)


வாகன விபத்து
MOTOR VEHICLE ACCIDENT
SKT PARALEGAL SERVICE
CRIMINAL MATTERS
SUMMARY
416.803.5296
Kalakalappu Theesan
கலகலப்பு தீசன்
SK THEESAN
TRAFFIC TICKETS
LICENSED PARALEGAL
sktheesan@gmail.com
MOTOR VEHICLE ACCIDENT
SERIOUSLY INJURED ?
ACCIDENT BENEFITS
PERSONAL INJURY
TRAFFIC TICKETS
DON'T
MISS YOUR TRIAL DATE
LOSE YOUR POINTS
CRIMINAL CONVICTION
PERMANENT RESIDENT
CITIZENSHIP
SPONSORSHIP
CRIME
CRIMINAL CHARGES ?
EXPERIENCED LAWYERS AVAILABLE


இப்பொழுது கிடைக்கிறது
கோடை கால தாகத்துக்கோர் இளநீர்..!
Niru BRAND®
Natural Ingredients!
Coconut Water
Made with
Real pieces of Coconut
COCONUT WATER
JUS DE COCO
MADE WITH REAL PIECES OF COCONUT
PLEASE CHILL BEFORE SERVING
40 Minuk Acres, Scarborough ON M1E 4Y6
Tel: 416 750 1976 | Fax: 416 750 8779 | info@niru.com | www.niru.com
AVAILABLE AT YOUR LOCAL COMMUNITY GROCERY STORE.



















Free Real Estate Class - Call: 416.321.6969











விளம்பரம் பத்திரிகையை இணையத் தளத்தில் வாசிப்பதற்கு
www.vlambaram.com / www.tamilvanakkam.com





